என்றும் உங்களுடன் புத்தகம் - 1


மங்கையர் மலர்

MANGAYAR MALAR ஜூன் 2007 258 பக்கங்கள் ரூ. 18/-





CHOLAYIL
எடுத்து சொல்லுங்கள்
இன்றைய தலைமுறைக்கு மெடிமிக்ஸின் மேன்மையை
MEDIMIX
AYURVEDIC SOAP WITH 18 HERBS
அம்மா சொல்லாம
வேற யார் சொல்லுவாங்க!
தூய தேங்காய் எண்ணெயின் நற்குணங்களோடு
18 மூலிகைகளின் அபூர்வ சங்கமம் மெடிமிக்ஸ் ஆயுர்வேதிக் சோப்



முதலில் படிக்க...

சிறுகதைகள்

குஷி பக்கங்கள்

மருத்துவம்

நெஞ்சில் நிற்கும் தொடர்கள்

அசத்தல் தொடர்கள்

சமையல்



கைவேலை

ஜோதிடம்

பயனுள்ள தொடர்கள்

ஆன்மிகப் போட்டி

ரூ. 10,000 பரிசு

சுயதொழில்



அட்டையில் : லோகி
வண்ணப்படம் :
ஆண்டனி ஸ்ரீதர்

டாபிகல்

அழகோ அழகு



மகளிர் மாத இதழ்!
என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
மலர் : 27 இதழ் : 5 ஜூன் 2007

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

அடுத்த இதழில்...

டாக்டர் **திருப்பூர் கிருஷ்ணன்**

எழுதும்



ஸ்ரீ அன்னை

அருளாசி தொடர் ஆரம்பம்

உஷாவை எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும். ஒண்டுக் குடித்தனக் குடும்பம்! லஞ்ச்பாக்ஸில் அரிசி உப்புமாவை அடைத்துக் கொண்டு, எலெக்ட்ரிக் ட்ரெயின் பிடித்து, காலேஜுக்குப் போவாள். சாயங்காலம் கம்ப்யூட்டர் கிளாஸுக்குப் போய் வந்ததும், 'செல்வி' சீரியல் பார்த்து விட்டு, தூங்கிப் போவாள்.

''ஹவாய் செருப்பு அசிங்கமா இருக்கு! நல்ல செருப்பா வாங்கித் தாங்க!''ன்னு இரண்டு வேளை உண்ணாவிரதம் இருந்து சாதித்துக் கொண்ட அந்தப் பெண்ணுக்கு, பன்னாட்டு நிறுவனத்தில் இருபதாயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தால் என்ன ஆகும்? என்ன ஆகணுமோ அதை விடக் கொஞ்சம் அதிகமாகவே



ஒரு வார்த்தை!

ஆகிப் போனது.

ஒரு ரெக்ஸின் பையில், நான்கு பாலியெஸ்டர் சுரிதார்களை அடக்கிக் கொண்டு, ஹைதராபாத்துக்குக் கிளம்பிய உமாவை, அவளது குடும்பமே கரகமெடுத்துக் கொண்டாடியது.

இருபத்தொரு வயதில் கை நிறைய கரன்ஸி! இளமை துள்ளும் சகாக்கள்.. மாறுபட்ட சூழ்நிலை.. என அதிகபட்ச சுவாரசியங்களுடன் அமைந்திருந்தது உஷாவின் அலுவலகப் பணி.

ஆறே மாதம்தான்! ஆளே அடியோடு மாறிப் போனாள். ஜீன்ஸ் பேண்ட், நிறமேற்றிய கூந்தல், ஊசி முனை ஹீல்ஸ், ஆடம்பரமான செல்ஃபோன் என்று வந்திறங்கிய உஷாவை, அவளுடைய தாத்தாவுக்கே அடையாளம் தெரியவில்லை.

மறு வருஷமே இன்னொரு கம்பெனிக்கு மாறினாள். இந்த முறை மும்பையில் வேலை! இன்னும் அதிக சம்பளம்!

உஷாவின் தயவால், அவளது குடும்பமும் தரித்திரப் பிடியிலிருந்து தப்பியது. ஃபிளாட்டுக்கு மாறினார்கள். உஷாவுடைய அம்மாவின் கழுத்தில் 916 மின்னியது. எல்லாமே சுகமாகத்தான் போய்க் கொண்டிருந்தது. உஷாவுக்கு ஒருசில நண்பிகள் அமையும் வரை!

''இதோ இந்த நொடி மட்டுமே நிஜமானது! இளமை கரைந்து கொண்டேயிருக்கிறது. அதற்குள் எல்லா சுகங்களையும் அனுபவிக்க வேணாமா?'' என்ற கொள்கை உடைய பெண்கள் அவர்கள். ''இது தப்பில்லையா?'' என்று முதலில் தயங்கிய உஷாவால்,

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!
பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்
கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.
பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்
வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
எம். மோகன், ச. கார்த்திகேயன்
தொலைபேசி : 2225 1522,
2225 0623, 2225 1324
தொலைநகல் : 044 - 22251021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்
Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒரு சட்டத்துக்கு மேல் தவிர்க்க முடியவில்லை. “சும்மா சும்பெனிக்கு!” என்று ஆரம்பித்தாள். வெகு சீக்கிரத்திலேயே, பாய்ஃப்ரெண்ட்ஸ், பியர், டிஸ்கொத்தே, பார்ட்டி என்று அல்ட்ரா மாடர்ன் பெண்ணாகிப் போனாள்.

பணம் தண்ணீராகக் கரைந்தது.. கடன் வாங்கினாள். வீட்டுக்குப் பணம் அனுப்ப முடியவில்லை. அடுத்தகட்டமாக, ஆண் நண்பர்கள் சிலர் நெருக்கமாகப் பழகி, உடலளவில் பயன்படுத்தி கைவிட்டனர். சிலர் பணத்தைச் சுருட்டிக் கொண்டு கழற்றி விட்டனர். மற்ற ‘சொஸைட்டி கேர்ள்ஸ்’க்கும் இதுபோன்ற சில அனுபவங்கள் ஏற்பட்டாலும் சட்டையில் ஒட்டிய தூசு போல் தட்டி விட்டு சகஜமாக இருந்தனர். ஆனால் உஷாவுக்குக் குற்ற உணர்வு துளைத்தது. துரோகத்தைத் தாங்க முடியாமல் தற்கொலைக்கு முயல... வேலை போய் விட்டது. சில நாட்கள் மருத்துவமனையில் இருந்துவிட்டு சென்னைக்குத் திரும்பி விட்டாள் அந்தப் பெண். இப்போது நல்ல வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாள்.

உஷாவுக்குக் கிடைத்த அதே வாய்ப்புகள் வலைவிரித்துக் காத்திருக்க, அவற்றில் விழும் பேராபத்தில் நிறைய இளம்பெண்கள் நம்மிடையே இருப்பதைப் பார்க்கிறோம்.

யானை சாப்பிடுகிறதே என்று பூனையும் அதே அளவு சாப்பிட்டால் ஜீரணமாகுமா? அவங்க வாழ்வும் வளர்ப்பும் வேறே! அது தீயசகவாசமாகத்தான் இருக்கணும் என்று இல்லை. ஒவ்வாத சகவாசமாக இருந்தாலும் நமக்கு மூச்சடைக்கும்தான்!

‘சேரிடம் அறிந்து சேர்’னு சும்மாவா சொன்னாங்க?

மேற்படிப்பு, பெரிய நிறுவனத்தில் வேலை என சிறகை விரிக்கும் இளம்பெண்களே.. நீங்கள் அடையும் கூட்டையும் ஆராய்ந்து தேர்ந்தெடுங்க!

சீக்குப் பறவைகள் உள்ள கூண்டில், ஆரோக்கியமான பறவை அடைக்கலம் புகுந்தால், அதற்கும் சீக்குப் பிடிக்கும்தானே? நீங்க சீக்குப் பறவையா மாறிடாதீங்க!

அனுராதா சேகர்

சூப்பர் உமன் ஆகணுமா?

Do you have a pleasing personality?

இந்தக் கேள்வி இடம்பெறாத வேலைக்கான விளம்பரங்கள் மிகவும் குறைவு. இனிய தோற்றம், பார்த்தவுடனே இவரை நம்பலாம். இவரிடம் எல்லா விஷயங்களையும் தெரிவிக்கலாம் என்ற நம்பிக்கை தரும் முகம். இந்தத் தகுதியே இன்று மிக முக்கியமானதாக் கருதப்படுகிறது. எப்படி? என்ன செய்தால் இத் தகுதியை நாம் சொந்தமாக்க முடியும்?



● எந்த நெருக்கடியிலும் புன்னகை மாறாத முகம். இவர்களைத்தான் எல்லோரும் தேடுகின்றனர். ''என்னோடது, எனக்கு எனக்கு மட்டும்...'' இதைக் கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு அடுத்தவர்களையும் உள்ளார்ந்த அன்போடு கவனியுங்கள். அப்போது அன்றலர்ந்த புன்னகை ஒன்று தானாகவே உதடுகளில் குடியேறி விடாதா?

● மற்றவர்கள் நம்மிடம் எப்படிப் பழகணும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அப்படித்தான் நீங்கள் அவர்களோடு பழக வேண்டும். வெளிப்படையாகப் பழகுங்கள். வேஷங்கள் வேண்டாம்.

● மற்றவர்களிடம் உங்களுக்குள்ள அக்கறை மிக மிக முக்கியம். ஒருவரோடு பேசும்போது உங்களைப் பற்றி மட்டுமே அளந்து கொண்டிருக்க வேண்டாமே. மற்றவர்களைப் பற்றியும் அறிய முயற்சி செய்யுங்கள். அதுவும் நல்ல எண்ணத்தோடு இருப்பது மிக மிக அவசியம். அவர்களது அந்தரங்கங்களைத் தோண்டிப் பார்க்கும் முயற்சி ஆகக் கூடாது.

● அது போலத்தான் உங்களை நம்பி ஒரு விஷயம் சொன்னால் அதைப் பாதுகாக்கத் தெரியணும். அடுத்தவரைப் பற்றிய வம்பு தும்பு?! ஐயோ! வேண்டவே வேண்டாம். '' எனக்கு எல்லாம் தெரியும். எல்லோரும் என்னிடம் எல்லா விஷயங்களையும் சொல்லுவார்கள். இந்த எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டி மற்றவர்களின் அந்தரங்க விஷயங்களைக் காற்றில் பறக்க விடுவதா?



● "என் தகுதி என்ன? பதவி என்ன?'' இந்த எண்ணத்தில் எதற்காக எப்போதும் ஒரு கௌரவ முகமூடி? அப்புறம் உங்கள் முகம் புன்னகையற்று சிடுசிடுப்பாக மாறிவிடும். கொஞ்சம் நகைச்சுவையோடு, இல்லை அந்த உணர்வோடு விஷயங்களைக் கையாண்டால்

யாருக்கும் உங்களைப் பிடித்துப் போகும். உங்களைப் பற்றி விளையாட்டாய் வரும் சொல்லடிகளை மலர்ந்த முகத்தோடு ஏற்றுக்கொள்ளும் பக்குவமும் வேண்டும்.

• "ஐயையோ இந்த வேலையா? பாவம்ங்க நீங்க. தொலைஞ்சீங்க, ச்... நான் பாடாப்பட்டிருக்கேன். என்னாலேயே முடியலை. உங்களாலே எப்படி? ம்?" இந்தப் பேச்சு உங்கள் மீது வெறுப்பைத்தான் உருவாக்கும். மாறாக, "இதுதானே? கொஞ்சம் முயற்சி செய்தால் கண்டிப்பாக முடிச்சிடலாங்க" இப்படிச் சொல்வதைக் கேட்பதே இன்பமில்லையா?

• யாரிடம் பேசுகிறீர்களோ அவர்களின் பெயரை அறிந்து கொள்வதும் மறக்காமல் பிறகு குறிப்பிடுவதும் உங்களுக்கு ப்ளஸ் பாயிண்ட். அட நம் பெயரை மறக்காமல் இருக்கிறாளே' என்று மகிழ்ச்சி உண்டாகும். பெயரில் கூட திரு, மேடம் போன்ற மரியாதை அடைமொழிகளை மறக்க வேண்டாம்.

• "அச்சச்சோ.... அந்தப் பெண்



ணிடமா? நானில்லையப்பா. அது எது சொன்னாலும் பாம்பு மாதிரி சீறிக் கொண்டு வரும்'' இப்படி மற்றவர் குறிப்பிடும்படி இருக்கவே கூடாது.

● ''அந்தப் பெண்ணிடம் சொல்வதற்குப் பதில் குட்டிச்சுவரில் போய் முட்டிக் கொள்ளலாம்'' இப்படிச் சொல்லும்படியான அலட்சிய பாவமும் கூடாது.

● முக்கியமாக மற்றவர் சொல்வதைக் காது கொடுத்து முழுமையாகக் கேளுங்கள். பிறகு மறுப்போ ஆமோதிப்போ தெரிவிக்கலாம். உணர்ச்சிவசப்படுதல் கூடாது. சட்டெனக் கோபம் கொள்கிற, எடுத்தெறிந்து பேசுகிற மனோபாவம் இருந்தால் தூக்கி தூர வீசி விடுங்கள். கோபம் வருவது இயற்கை. ஆனால் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளுக்கு ஏற்ப உங்கள் செய்கைகள் இருந்தால் அவை வரவேற்கத்தக்கவையல்ல.

● உங்கள் நட்பை வெளிப்படுத்தக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உடல் நலக் குறைவென்றால் ஃபோன் மூலம் விசாரிப்பது, பிறந்த நாள் போன்றவற்றை மறக்காமல் ஞாபகமாக வாழ்த்துச் சொல்லுவது இவையெல்லாம் மற்றவர்களிலிருந்து உங்களை வேறுபடுத்திக் காட்டும்.

● மரியாதையின் எல்லை தெரிந்து பழக வேண்டும். மற்றவர்களின் மன உணர்வுகளை மதிக்கத் தெரிய வேண்டும். மூட் அவுட்டாகி உள்ள ஒருவரைக் கிண்டலடிக்கவோ, கோபம் கொள்ளச் செய்வதோ விவேகம் அல்லவே. நீங்களும் மன உளைச்சலின் பிடியில் இருந்தால் மௌனமாய் இருப்பதே சிறந்தது.

● தவறுவது, தப்பு செய்வது எல்லாமே மனித இயல்புகளே. குற்றமே செய்யாதிருக்க நாம் ஒன்றும் தெய்வப் பிறவிகள் அல்ல. ஆனால் குற்றமிழைத்தவுடன் மன்னிப்புக் கோருவது உன்னத செயலாகும். உதவிகளுக்கு நன்றி தெரிவிப்பது அதைவிடச் சிறந்தது.

● 'நான் இல்லாவிட்டால் எதுவுமே நடக்காது' இந்த சிந்தனையே வேண்டாம். யார் இருந்தாலும் இல்லாவிடினும் எல்லாமே நடக்கும். எனவே அலட்டலே இல்லாமல் அமைதியாக அதே சமயம் தன்னம்பிக்கையுடன் இருங்க!

''டூ யூ ஹாவ் எ ப்ளீஸிங் பர்சனாலிடி?'' என்று கேட்டால், ''எஸ்... எஸ்!'' என்று அழுத்தமாகச் சொல்லுங்கள். ஏன்னா... நீங்கதான் சூப்பர் உமனாச்சே!

- சாமனி
எடமலைப்பட்டிப்புதூர்.



ஒன்ஸ்மோர்

கோடைக்காலத்தில் அடிக்கடி மோர் பருகுவோம். பெருங்காயம், உப்பு, இஞ்சி விழுது, கொத்துமல்லித் தழை சேர்த்து அருந்து துதானே வழக்கம்?

அடுத்த முறை ஊறுகாய்ப் பொடி (வெந்தயம் + கடுகு வெறுமனே வறுத்துப் பொடி செய்தது) + அங்காயப் பொடி (இதனை சுண்டைக்காய்ப் பொடி என்றும் கூறுவர்) சேர்த்துக் கலக்கிச் சாப்பிடுங் கள். சுவையும் வித்தியாசமானதாக இருக்கும்! வெந்தயம் - குளிர்ச்சி, சுண்டைக் காய் - வயிறு சம்பந்தப்பட்ட அஜீரணங்களை குறைக்கும் என்பதால், ஆரோக்கியத்துக்கும் நல்லது!

- அப்ஸரா கோசகன், நங்கநல்லூர்.

மறக்காதீங்க மங்கையர் மலர் வாசகியரே...

கல்கி
தரம் நிரந்தரம்

வாசகர் சந்திப்பு

சனிக்கிழமை - 09.06.07
சேலம்
இடம்: ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்,
ஸ்ரீ சுகவனேஸ்வரர்
கோயில் அருகில், சேலம் - 1.
தொலைபேசி: 2451494
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 10.06.07
வேலூர்
இடம்: டார்லிங் ரெஸிடென்ஸி,
118, ஆபீஸர்ஸ் லைன், வேலூர்-1.
தொலைபேசி: 2213001
நேரம்: மாலை 4.25

சனிக்கிழமை - 23.06.07
கும்பகோணம்
இடம்: ஹோட்டல்
வெங்கட்டரமணா (மாடி),
டி.எஸ்.ஆர். பெரிய தெரு,
காந்தி பார்க் அருகில்
நேரம்: மாலை 4.25

ஞாயிற்றுக்கிழமை - 24.06.07
திருச்சி
இடம்: ஹோட்டல் அஜந்தா,
மத்தியப் பேருந்து நிலையம் அருகில்
நேரம்: மாலை 4.25

உங்கள் ஊரில் கல்கி

அன்பு வாசகர்களே!

கல்கி நிறுவனத்திலிருந்து மதிப்புமிக்க வாசகர்களாகிய உங்களைச் சந்திக்க உங்கள் ஊருக்கே வருகிறது கல்கி ஆசிரியர் குழு. இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு அவசியம் கலந்துகொண்டு, 'கல்கி' வார இதழைப் பற்றிய உங்களுடைய மேலான யோசனைகளையும் கருத்துகளையும் பரிமாறி, ஆக்கபூர்வமான யோசனைகளின் மூலம் கல்கி இதழை மேலும் மிளிரச் செய்ய உதவ வேண்டுகிறோம்.

இதயத்தை இதமாக்கும் 'கலகல' நிகழ்ச்சிகளும், இன்ப அதிர்ச்சியூட்டும் பரிசுப் போட்டிகளும் உண்டு.

அவசியம் கலந்துப்பீங்கதானே!

- ஆசிரியர் குழு

விரைவில் மற்ற ஊர்களிலும்...!



கிள்ளாப்பரண்டி கீப்பரண்டி!

சின்னத் திரையில் ஒரு விளம்பரம் *'கிள்ளாப்பரண்டி; கீப்பரண்டி'* என.

எனது பாட்டியுடனும், முத்துலட்சுமி அம்மாவுடனும் விளையாடிய ''கிள்ளாப்பரண்டி - கீப்பரண்டி'' மற்றும் ''ஒருப்பட்டை இருப்பட்டை'' விளையாட்டுக்கள் நினைவுக்கு வந்து விட்டன.

அது என்ன என்கிறீர்களா? வாங்க விளையாடலாம்.

கிள்ளாப்பரண்டி - கீப்பரண்டி. இந்த விளையாட்டுக்கு இருவரோ, அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ வட்டமாக அமர்ந்து, இரண்டு உள்ளங்கைகளையும் கீழே கவிழ்த்து வைக்க வேண்டும். விரல்களைச் சற்று அகற்றி வைத்துக் கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் விளையாட்டு என்றாலும், பெரியவர்களும் உடன் அமர்ந்து சொல்லிக் கொடுப்பார்கள்; விளையாடவும் செய்வார்கள்.

ஒவ்வொரு விரலையும் பூப்போல, இலேசாகக் கிள்ளி ''கிள்ளாப்பரண்டி; கீப்பரண்டி; மாப்பரண்டி; மல்லிகை மொட்டு; முருக்கம்பிச்சி பிச்சவனே; ஆனி மாம்பழம் தின்னவனே; அன்னானி

மாம்பழம் தின்னவனே; அப்புச்சி; குப்புச்சி; விரலை மடக்கு'' என்று கூறி, ஒவ்வொரு விரலாக மடக்க வைப்பார்கள். கடைசியாகக் கூறும் ''விரலை மடக்கு'' என்பதை வி-ர-லை-ம-ட-க்-கு என்று ஒவ்வொரு வார்த்தைக்கு ஒரு விரல் என்ற கணக்கில், நீட்டி முழக்கி, ஸ்லோமோஷனில் சொல்வதைப் பார்க்க வேண்டுமே. சிறுசுகளுக்கு மிகவும் த்ரில்லிங்காக இருக்கும். பத்து விரல்களையும், முதலில் மடக்கியவர்கள் ஜெயித்தவர்கள். பிறகு கைகளை எடுத்து விடலாம். அப்போது அந்த முகங்களைப் பார்க்க வேண்டும். வாயெல்லாம் பல்லாக இருக்கும்.

மிகவும் சிறிய குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக, அவர்களது பத்து விரல்களையும் சீக்கிரமாக மடக்க, கொஞ்சம் கோல்மாலும் செய்வார்கள் பெரியவர்கள்!

பலவித மெட்டுப் போட்டு விளையாட்டை சுவாரஸ்யமாக்குவார்கள். சூப்பராக இருக்கும்.

ஒருப்பட்டை - இருப்பட்டை ஒருப்பட்டை; இருப்பட்டை

இந்த விளையாட்டுக்கும், வட்ட வடிவாக, எல்லோரும் இரு கால்களையும் மடக்கி சம்மணமிட்டு உட்கார வேண்டும். ஒவ்வொரு தொடையிலும் இலேசாகத் தட்டித் தட்டி, கீழ்க்கண்டவாறு சொல்ல வேண்டும் :

''ஒருப்பட்டை - இருப்பட்டை; ஓராம் மாசம்; சுக்கும் திப்பிலி; செவந்திய மாலை; பூவாம் - பூவாம் பட்டணமாம்; பூச்சொரிந்த பட்டணமாம்; காவேரியம்மா - கஸ்தூரியம்மா; காலை மடக்குடி காமாட்சி; மீனாட்சி; கல்யாணி.''

இந்த விளையாட்டிலும் ''கல்யாணி'' என்ற கடைசி வார்த்தையை க---ல்---யா--ணி--- என்று ஒவ்வொரு எழுத்தாக நீட்டி முழக்கிச் சொல்வார்கள். ''ணி'' என்று முடியும்போது, அந்தக் காலை மடக்கிக் கொள்ள வேண்டும். மறுபடியும் சுற்றிச் சுற்றி விளையாடி, இரு கால்களையும் மடக்க வைப்பார்கள். முதலில் மடக்கி, எழுந்து நிற்கும் சிறுசுகளின் முகங்கள் பூப்போல மலர்ந்து காணப்படும்.

- ஆர். மீனலதா,
மும்பை - 28.



நான் ரசித்த வார்த்தை ஜாலம்!

'ராஜ்' டீவியில் 'அகட விகடம்' நிகழ்ச்சியில் விடாமுயற்சி பற்றி பலரும் பேசினார்கள். தலைமை வகித்த அப்துல் காதர், தீர்ப்பு கூறிய போது, ''நான் பள்ளியில் படிக்கும் போது என்னுடன் ஒரு திக்குவாய் பையன் படித்தான். அவனை பல மாணவர்கள் பரிகாசம் செய்தனர். சிலர் பரிதாபப்பட்டனர். அந்தக் குறையைப் போக்கிக் கொள்ள பல பயிற்சிகள் செய்தான். தனியாக ஒரு இடத்துக்குப் போய், பல மணி நேரம் இரைந்து பேசிப் பேசி குறையைக் கொஞ்சம், கொஞ்சமாகப் போக்கிக் கொண்டான். பிறகு சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்றான். தற்போது பெரிய வழக்கறிஞர் ஆகிவிட்டான்.

அம் மாணவனை நான் சந்திக்கும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவனிடம் நான் ''பள்ளியில் நீ ஒரு திக்குவாய். இப்பொழுது நீதிக்கு வாய். நீ விடாமுயற்சிக்கு நல்ல எடுத்துக்காட்டு'' என்று பாராட்டினேன் என்று சொன்னவர் முயற்சியே சிறந்தது எனத் தீர்ப்பளித்தார்.

- ராதா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம் - 1

அடிச்சாங்க பரிசு!

'ஆஹா பரிசு' (மே) போட்டியில், 'டிக்கெட் ரிசர்வ் பண்ண நிறைய கவுண்டர்கள் வைத்திருக்கும் ரயில்வே நிர்வாகம், அதை ரத்து செய்ய வருவோருக்கென்று தனியாக ஒரு கவுண்டர் வைத்தால் உபயோகமாக இருக்குமே!' என்ற குறிப்பை எழுதி, புடைவையைப் பரிசு பெறுகிறார் மீனா ரெங்கநாதன், சென்னை - 33. அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் புடைவை பரிசு பெறுகிறார் ஜெயலக்ஷ்மி, லோதி ரோடு காம்ப்ளக்ஸ், புதுடில்லி-3.



ஆஹா பரிசு!

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் புடைவை பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் புடைவை பரிசு! 'ஜூன் - ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி : 15.06.2007

பெட்டிக்கதைப் போட்டி! வாசகர் விருப்பம்

பெட்டிக்கதைகளை எழுதிக் குவித்து வரும் வாசகர்களுக்கு நன்றி! இந்த இதழில் மூன்று கதைகள் பிரசுரமாகியுள்ளன.

நீங்கள் எழுதும் கதைகளிலிருந்து, இந்த மாதம் மூன்று பெட்டிக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகும். பிரசுரமாகும் கதைகள் தலா ரூ. 150/- பரிசு பெறும்.

சிம்பிள் கண்டிஷன்ஸ் : 100 வார்த்தைகளுக்கு மிகாமல், சொந்த கற்பனையில், பெயர், முழு விலாசம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் இன்லாண்ட் லெட்டரில் மட்டுமே எழுதி 'பெட்டிக்கதைப் போட்டி' என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

MULTIMEDIA

50% M-SAT SCHOLARSHIP



M-SAT Test on 1st July (Sunday)
Just 20 Minutes

DIPLOMA COURSES

- 2D & 3D Animation
- Digital Pre-Press
- E-Publishing
- Multimedia & Graphics
- Digital Video Production

Maya

Collect Your FREE Admit Card Today

CSC® COMPUTER EDUCATION
Softview™ Visual Communication

ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

Ambattur	26570847	Thiruvotriyur	25993712	Palayamkottai	0462-2579082
Anna Nagar	26222677	Vadapalani	23762960	Sivakasi	04562-221941
Avadi	26377349	Kancheepuram	27230620	CBE-Gandipuram	0422-4373796
Mylapore	24980155	Vellore	0416-2210009	CBE-Peelamedu	0422-2576380
Metha Nagar	23742471	Thiruvallur	27665835	CBE-Saibaba Cly	0422-2442874
O.Washermanpet	25974657	Pondicherry	95413-2341766	Mettupalayam	04254-222996
Parrys	25393783	Cuddalore	04142-224968	Salem	0427-2332187
Perambur	25581364	Aruppukottai	04566-223656	Erode	0424-4020980
Poonamalle	26491653	Dindugal	0451-2441893	Trichy	0431-6523732
Purasaivakkam	26403196	Karaikudi	04565-236348	PuduKottai	04322-221027
Red Hills	26322164	MDU-Simmakkal	0452-2330346	Thanjavur	04362-273718
Saidapet	24312593	MDU-Narimedu	04522-523098	Karur	04324-259277
Selaiyur	22390002	MDU-AnnaNagar	0452-2532937	Pattukottai	04373-258583
Tambaram	22265887	Nagercoil	04652-402121	Virudhunagar	04562-269272

Creative Jobs & Career

காய்க்கலையா? கல்லைப் போடுங்க!

மே மாத இதழில் தில்லி வாசகி காய்க்காத மரத்தின் அருகில் நின்று 'வெட்டிவிட வேண்டியது தான்' என்று சொன்ன அடுத்த ஆண்டே கொத்து, கொத்தாகக் காய்த்ததாக எழுதியிருந்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் எங்கள் தோட்டத்தில் தென்னை, மா, பலா, எலுமிச்சை என பல மரக்கன்றுகள் நட்டோம். எல்லாம் நன்றாக வளர்ந்து பூத்து, காய்த்து, பலன் தந்தன. ஆனால் எலுமிச்சை மரம் மட்டும் வெறுமனே தழையுடன் நின்றது. இன்னும் சொல்லப் போனால் அது எலுமிச்சையா, சாத்துக்குடியா என்று கூட சந்தேகமாக இருந்தது. அறுந்த செருப்பைக் கிளையில் கட்டினால் காய்க்கும் என்று யாரோ சொல்ல, பிய்ந்து போன செருப்புகளைக் கட்டி வைத்தோம். அந்தச் செருப்பு மரம் கண்டுகொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் கோபத்தில் அதற்குத் தண்ணீர் கூட விடவில்லை.

சில வருடங்களுக்குப் பிறகு வீட்டில் ஏதோ ஒரு பகுதியை இடித்த போது செங்கல் போன்ற இடிபாடுகளை வேறு இடமின்றி காய்க்காத மரத்தின் அடியில் போட்டு வைத்தோம். அதற்குப் பிறகு ஒரு நாள் தோட்டத்தைச் சுற்றி வந்தபோது ஒருவித மணம், இடிபாடுகள் மேல் வெள்ளையாகப் பூவிதழ்கள்! அண்ணாந்து பார்த்தால் சின்னச் சின்ன காய்களும் பூக்களுமாக மரம் குலுங்கியது. அப்போது அங்கு வந்த உறவுக்காரர் ஒருவர்,

''காய்க்காத மரத்துக்குக் கல்லு, பூத்த மரத்துக்கு புட்டுன்னு கேட்டதில்லையா? வேர் கனத்தால் மரம் கனக்குமே அதனால்தான் காய்த்திருக்கு'' என்றார். தென்னை பூத்தால் புட்டு செய்து படைப்பதும் உண்டு



என்றும் கூறியதைக் கேட்ட எங்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

சொல்ல மறந்துட்டேனே... கடைசியில் அந்த மரம், ''நான் எலுமிச்சை இல்லை, சாத்துக்குடி'' என்று காட்டி விட்டது.

- சங்கரி வெங்கட், சென்னை - 63.

எஸ். குமுதவல்லி, விழுப்புரம் - 2.

வெயில் 109 டிகிரி கொளுத்தும் இந்த வேளையில் வெளியே தலை காட்ட முடியவில்லை. 'மண்ட காஞ்சு போச்சு'ன்னு சொல்வாங்களே, அந்த நிலைதான் எல்லோருக்கும். சருமம் ரொம்பவே உலர்ந்து போகுது. இதுக்கு வீட்டிலேயே செய்யக்கூடிய அற்புத மான ஃபேஷியலைச் சொல்லுங் களேன்.

உங்களுக்குத் தேவையான பொருள்கள் ½ கப் பார்லி வாட்டர், உலர்ந்த திராட்சை யிலிருந்து எடுக்கும் எக்ஸ்ட்ராக்ட் ½ கப், ஆப்பிள் பழ பல்ப் - ¼ கப், ஆரஞ்சு பழ பல்ப் - ¼ கப், இளநீர் - ¼ கப், முல்தானி மிட்டி - 4 தேக்கரண்டி.

முதலில் முகத்தை நன்றாகக் கழுவுங் கள். சோப் உபயோகிக்க வேண்டும். (அதற் குப் பதிலாக கடலை மாவோ அல்லது பயத்த மாவோ கொண்டு முகத்தைக் கழுவ லாம்).

பார்லி வாட்டரை ஒரு பஞ்சினால் தோய்த்து முகம் முழுவதும் தடவவும். இது உடனே காய்ந்து விடும். மீண்டும் ஒருமுறை செய்யவும். இது முகத்தில் வரும் வியர்க்குருவைப் போக்க மிகவும் உதவும். உலர்ந்த திராட்சை எக்ஸ்ட் ராக்ட்டை ஒரு பஞ்சில் நனைத்து அதன் மேல் பூசவும். இதில் உள்ள ஆல்ஃபா ஃஹைடிராக்சி ஆசிட் முகத்தைப் பளிச் சிடச் செய்யும். அடுத்ததாக ஆப்பிள் மற் றும் ஆரஞ்சு பல்ப் இரண்டை யும் நன்கு மசித்து முகத் தில் ஒரு 'காஸ்' (Gauze) துணியை வைத்து விட்டு, அதன் மீது வைக்கவும். அதன் சாறு உள்ளே இறங்க 10 நிமிடங்கள் ஆகும். பின்பு, 'காஸ்' துணியை எடுத்து விட்டு முகத்தை மேல் நோக்கியும், வட்ட வடிவமாகவும் மஸாஜ் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்யும் போது சருமத்தில் உள்ள இறந்த செல்கள் அகலும். சருமம் புதுப்பிக்கப்படும்.

முகத்தைக் குளிர்ந்த நீரில் துடைத்து விட்டு, ¼ கப் இளநீரில், 2 தேக்கரண்டி முல்தானிமிட்டியை கலந்து ஒரு 'ப்ரஷ்' கொண்டு, முகம், கழுத்து மற்றும் கை களிலும் கூட பூசவும். அரை மணி நேரம் ஊற விடுங்கள். சருமம் மிகவும் குளுமை யாகிவிடும். அதன் பிறகு முகத்தை (கழுத்து, கைகளையும்) குளிர்ந்த நீரில் கழுவுங்கள். உங்கள் முகம் இப்பொழுது பளிச்சோ பளிச்.

நிறைய இளம்பெண்களுக்கு இப் பொழுதுள்ள பிரச்னை முன் கழுத்து கறுப்புதான். மேற்கூறிய இந்தப் பழ சிகிச்சையைக் கழுத்துப் பகுதிக்கும் சேர்த் துச் செய்யுங்கள். நல்ல பலன் கிடைக் கும். இந்தச் சிகிச்சையை வாரம் ஒருமுறை கூட இந்தக் கோடை முடியும் வரையில் செய்ய லாம்.

நளினி ரகுராம், தேவகோட்டை.

அழகு சிகிச்சைகளில் இப்பொழு துள்ள லேட்டஸ்ட் என்ன?

தினமும் ஒரு கிரீமோ, ஷாம்பூவோ புதி தாக அறிமுகமாகிக் கொண்டேதான் இருக் கிறது. எல்லா இளம்பெண்களும் மிகவும் விரும்பி செய்து

ஜிலு ஜிலு ஃபேஷியல்!




கொள்ளும் சிகிச்சை 'சுப்ரீம் ஸ்ட்ரெயிட்' என்ற முடியை நிரந்தரமாக நீட்டாகவும், பளபளப்பாகவும் மாற்றும் சிகிச்சைதான். ஸ்கூல் படிக்கும் பருவத்திலிருந்து அறுபது வயது வரை அனைவரும் ஆசைப்படும் சிகிச்சை, சமீபத்தில் இது ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

இதைச் செய்வதனால் முகத்துக்கு புதுப் பொலிவு உண்டாகிறது. தினமும் முடியைச் சிக்கெடுத்து வார வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இந்தச் சிகிச்சைக்குப் பிறகு முடி சிக்காவதேயில்லை. முடி உதிர்வோ அல்லது வேறு பக்கவிளைவுகளோ ஏற்படாது. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது உங்கள் முடி - '0' '1' '2' வரிசையில் எந்த வகையென்றுதான். இதைச் செய்ய 3 -4 மணி நேரம் ஆகும். மிகவும் டல்லான முகம் கூட ஜோதிகா, அசின், த்ரிஷா முகம் போல மாறிவிடுவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இந்தச் சிகிச்சை அநேகம் பேருக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது.

அதே போல, முகத்தில் உள்ள கரும் புள்ளிகளை அகற்ற 'மைக்ரோ டெர்மாப்ரேஷன்' என்ற அலுமினியம் ஆக்ஸைட் கிரிஸ்டல்ஸ் கொண்ட சிகிச்சைக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

சாந்தி ஜெயராமன், பொம்பூர்.

வீட்டில் உள்ள பொருள்களை வைத்து எப்படி என்ன அழகுபடுத்திக் கொள்ளலாம்?



அழகுக்கலை நிபுணர் வசுந்தரா

வீட்டில் உள்ள பொருள்கள், எந்த சிகிச்சைகளுக்கு நலன் தரும் என்று பட்டியலிடுகிறேன். செய்துபார்த்துப் பயன் அடையலாம்.

1. தக்காளி - தக்காளி ஜூஸ் 2 டீஸ்பூன் எடுத்து முகம் மற்றும் கழுத்தில் தடவி, 10 நிமிடங்கள் ஊறிய பிறகு கழுவினால் முகம் பளிச்சிடும்.

2. வெந்தயம் - வெந்தயத்தை இலேசாக சூடாக்கி மிக்ஸியில் அரைத்து (4 தேக்கரண்டி அளவு) வெந்நீரில் ஊறவைக்கவும். நன்கு ஊறிய பிறகு, அதனுடன் ¼ கப் தயிர் கலந்து தலையில் தடவி, 15 நிமிடங்கள் ஊறிய பிறகு அலசலாம். பொடுகு உடனே நீங்கும்.



பாரம்!



"வயசு ஆச்சுன்னா டாக்டர், மருந்து செலவுகள் ஜாஸ்தி. மருந்து மட்டுமே மாசம் ஆயிரம் ரூபாய் ஆகுது" என்றார் பேச்சுவாக்கில் அப்பா.

தூக்கி வாரிப்போட்டது சங்கரனுக்கு.

இதுவரை பணம், செலவுன்னு தன்னிடம் பேசாதவர், இப்ப எதுக்கு செலவு பத்திப் பேசறார்? ஒருவேளை மாசா மாசம் பணம் கேட்பாரோ? யோசனையோடு மனைவி சுதாவைப் பார்க்க "ஜாக்கிரதை" என்றது அவள் பார்வை.

பார்வைகள் பரிமாற்றம் அம்மாவுக்கு உரைத்தது. "அதனாலதான் யோசிச்சு, உனக்கும் சுதாக்கும் மெடிக்கல் இன்ஷ்யூரன்ஸ் எடுத்து, என் காலம் வரை நானே கட்டலாம்னு இருக்கேன்... இதில கையெழுத்துப் போட்டு வைப்பா" என்று விண்ணப்பத்தைக் கொடுத்து விட்டு அப்பா எழுந்து போனார்.

சங்கரன் பிரமிக்க, சுதாவுக்கு முகத்தில் பூரிப்பு. அம்மாவுக்கு மட்டும் ஏதுவோ புரிந்து, மனசு வலித்தது.

- பரிமளா கோபால், ஒரிஸ்ஸா.

3. காபி பவுடர் - நல்ல ஸ்டராங்கான காபி டிகாக்ஷனை முடியில் படுமாறு தடவி 10 நிமிடங்கள் ஊறிய பிறகு அலசினால், முடி கறுப்பாகவும், மினு மினுப்பாகவும் தோற்றமளிக்கும்.

4. உருளைக்கிழங்கு - ஓர் உருளைக் கிழங்கை, பச்சையாகத் துருவி சாறு எடுத்துக் கொள்ளவும். அதனுடன் 2 டீஸ்பூன் டீ டிகாக்ஷனைக் கலந்து வைத்துக் கொள்ளவும். சுத்தமான பஞ்சை (இரண்டு) அதில் நனைத்து கண்களின் மீது வைத்துப் பாருங்கள். கருவளையம் இருக்குமிடம் தெரியாமல் மறையும்.

5. தேன் - தேன் சிறந்த மருந்து மட்டுமில்லை, ஒரு சிறந்த அழகு சாதனப் பொருளும் கூட. தூய தேனை முகத்தில், முடியில் படாமல் தடவுங்கள். (இது நல்ல மாய்ஸ்சரைஸர்). 20 நிமிடங்கள் ஊறிய பிறகு இளஞ்சூடான நீரினால் முகத்தைத் துடைக்கலாம். இரண்டு - மூன்று வயது குறைந்தது போலத் தோற்றமளிக்கும் உங்கள் சருமம்.

6. ஐஸ் வாட்டர், ஐஸ் க்யூப் - ஐஸ் வாட்டர் அல்லது அல்லது ஐஸ் க்யூபை முகத்தில் தினமும் 5 நிமிடங்கள் தடவினால், என்ன வயதாகிறது என்று தெரியாமல் ஏமாற்றலாம். இது பல ஹாலிவுட் நடிகைகளின் அழகு ரகசியம்.

7. பால் - பாலில் உள்ளது லாக்டிக் ஆசிட். கை, கால்கள் சொரசொரப்பாக இருந்தால், ½ கப் பாலை (காய்ச்சாத பால்) கைகளிலும், கால்களிலும் தடவி, அரை மணி நேரம் ஊறிய பிறகு கழுவினால் சொரசொரப்பு நீங்கி, மிருதுவாகும்.


இத்தனை மாதங்களாக வாசகியரின் கேள்விகளுக்கு அழகாகப் பதில் தந்து உதவிய அழகுக் கலைஞர் வசந்தராவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறோம். (ஆர்.)

ஜீபூம்பா வீடுகள்!



வாடகை வீடு, சொந்த வீடுகள்னா தெரியும். 'ஜீபூம்பா' வீடுகள் பற்றி கேள்விப்பட்டிருக்கீங்களா? 'ஸ்மார்ட் ஹோம்' என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த வீடுகளில் அப்படியென்ன ஸ்பெஷல்?

வீட்டின் கதவுகள் தாமாகவே திறந்து மூடும்; விளக்குகள் தாமாக இயங்கத் துவங்கும்; டிவிடி பிளேயர் தானாக பாட ஆரம்பித்ததும் விளக்குகள் அந்தச் சூழலுக்கு ஏற்ப ஒளியைக் குறைத்து கொள்ளும். குப்பைத்தொட்டிகள் தம்மைத்தாமே சுத்தப்படுத்திக் கொள்ளும், குளிர்சாதனப் பெட்டி சுயமாக ஸ்டாக் எடுத்துக் கொள்ளும்; மெழுகு வர்த்தி தன்னைத் தானே ஏற்றிக் கொள்ளும், டோர் ஸ்க்ரீன்கள் தாமாகவே மூடித் திறக்கும், வாசல் கதவுகள் வாட்ச்மேன் இன்றியே தானாகவே திறந்து, வருகின்ற வாகனத்தை உள்ளே விடும். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். இன்னும் நிறைய நிறைய ஜீபூம்பாக்கள்...



இது கற்பனையோ, மாயாஜாலக் கனவோ அல்ல. அமெரிக்கா, ஐரோப்பியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் தற்சமயம் பிரபலமாகிக் கொண்டு வரும் 'தானியங்கி வீடுகள்'தான் இத்தனை நவீனமயமான கணினிமயமாகி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

மின்சாதன இயக்கங்கள் அனைத்தும் 'டச் ஸ்க்ரீன்' என்று சொல்லப்படும் தொடு திரையில் பொருத்தப்பட்டு விடுவதால் நம் விரல்கள் அதைத் தொட்டால் போதும். மின் சாதனங்கள் உயிர் பெற்று இயங்கத் துவங்கும். அருகிலுள்ள பெரிய மால்களில் உள்ள கணினியில் அதனுடைய மொத்த இயக்கங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். நமக்குத் தேவையான இயக்கங்களை மட்டும் நாம் பெற்றுக் கொண்டு அதற்கு உண்டான கட்டணத்தைச் செலுத்தினால் போதும். அனைத்து இயக்கங்களையும் பெற விரும்பினால் அதற்குரிய கட்டணம் 3,50,000 திர்ஹம் வரைக் கூடப் போகலாம். குறைந்த கட்டணம் என்று சொல்லப் போனால் 35,000 திர்ஹம் ஆகும்!

- **ஜீனத் ஷாஹிதா பஷீர், கீழக்கரை.**


கஸ்தூரியின் பாரம்பரியமிக்க தரம் என்றென்றும் நிரந்தரம்
கஸ்தூரி கைத்தறி சேலைகள்
புதிய
கோவை காட்டன்
சில்க் காட்டன்
பத்திக் பிரிண்ட்
செட்டி நாடு காட்டன்
சுடிதார் மெட்டீரியல்
பொள்ளாச்சி காட்டன்
கோரா சில்க்
பாலி காட்டன்
காஞ்சி காட்டன்
வேஸ்டிகள்
Mfrs. :
Rtn.P.K.C.Paramasiven
Sri Kasthuri & Coy
45/163,S.S.Kovil street,Pollachi-641 001.
PH: Off:(04259) 227695,228106 Res : 235899

நம் வீட்டில் அன்றாடம் உபயோகிக்கும் பூஜைப் பொருள்கள், விளக்குகள், நகைகள் ஆகியவற்றைச் சுத்தம் செய்யக் கூட, சிக்கனமான, சேதமில்லாத அல்ட்ராசானிக் (ultrasonic) தொழில்நுட்பம் வந்து விட்டது! பித்தளை, வெள்ளிப் பொருள்களை நீடித்த பளபளப்புடன் வைக்கும் தொழில் நுட்பத்தில் தேர்ந்தவரான 'ஸ்மார்ட் கிரியேஷன்ஸ்' உரிமையாளர் பங்கஜ் பந்தாரி... வாசகர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்கிறார்.

எம். பி. சந்திரமோகன், புதுப்பேட்டை.

நான் ஒரு கோயிலில் பணிபுரிகிறேன். இங்குள்ள பஞ்சலோக விக்கிரகங்களைச் சுத்தம் செய்ய புளி, பாத்திரம் தேய்க்கும் பவுடர் உபயோகிக்கிறேன். அடிக்கடி அபிஷேகம் செய்ய வேண்டியிருப்பதால் எப்படி விக்கிரகங்களைப் பாதுகாப்பது?

முதலில் விக்கிரகங்களைச் சுத்தம் செய்து முறையான பாலிஷ் (professional polishing) போடவும். இந்த பாலிஷ் நிலைத்து நிற்க, லேக்கர் ட்ரீட்மெண்ட் தர வேண்டும். (polyurythene clear laquer) என்பது ஒரு பெட்ரோலியப் பொருள். மரச் சாமான் மேல் வார்னீஷ் எப்படி பளபளப்புத் தருகிறதோ அதைப் போலச் செயல்பட்டு காற்றின் ஈரப்பசையினால் விக்கிரகம் மங்கிப் போகாமல் பாதுகாக்கிறது. லேக்கர் ட்ரீட்மெண்ட் தொழில்நுட்பம் தெரிந்தவர் மூலம் தான் செய்ய வேண்டும். லேக்கர் போட்டபின் ஒரு நாள் முழுதும் சூரிய ஒளியில் விக்கிரகங்கள் காய வேண்டும். முக்கியமாக ஈரம் இல்லாத இடத்தில் காய வைக்க வேண்டும். இப்படிச் செய்தால் எத்தனை அபிஷேகம் செய்தாலும் விக்கிரகம் மங்கிப் போகாது.

பாமதி நாராயணன், பெங்களூரு மற்றும் டி.டி. கல்யாணி, சென்னை - 61

நான் பூஜை செய்வதற்காக சிறு சிறு விக்கிரகங்களை உபயோகித்து வருகிறேன். எப்படி தினமும் பளபளப்பாக வைத்துக் கொள்வது?

வீட்டிலும் மிகக் குறைந்த அளவில் லேக்கர் கோட்டிங் (laquer coating) செய்ய

பளபளப்பாய்ப்



பராமரிக்க...

லாம். இரண்டு அங்குல உயரம் கொண்ட விக்கிரகத்துக்கு 15 ரூபாய் செலவுதான் ஆகும். ஆனால், இதைக் கடைகளில் செய்வதுதான் சிக்கனம். ஏனெனில் லேக்கர் ஒரு டப்பா விலை 500 ரூபாய் வரை ஆகும். கடைகளில் லேக்கர், தின்னர் மற்றும் தேவையான ரசாயனங்கள் இருக்கும். ஐந்து வருடங்களுக்குப் பளபளப்பு மங்கவே மங்காது.

புஷ்பா நரசிம்மன், மேடவாக்கம்.

பித்தளை விளக்கு மற்றும் விக்கிரகங்களுக்கு கோல்டு கோட்டிங் கொடுக்கும் போது எந்த விகிதத்தில் தங்கம் சேர்க்கப் படுகிறது? எத்தனை நாளைக்கு இதன் பளபளப்பு நீடிக்கும்? தண்ணீர் விட்டுக் கழுவலாமா?

கோல்டு பிளேட்டிங் செய்யும் போது 24 காரட் சுத்தத் தங்கம் அந்தப் பொருளின் மீது ஏற்றப்படுகிறது. சுமார் 2 அங்குல விளக்கு என்றால் சாதாரணமாக அரை கிராம் தங்கம் வரை சேர்க்க வேண்டும் என்பார்கள். அது விலை அதிகமாக இருக்கும். அதே நேரம் லேக்கர் கோட்டிங் செய்யும் போது மிக மிகக் குறைந்த அளவு தங்கம் சேர்க்கிறோம். எலக்ட்ரோ பிளேட்டிங் முறையில் செய்வதால் பளபளப்பு பல வருடங்கள் நீடிக்கும். ஐந்து முதல் எட்டு வருடங்கள் வரை நிச்சயமாகச் சொல்லலாம். தண்ணீர் விட்டுக் கழுவலாம். உடனே துடைத்தால் நல்லது.



ஜி.அருணா, நங்கநல்லூர்.

காமாட்சி விளக்கு போன்ற நுண்ணிய வேலைப்பாடு உள்ள பொருள்களின் இடுக்கில் இருக்கும் கறுப்புக் கறையை எப்படி நீக்குவது?

கடையில் பல்தேய்க்கும் பிரஷ் (Tooth Brush) கடின பிரஷ் (Hard Brush)என்று கேட்டு வாங்குங்கள்... (உபயோகிக்கப் பட்ட டூத் பிரஷ் வேண்டவே வேண்டாம்) வெள்ளிப் பாத்திரங்களை, இதமான வெந்நீரில் துளி ஷாம்பூ அல்லது சிறிது சோப்புத்தூள் விட்டு சுத்தம் செய்யுங்கள். துடைத்தபின் புது பிரஷ்ஷில் சிறிது டூத் பேஸ்ட் வைத்து வெள்ளிச் சாமான் இடுக்குகளில் தேய்த்துப் பிறகு சுத்தமான துணியினால் துடையுங்கள்... புதிதாக ஜொலிக்கும்!

விஜயா ஸ்ரீநிவாசன், திருச்சி.

எங்கள் வீட்டுப் பித்தளை பூஜைப் பொருள்களில் பச்சை நிறம் படிந்துவிடுகிறது. என்ன செய்யலாம்?

முதலில் இதமான வெந்நீரில் சோப்பு போட்டு பித்தளைச் சாமான்களை அலசுங்கள். பின் சிறிது வினிகர் அல்லது புளி சேர்த்துத் தேய்த்தால், பச்சை நிறம் ஓடிவிடும்.

உஷா நடராஜன், பம்மல், சென்னை - 75.

எங்கள் வீட்டில் கிணற்று நீர்தான். கொஞ்சம் உப்புக் கரிக்கும். பித்தளை, வெள்ளிச் சாமான்களை கறுப்பாகாமல் பாதுகாப்பது எப்படி?

கொஞ்சம் உப்புக் கரிக்கும் நீர் என்றாலும் சற்றும் உபயோகமில்லை. குடி தண்ணீர் வாங்குகிறீர்கள் அல்லவா? அதில் சுத்தம் செய்ய வேண்டியதுதான்!

தொகுப்பு: **பத்மினி பட்டாபிராமன்**

நூல் அறிமுகம்










உயிரினங்களின் வியப்பூட்டும் செய்திகள் - கவிஞர் க. முனியாண்டி, ஸ்ரீ செல்வ நிலையம், கௌடியாமடம் சாலை, சென்னை - 14. விலை ரூ. 40.00

'இலந்தை மரத்தில் பறவைகள் கூடு கட்டுவதில்லை', 'பிரான்ஸ் நாட்டில் கொசுக்களே கிடையாது', இப்படி, சுவையான தகவல்கள் அடங்கிய சிறு நூல் இது.

பூஜாகால தேவதா உபசார அர்ச்சனை நாமாவளிகள் - பண்டிட் எஸ். எஸ். ராகவாச்சார்யார். திருமகள் நிலையம், சென்னை - 17. விலை ரூ. 96.00

ஸ்ரீ சிவபூஜை, ஸ்ரீ ச்யாமளா பூஜை ஸ்ரீ வேங்கடேச பூஜை - என்று பதின்மூன்று விதமான பூஜை முறைகள் விரிவாகத் தரப்பட்டுள்ளன. பூஜையறைகளில் அவசியம் இடம்பெற வேண்டிய அருமையான தொகுப்பு.





அலுவலக நிர்வாகம் - எஸ். சுந்தர சீனிவாசன், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 40.00

தொழில்துறை, அலுவலக நிர்வாகம் பற்றிய பல அடிப்படையான தகவல்களை எளிமையான நடையில் தந்திருக்கிறார். கலைச் சொற்களின் பட்டியல் எல்லோருக்கும் பயன் தரும்.

விதவிதமான சேமியா மேக்கரோனி நூடுல்ஸ் - ஜார்ஜினா சுந்தசாமி (தமிழில்) பார்வதி கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 33.00

சென்னை, மகளிர் கிறிஸ்தவக் கல்லூரியின் உதவி ஆய்வாளர்கள் ஐவர் உருவாக்கியுள்ள ஐம்பது வகையான சிற்றுண்டி வகைகளின் தொகுப்பு. ஒவ்வொன்றின் கலோரிச் சத்து அளவும் தரப்பட்டிருக்கிறது.

வானவில்லை வளைத்தெடுப்போம் என்.சி. மோகன்தாஸ், மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 13. விலை ரூ. 50/-

'ஒரு பூங்காவனம்... புதுமணம்...' உட்பட இரண்டு நாவல்களின் தொகுப்பு இந்த நூல். அருமையான குடும்பக் கதைகள்.

ஜீவா - வெளிச்சத்தின் விலாசம் - புதுவை ரா. ரஜனி. கிழக்குப் பதிப்பகம், சென்னை - 4. விலை ரூ. 30.00

இலக்கியவாதியாகவும் பத்திரிகையாளராகவும் விளங்கிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களுள் முக்கியமானவராகவும் விளங்கிய ப. ஜீவானந்தம் அவர்களின் வாழ்க்கையின் சுவையான தகவல்கள் அடங்கிய சிறு நூல்.


- **வாசகன்**



என் பேத்தி வெயிலில் விளையாடுவதால் பின்கழுத்து, முழங்கை, முழங்கால், தொடை என அங்கங்கே கறுப்பாக இருக்கும். மீதி இடங்கள் மாந் நிறம். இந்தக் கருமையைப் போக்க என் தங்கை மகள் யோசனை ஒன்று சொன்னாள். இப்போது கருமை நிறம் போய் விட்டது.

பிரட் + ஏதாவது ஒரு எண்ணெய் - 1 டீஸ்பூன், மஞ்சள் தூள், கடலை மாவு (அ) பயத்த மாவு (அ) கோதுமை மாவு 2 ஸ்பூன், கொஞ்சம் பாலாடை (அ) தயிர். எல்லாவற்றையும் நன்றாகக் குழைத்துக் கருமையாக இருக்கும் இடங்களில் நன்றாகக் கொஞ்ச நேரம் காய்ந்தபின் நன்றாகக் கழுவி விட்டால் நாளடைவில் கருமை நிறம் மறைந்து பொன்னிறம் எழில் கூட்டும்!

- கங்கா ராம்நாத், நவி மும்பை.


ஏண்டா சரவணா... ரொம்ப டல்லா இருக்கே?
ரொம்ப ஸாரிம்மா... நா... வந்து.. இப்ப எழுதின எட்டு பேப்பர்லயும் ஃபெயிலாயிட்டேன்!
இதைச் சொல்ல வெட்கமா இல்ல உனக்கு?
எவ்ளோ கஷ்டப்பட்டுப் படிக்க வெச்சோம்... என் கண் முன்னால நிக்காதே! போய்த் தொலை!
படம் : பிள்ளை

டீன் ஏஜ் கவலைகள் 7

தோல்வியால் துவளலாமா?

பரீட்சை தோல்வியாலும், அம்மாவின் வசவுகளினாலும் மனம் வெறுத்த, சரவணன் தற்கொலைக்கு முயற்சி செய்ய, அவனைக் காப்பாற்றி என்னிடம் அழைத்து வந்திருக்கிறார். அவனுடைய அம்மா என்று அறிந்தபோது மனம் பதைபதைத்தது.

''நான் நல்லா படிச்சு நல்ல மார்க் வாங்கணும்னுதான் நினைக்கிறேன்! ஆனா, என் அம்மா எப்போ பார்த்தாலும் என்னைத் திட்டிக்கிட்டே இருக்காங்க. எதுக்கெடுத்தாலும் என் தம்பியோட என்னை கம்பேர் பண்றாங்க. அதனாலேயே எனக்கு படிப்புல ஆர்வம் குறைஞ்சு போயிடுச்சு. வீட்ல இருந்தால்தானே பிரச்னை? பேசாம வீட்டை விட்டு எங்கேயாவது ஓடிப் போயிடலாம்னு தோணுது'' என்று சரவணன் சொல்லவும், பிரச்னையின் தொடக்கம், அதன் விளைவு எல்லாம் எனக்குப் புரிந்தது.

''நீ சொல்வது போல வீட்டை விட்டு ஓடிப் போய்விட்டால் பிரச்னை தீர்ந்து விடுமா? நீ உன்னிடமுள்ள எதிர்மறையான எண்ணங்களை எல்லாம் விட்டு ஒழி. உன்னால் முடியும் என்று நம்பு.

''செமஸ்டரில் எட்டு பேப்பர்கள் அரியர்ஸ் என்பது மிகவும் வருத்தமான விஷயம்தான். ஆனால் கவனமா படிச்சா அடுத்த செமஸ்டரில் நல்ல மார்க் வாங்கி பாஸ் பண்ணலாமே! அடுத்த செமஸ்டரில் இன்னும் எட்டு பேப்பர் கூடுதலா எழுத வேண்டியிருக்கும்; உன்னால் பதினாறு பேப்பர்களை ஒட்டுமொத்தமாகப் படிக்கச் சிரமமாக இருக்கும் என்றால் நான்கு பேப்பர்களை மட்டும் எடுத்துக் கொள். திட்டமிட்டு கவனமுடன் படித்தால் நீ எழுதப் போகும் பன்னிரண்டு பேப்பர்களிலும் உன்னால் பாஸ் பண்ண முடியும். அதனால் உனக்கும் பெருமை! உன் அம்மாவுக்கும் மகிழ்ச்சி!'' என்றேன்.



சரவணனுடைய அம்மாவிடமும் பேசி, உங்கள் மகனை எப்போது பார்த்தாலும் குறைசொல்லி திட்டுவதையும், இரண்டு மகன்களையும் ஒப்பிட்டுப் பேசுவதையும் விட்டுட்டு,

மனநல ஆலோசகர் **சரஸ் பாஸ்கர்**

சரவணனிடம் பாசிடிவாகப் பேசி ஊக்கம் கொடுங்கள். அதற்கு நல்ல பலன் இருக்கும்'' என்றேன்.

அடுத்த செமஸ்டர் பரீட்சை வரை சரவணனுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கினேன். ரிசல்ட் வந்தது. சரவணன் பன்னிரண்டு பேப்பர்களிலும் நல்ல மதிப்பெண்கள் வாங்கி பாஸ் பண்ணி விட்டான். மீதி உள்ள அரியர்ஸ்களை கிளியர் பண்ண இப்போதே படிக்க ஆரம்பித்து விட்டான்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி:** படம் : **ஸ்ரீமரி**

என் இனிய இளம் நண்பர்களே!

இந்த மாதம் பள்ளி, கல்லூரிகளில் பரீட்சை ரிசல்ட் வந்தவுடன் நிறைய மாணவ, மாணவிகள் பாஸ் செய்து, மகிழ்ச்சியாகக் கொண்டாடி இருப்பீர்கள். எதிர்பார்த்த அளவு மார்க் வராமல் போயிருந்தாலோ, உங்களை விட சுமாராகப் படிக்கும் உங்கள் வகுப்பு மாணவர் உங்களை விட அதிகமாக மார்க் வாங்கி இருந்தாலோ சற்று ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும். ஆனால், சரவணன் மாதிரி, பல்வேறு காரணங்களால் பரீட்சையில் தோல்வி அடையும் மாணவ மாணவிகள் பலரும் ரொம்ப மனவேதனை அடைந்திருப்பீர்கள்; அவமானப்பட்டிருப்பீர்கள்; சிலருக்கு, ஒரு வருடம் வீணாகி விட்டதே என்று குற்ற உணர்வு கூட ஏற்பட்டிருக்கும். அதனால் தற்கொலை, ஓடிப் போவது போன்ற எண்ணங்கள் உங்கள் மனதில் பாய்ந்திருக்கும்.

ஆனால் இந்த முடிவு சரிதானா? இதுதான் உங்கள் பிரச்னைக்குத் தீர்வா... யோசியுங்க! பரீட்சையில் தோல்வியடையும்போது, ஏமாற்றம், வேதனை, மனச்சோர்வு, கோபம், குற்ற உணர்வு எல்லாம் இருக்கும் என்றாலும் அதனை உணர்ச்சிபூர்வமாக அணுகாமல், அறிவுபூர்வமாக அணுகுங்கள். தர்க்கரீதியாக யோசித்துப் பாருங்கள். உங்களை நீங்களே ''நான் தேர்வுக்காக முழு கவனம் செலுத்திப் படித்தேனா? எனக்குத் தெரியாத, புரியாத பாடங்களைப் புரிந்துகொள்ளத் தேவையான முயற்சி எடுத்தேனா? தேர்வில் என் முழு அறிவையும் பயன்படுத்தி விடை அளித்தேனா? நான் எழுதியதற்கு உரிய மார்க் கிடைத்ததா?'' என்ற கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் என்ன பதில் கிடைக்கிறது? தேர்வுக்கு முழு முயற்சியுடன் தயார் செய்யாமல், இப்போது தோல்வியடைந்து விட்டால் என்றால் அதற்கு யார் காரணம்? அன்று கஷ்டப்பட்டுப் படிக்காமல் விட்டு விட்டு இன்று வருத்தப்படுவதில் என்ன பலன்? எதில் கோட்டை விட்டோமோ அதில் கவனம் செலுத்தி மறுபடியும் பரீட்சை எழுதி வெற்றி பெறுவது தானே புத்திசாலித்தனம்? அதை விட்டு விட்டு, வீட்டை விட்டு ஓடிப்போவதாலோ, தற்கொலை செய்து கொள்வதாலோ பிரச்னையும், அவப்பெயரும் அகன்று விடுமா? அது உங்கள் குடும்பத்தினருக்கு இன்னும் வேதனையையும், அவமானத்தையும்தானே கொடுக்கும்?



பரீட்சையில் தோல்வி என்பது வாழ்க்கைப் பாதையில் இறுதியான முடிவு அல்ல. அது ஒரு வேகத்தடை மாதிரி. வேகத்தடை வரும் போது அதைக் கவனித்து கடந்து விட்டால் நம் பயணம் தடையின்றி தொடருமல்லவா?

- சரஸ் ஆன்ட்டி

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

ஆன்மிகப் போட்டி-6



1. கங்கையை பூமிக்கு வரவழைக்க கடும்தவம் செய்தவர் யார்?

அ) ருக்மாங்கதன், ஆ) பகீரதன்

இ) பரீட்சித்து ஈ) அம்பரீஷன்

....

2. அன்னத்தை வாகனமாகக் கொண்ட தெய்வம்?

அ) காளி, ஆ) சரஸ்வதி, இ) பார்வதி,

ஈ) காமாட்சி ....

3. லட்சுமணனின் மனைவியின் பெயர் என்ன?

அ) லோபாமுத்திரை ஆ) மாண்டவி

இ) ஊர்மிளை, ஈ) கீர்த்தி ....

4. குசேலன் கண்ணனுக்கு அளித்தது எது?

அ) அவல், ஆ) மாங்கனி, இ) நிலக்கடலை, ஈ) திணைமாவு ....

ரூ. 10,000 பரிசு

வழங்குவோர்



5. சூரசம்ஹாரம் எந்த ஆலயத்தில் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது?

அ) சோம்நாத் ஆ) காசி, இ) பத்ரிநாத், ஈ) திருச்செந்தூர் ....

6. கோபத்துக்குப் பெயர் போன முனிவர் யார்?

அ) வசிஷ்டர், ஆ) ஆங்கீரசர் இ) துர்வாசர் ஈ) காஸ்யபர் ....

7. பத்மபாதர் யாருடைய சீடர்?

அ) ஆதிசங்கரர், ஆ) ராமானுஜர், இ) மத்வர், ஈ) அகத்தியர் ....

8. பரசுராமரின் சாபத்தைப் பெற்றது யார்?

அ) கர்ணன், ஆ) ஜராசந்தன், இ) அர்ஜுனன், ஈ) சிகண்டி ....

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.

கலைப் பொருள் பராமரிப்பு மற்றும் விற்பனையாளர்களான 'ஸ்மார்ட் க்ரியேஷன்ஸ்' நிறுவனத்தினர் ஆன்மிகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாதா மாதம் ரூ. 10,000 மதிப்புள்ள பரிசுகளை வழங்குகிறார்கள். இம்மாதப் போட்டிக்கு, குலுக்கல் முறையில் 20 நபருக்கு தலா ரூ. 500/- மதிப்புள்ள பொருட்கள் பரிசளிக்கப்படுகின்றன.

எங்கே... உங்க ஆன்மிக அறிவை சோதிச்சுப் பாருங்க!

போட்டி விதிகள் : ஆன்மிக விடைகளை, கேள்விக்கு எதிரே உள்ள கட்டத்திலேயே நிரப்பி, இந்தப் பக்கத்தைக் கிழித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது!

பெயர் : ....

விலாசம் : ....

....

....

....

தொலைபேசி எண் : ....

ஈமெயில் : ....

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆன்மிகப் போட்டி - 6,
மங்கையர் மலர்,
47 ஜவாஹர்லால் நேரு ரோடு,
சென்னை - 32.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 15.6.2007



கீரை, காய்கறி, சாலட், பச்சடி போன்றவற்றை குழந்தைகள் ரொம்ப விரும்பிச் சாப்பிடுவதில்லை. பசியுடன் வரும் குழந்தைகளுக்கு முதலில் இவற்றைப் பரிமாறிவிட்டு சாதம் பரிமாறுவதை சற்று தாமதப் படுத்துங்கள். பசி வேகத்தில் ஆர்வமாக இதைச் சாப்பிட்டு விடுவார்கள். நாளடைவில் அதற்கென ஒரு தனி ருசி இருப்பதை உணர்ந்து ரசித்துச் சாப்பிடுவார்கள். இது என் சொந்த அனுபவம்.

- டாக்டர். கலாவதி, சென்னை.

வீடுகளில், காலிங்பெல் வெளியே இருப்பது போல், உள்ளே இருப்பவர்கள் வெளியே இருப்பவர்களை அழைக்க, வீட்டின் உள்ளிருந்து இயக்கும்படியான அலாரம் மணி ஒன்றைப் பொருத்தினால் ஆபத்துக் காலங்களில் உதவுமே!

- சிவசுப்ரமணியம், பெங்களூர்.

ஒரு

திடீரென்று அந்த ஐடியா தோன்றியது விலாசினிக்கு.

''சுகந்தி... நாளைக்கு நான் லீவு போடட்டுமா?''

''ஏன்... என்ன திடீர்னு?'' - பக்கத்து சீட்டில் இருந்த சுகந்திக்கு ஆச்சரியம்.

''சும்மாதான்! ரொம்ப நாளாச்சு வீட்டுல ஹாய்யா இருந்து! அவரும் வீட்டுல இல்ல, பிள்ளைங்களும் பாட்டி வீட்டுக்குப் போயிருக்குங்க!''

''ஓகே! என்ஜாய் யுவர்செல்ஃப்!''

''நிஜமாடி... என்ஜாய்தான் பண்ணப் போறேன்!'' - தன் திட்டத்தை சுகந்தியிடம் விவரித்தாள் விலாசினி.



சாயங்காலம் வீட்டுக்குப் போகும்போதே மறுநாள் என்னென்ன செய்ய வேண்டும் என்று மனசுக்குள் ஒரு பிளான் போட்டாள்...

காலையில் லேட்டா எழுந்திருக்கணும். ஒரு எழரையாவது ஆகட்டும். மெள்ள எழுந்து, நல்லெண்ணெய் காய வெச்சு, சூடு பறக்கத் தேய்ச்சுக் குளிக்கணும். ஆற அமர சாம்பிராணி போட்டுத் தலையை உலர்த்தணும்.

குத்துவிளக்கு, பூஜை சாமானெல்லாம் சும்மா தங்கமாட்டம் தேய்ச்சு, சுவாமிப் படங்களைத் துடைச்சு, சந்தனம், குங்குமப் பொட்டு வைக்கணும்.

தோட்டத்துப் பூவை பறிச்சு, மாலை கட்டிப் போட்டு அழகா பூஜை செய்யணும். லலிதா சஹஸ்ரநாமம் ஆற அமரச் சொல்லணும். ரொம்ப நாளாச்சு! அந்த வீணையைத் தொட்டு.. நடு ஹால்ல உட்கார்ந்து இரண்டு கீர்த்தனை வாசிக்கணும்.

அப்புறம் மார்க்கெட் போயி, இளங்கீரை, பிஞ்சு கத்தரிக்காய் வாங்கிட்டு வந்து சமைக்கணும்.

சாயங்காலம் விளக்கு வெச்சதும், டல்லிப்பூவை சென்டாகத் தொடுத்து தலைக்கு வைச்சுக்கணும். ஆலிவ் க்ரீன் கலர்ல ஒரு சில்க் காட்டன் புடைவையை வாங்கி வெச்சு எவ்வோ நாளாச்சு? அதை நாளைக்கு ரிலீஸ் செஞ்சு, கட்டிக்கிட்டு குருவாயூரப்பன் கோயிலுக்குப் போயிட்டு வரணும்.

நெய் தீபம் ஏத்தி, பதினெட்டு தடவை பிரதட்சணம் செய்யணும். அரக்கப் பறக்காம, ''ஸ்ரீ கிருஷ்ணா, கிருஷ்ணா''னு சொல்லிக்கிட்டே வலம்வரணும்...

மனசுக்குள் உற்சாகமாக இருந்தது.

மறுநாள் காலை விடிந்தது. வழக்கம் போல அஞ்சு மணிக்கே விழிப்பு வந்து விட்டாலும், ''படு... விலாஸினி... இன்னிக்கு உனக்கு ஸ்பெஷல் டே!'' என்று கண்ணை மூடிக் கொண்டாள்.

''அம்மா!''

ஏழரை! வேலைக்காரி செண்பகம் சத

நாளாவது...

ஆர். லலிதா

வைத் தட்டினாள்.

''தோ வந்துட்டேன்!'' கதவைத் திறந்து அவளுக்கு வழி விட்டாள். பின்னாலேயே செண்பகத்தின் மூன்று வயது பேரன் வேலு, எட்டிப் பார்த்தான்.

''இவனோட அம்மா சீக்கிரமா வேலைக்குப் போயிட்டா... இவன் என் கூட ஓடியாந்துட்டான்!'' என்று செல்லமாகச் சலித்துக் கொண்டே துடைப்பத்தை எடுத்துப் பெருக்க ஆரம்பித்தாள் செண்பகம்.

விலாசினி பல் தேய்த்து, முகத்தைக் கழுவினாள். ஐந்து நிமிஷம் கூட தாண்டியிருக்காது. வீட்டு வாசலில் அமர்க்களம். வேலு அழும் சத்தம்.

ஓடிப்போனாள் விலாசினி. கன்னங்கரேல் என்ற முரட்டு மாடு ஒன்று வேலுவைக் கீழே தள்ளி விட்டு நிமிறிக் கொண்டிருந்தது.

''அய்யோ வேலு!'' என்று துடித்துப் போய் அலறிக் கொண்டே விலாசினி நெருங்கினாள்.

அதற்குள் மாடு வேலுவை விட்டு விட்டு, விலாசினி பக்கமாக ஆக்ரோஷத்துடன் திரும்பியது.

''புஸ்... புஸ்..'' என்று உறுமியபடி, விலாசினியைத் தாக்க, தோள் பகுதியில் கொம்பு குத்தி அருகிலிருந்த குப்பைத் தொட்டி மீது விழுந்தாள்.

கையில் ரத்தம் கொட்டிய நிலையிலும், வேலுவைப் பிடித்துத் தூக்கி, காம்பவுண்டு உள் சுவரோரமாய் நிற்க வைத்தாள். அவ்வளவுதான்... இலேசாகத் தலை கிறுகிறுக்க மயங்கினாள் விலாசினி.

மறுபடி கண் விழித்த போது, கட்டிலின் மீது படுத்திருந்தாள்.

கையில் வலி... இலேசாக ஜுரம்...

முனகிக் கொண்டே எழ முயற்சித்தாள்.

''யம்மா! எழுந்திருக்காதே!'' செண்பகம் பதறிக் கொண்டே ஓடி வந்தாள்.

வேலுவின் அம்மா, பின்னாலேயே வந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

''அக்கா.... எம்புள்ளை உசுரைக் காப்பாத்திட்டே! பத்து வருஷம் பிள்ளை இல்லாம இருந்து தவமிருந்து பெத்த குழந்தை இது. அந்தப் பெரியபாளையம் மாரியாத்தா நீ!'' என்று கண்ணீர் விட்டாள்.

''ஹார்லிக்ஸ் மட்டும் குடுங்க! தையல் போட்டிருக்கேன். நாளைக்கு சரியாயிடும்!'' பக்கத்து வீட்டு டாக்டர் சொன்னார்.

''ரெஸ்ட் எடுத்தா போதும். எனக்கு ஒண்ணுமில்லே. நீங்கள்ளாம் போங்க!'' என்று விலாசினி சொன்னாலும் கூட்டம் கலைவதாயில்லை. களைப்புடன் கண்களை மூடிக் கொண்டாள் விலாசினி.

மறுநாள் காலை... வலி குறைந்திருந்தது. அலுவலகம் கிளம்ப ஆயத்தமானாள் விலாசினி.

''கிர்... கிர்'' அவளுடைய செல்ஃபோன் ஒலித்தது.

''குட்மார்னிங் விலாசினி. எப்படிப் போச்சு உன்னோட நாள்? பூஜை பண்ணி, ஸ்லோகம் சொல்லி, கோயிலுக்குப் போய் ஒரு மூட்டை நிறைய புண்ணியம் தேடிக் கிட்டியா?'' என்று கல கலப்பான குரலில் கிண்டல் செய்தாள் சுகந்தி.

''அதெல்லாம் எதுவும் பண்ணலை... ஆனாலும் மனசு நிறைவா இருக்கு! ஆபீஸ் வந்து சொல்றேன்!'' என்றவளின் கை தானாகவே கட்டுப் போட்டிருந்த காயத்தைத் தடவிக் கொடுத்தது.

சுருட்டை முடியும், அழகான சிரிப்புமாய் கண்ணுக்குள் வந்து போனான் வேலு! ●

முதல் அழுகை முக்கியம்!



● கருவுற்றிருக்கும் தாய்மார்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டு கிலோ எடை கூட வேண்டும். ஒன்பதாவது மாதக் கடைசியில் 10 கிலோ கூடியிருக்க வேண்டும்.

● பிறந்தவுடன் குழந்தை 'வீல் வீல்' என்று கத்த வேண்டும். முதல் அழுகை மிகவும் முக்கியம். முதலில் நன்கு சத்தமாக அழுதால்தான் எதிர்காலத்தில் மூளை, உடல் வளர்ச்சி நன்கு இருக்கும் என்பது மருத்துவ எதிர்பார்ப்பு.

● குழந்தை பிறந்ததுமே தலையின் சுற்றளவைக் கவனிக்க வேண்டும். நிறைமாதக் குழந்தையின் தலையின் சுற்றளவு 33 முதல் 35 செ.மீ. இருக்க வேண்டும். அதிகமாக இருந்தாலோ, குறைவாக இருந்தாலோ, கவனிக்க வேண்டும்.

● எதையாவது கீழே போட்டதும் சத்தம் கேட்டு குழந்தை அழவில்லையென்றால் ஹியரிங் டெஸ்ட் செய்யணும். பிறந்தவுடன் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டாலோ, குறைபிரசவக் குழந்தையானாலோ 'டெவலப்மெண்ட் அஸெஸ்மெண்ட்டு'க்கு அனுப்ப வேண்டும்.

● பிறந்தவுடனேயே குழந்தைகளுக்கு பார்வை நன்கு தெரியும். நாம் பக்கத்தில் சென்று பார்த்தால் நம்மையே ஃபிக்ஸ் பண்ணிப் பார்க்கும். 1½ மாதங்கள் ஆன குழந்தை அம்மா முகம் பார்த்துச் சிரிக்கும். ஆறு மாதங்களுக்குப் பிறகு நிறத்தைக் கொஞ்சம் கண்டுபிடிக்கும். பார்வையைத் தூண்ட, கலர் கலரான பொம்மை, பந்து, விளக்குச் சரம் போன்றவற்றைக் காட்ட வேண்டும்.

● பாட்டில் பால் கொடுப்பதைத் தவிர்த்து, ஆறு மாதங்கள் ஆனவுடன் உட்கார வைத்து ஸ்பூன் அல்லது சங்கால் கொடுக்கலாம். ஆவின் பாலைத் தண்ணீர் சேர்க்காமல் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

● பால், எண்ணெய் கொஞ்சம் கொஞ்சமாக சேர்க்க வேண்டும். இயற்கை உணவுகளில்தான் சக்தி அதிகம். ராகிக் கஞ்சியில் கால்சியம், இரும்பு சத்து அதிகம் உள்ளது. மலம் நன்கு போக காய்கறிகள், பழங்கள் வேகவைத்துக் கொடுப்பது நல்லது.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் டாக்டர் வசந்த மல்லிகா கூறக் கேட்டு, தொகுத்து எழுதியவர் : விஜயலக்ஷ்மி சுப்ரமணியம்.



''அமிர்த்தாவிற்கு நிகர் அமிர்த்தா மட்டுமே''



Amirthaa SLX
Amirthaa Sleek
Amirthaa ALS
Amirthaa TLT



★ ஓவிய நகல்

சரணம்

விடுதலை தந்த வார்த்தைகள்!

தீனபந்தன் ஷீரடி சாயி, எங்கள் வீட்டு வாசலில் நிற்கிறார். வண்ணப் பூ மழை கொட்ட, மேளதாளம் முழங்க, பக்தர் ஜனக் கூட்டம் எங்கள் வீடு நோக்கி வர, அகில், சந்தனம் மணக்க, எங்கள் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கிறார் அந்தக் கருணைவாசி.

அந்த தேஜோமயி எங்கள் வீட்டை மூன்று முறை சுற்றி வருகிறார். நானும், என் கணவரும் அவரது நடைக்கு ஈடு கொடுக்க இயலாமல், பின்னால் ''பாபா பாபா'' என்று அரற்றிக் கொண்டே ஓடுகின்றோம்.

அங்கிருந்த ஒரு செங்கல்லை, குனிந்து எடுத்து, வீட்டைச் சுற்றி அவரது புனித கையால் எல்லைக்கோடாக வரைகிறார்.

என் உடல் தூக்கிப் போடுகிறது. மெனோபாஸ் சங்கடத்தில் தூக்கமும் வலியுமாக அல்லாடிய எனக்கு, இது கனவா, நனவா என்ற பிரக்ஞையே இல்லாமல் இருந்தது. நாசியில் மட்டும் அந்த சுகந்தம் இன்னும் வீசிக்கொண்டு இருந்தது.

''பாபா, நான் உன்னை நினைத்தது கூட இல்லையே, இந்த எளியவளுக்கு ஏன் இந்த தரிசனம்? எனக்கு எப்போது விமோசனம்?'' என்று நொந்தபடியே பாத்ரூம் சென்றுவிட்டு வந்தேன்.

''உஷ்'' காற்று 'விசுக்' என்கிறதா! இல்லை யாராவது காதில் கூறுகிறார்களா?

அன்புக் கரங்கள் மென்மையோடு, என் தலையை வருடிக் கொடுத்தன. கனிவான குரல் ஆறுதல் சொல்லியது. வார்த்தைகளா அவை, அமுதத்தில் முக்கி எடுத்த முத்துக்களல்லவா?

''நீ தூங்கு, நான் இருக்கிறேன்.''

மறுநாள் காலை விடிந்தது என்று சொல்ல மாட்டேன். என்னைப் பொறுத்தவரையில் புனர் ஜென்மத்தின் முதல் நாள். உடல் உபாதைகளிலிருந்து விடுதலை ஆகியிருந்தேன்.

அந்த தேஜோமயி, கருணாமயி, அவரிடம் ஈடுபாடு காட்டாமல் இருந்த எனக்கு கருணை காட்டினாரே! எத்தனை கொடுத்து வைத்தவள். என்னை ஆட்கொண்டதன் காரணத்தைத் தேடுகிறேன். ''மக்கு'' எனத் திட்டுகிறார் அந்தப் பக்கிரி!

- சித்ரா, கோவை.

ஹோமத்தில் பாபா!

நான், ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யும் பஜனைக் குழு உறுப்பினர். எங்களது இல்லத்தில் பிரதி வாரமும் தாஸ ஸாகித்ய பாடல்கள் பஜன் செய்யப்பட்டு வருகின்றன. திடீரென ஒருநாள் சாயிபாபா பஜன் செய்ய சில நண்பர்கள் விரும்பவே, மிக்க மகிழ்ச்சியோடு 6.5.2006 அன்று எனது இல்லத்தில் ஏற்பாடு செய்தேன்.

எங்களுக்கு பல காலமாக புஷ்பம் கொடுத்து வந்த பையன் நிரந்தர வேலை கிடைத்து பெங்களூர் சென்று விட்டான். ஆனால் என்ன ஆச்சர்யம் என்றால், சாயி பஜன் ஏற்பாடு செய்திருந்த நன்னாளில் பல வருடமாக வராமலிருந்த அந்தப் பையன் ஒரு கூடை நிறைய ரோஜா பூக்களைக் கொண்டு வந்து, ''அம்மா, இன்று இந்த புஷ்பம் முழுவதும் உங்களுக்குத்தான்'' என்று கூறி அப்படியே கூடையைச் சாய்த்து விட்டான். மகிழ்ச்சி தாளாமல் ஆனந்தக் கண்ணீரே வந்து விட்டது. அதற்கு பிறகு இந்நாள் வரையில் கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிறது. அந்தப் பையனைக் காணவில்லை.

பஜனைக் குழுவில் வந்த ஒரு நண்பரின் இல்லத்தில் நடை பெற்ற 'பாபா பூஜை ஹோமத்தில்' பாபா அளித்த காட்சி

புகைப்படம் எனக்குக் கிடைக்கப் பெற்றது மற்றுமொரு மகிழ்ச்சியான விஷயம்!

- லலிதா ஜெகதீசன், சென்னை - 40.

நான் நினைத்ததை அவர் நடத்தினார்

கடந்த டிசம்பர் மாதம் திடீரென்று என் உடல் நிலை சரியில்லாமல் ஆனவுடன், வெளிநாட்டில் இருந்த என் பிள்ளை, பெண் இருவரும் கவலைப் பட்டார்கள். என் பிள்ளை பாபாவிடம் மனமுருகி வேண்ட, அன்றிரவு அவன் கனவில் பாபா, ''உன் அம்மாவுக்கு ஆபரேஷன் நடைபெறும், கவலைப் படாமல் இரு, எல்லாம் நல்லபடியாக நடக்கும்'' என்றார்.

எல்லா 'செக்-அப்'பும் நடந்தது. சர்ஜனின் அறையில் நான் முதலில் கண்டது, பாபாவின் படம்.

என்னுடன் வந்திருந்த என் பெண், ''அம்மா

ஷீரடி சாயி



★ ஹோமத்தில் பாபா

தைரியமாக இரு. டாக்டர் ஒரு பாபா பக்தர். நான் பாபாவின் ஓவியத்தை வரைந்து அவருக்குப் பரிசளிப்பேன்'' என்று வேண்டிக் கொண்டாள். நானும் என் மனதுக்குள் 'இவள் ஓவியம் வரைந்தால் பல நகல்கள் எடுத்து பக்தர்களுக்குக் கொடுப்பேன்' என பிரார்த்தனை செய்து கொண்டேன். இது ஒருவருக்கும் தெரியாது.

ஆபரேஷனும் வெற்றிகரமாக முடிந்தது. நான் ஐ.சி.யூ.வில் இருந்த போது, என் மகள் வெளியே இருந்தபடி, பாபாவின் ஓவியத்தை வரைந்தாள். அங்கிருந்த சில பக்தர்கள் தங்களுக்கு ஒரு 'ப்ரிண்ட் அவுட்' கேட்க, என் பெண்ணும் சந்தோஷமாகக் கொடுத்தாளாம்! என் உடல்நிலை சீரடைந்து வீட்டுக்கு வந்ததும், என் பெண் சமயோசிதமாக பாபா ஓவியத்தை 'செல்ஃபோனில்' க்ளிக் செய்து கம்ப்யூட்டரில் போட்டு 'காப்பி' எடுத்து, கலர் ஜெராக்ஸ் எடுக்கச் சென்றாள். போன இடத்தில் கடைக்காரர்கள் உட்பட, அங்கிருந்த சில பக்தர்களும் தங்களுக்கு நகல் கேட்க, என் பெண்ணும் கொடுத்திருக்கிறாள்.

'நான் வெளியில் சொல்லாமலேயே, என் ஆசையைப் பூர்த்தி செய்தாயே... பாபா!'' என உடல் புல்லரித்தது. ஒரிஜினல் ஓவியத்தை சர்ஜனுக்குப் பரிசளித்தாள் என் பெண். ஒரே ஆச்சரியமும், சந்தோஷமும் அவருக்கு. இந்த ஓவியத்தின் ஜெராக்ஸை வீட்டிற்கு வரும் பக்தர்களுக்கு இன்றும் கொடுத்துக் கொண் டிருக்கிறேன்.

நான் நினைத்ததை அவர் நடத்தினார். என்னே அவர் அருள்?

- ஜெயலக்ஷ்மி குமார், மும்பை - 71.

(நிறைந்தது)

வலதுபக்கம் ஏன்?

நாம் படுக்கையை விட்டு எழும்போது எப்பொழுதும் வலதுபக்கம் திரும்பி எழுந்திருக்க வேண்டும். இதற்கு விஞ்ஞான அடிப்படையில் காரணம் உண்டு.

நம் உடலை இரு காந்த வளையங்கள் சுற்றி வருகின்றன. இதில் முதலாவது காந்த வளையம், காலிலிருந்து தலைக்கும், தலையிலிருந்து காலுக்கும் வலம் வருகிறது. இரண்டாவது காந்த வளையம் இடதுபக்கமிருந்து முன் பாகம் வழியாக வலது பக்கத்திற்கும் வலது பக்கமிருந்து பின் பாகம் வழியாக இடதுபக்கமும் வலம்வருகின்றது. காந்த வளையத்தின் திசைக்கேற்றவாறு உடல் அசையும் போது காந்த வளையத்தின் சுருள்கள் இறுகுகின்றன. எதிராக அசையும் போது சுருள் தொய்ந்து உடல் இயந்திரத்தின் செயல் திறனைத் தளர்வடையச் செய்கின்றது. எனவே உடல் வலது பக்கம் திரும்பி எழுவது காந்த வளையத்தின் சுருள்களை இறுகச் செய்யும் என கண்டறியப்பட்டுள்ளது. அதனால்தான் நம் முன்னோர்கள் எப்பொழுதும் வலது பக்கம் திரும்பி எழுவதை வற்புறுத்துகின்றனர்.



– மைதிலி சுந்தரராமன், சென்னை – 17.



ஆற்றல் பெருக அற்புத யோசனை!

மாதத்துக்கு ஒருநாள், அதாவது செவ்வாய்க் கிழமை அன்று மௌன விரதம் இருந்து பழக வேண்டும். இதனால் கோபம் வராது. பொறுமை வளரும். எதையும் சாதிக்கும் திறமை வளரும். உயிராற்றல் பெருகும். இரத்த அழுத்தம் குறையும். முக்கியமாக குடும்பத்தில் சண்டை ஏற்படாது. 'மௌனம் கலக நாஸ்தி' என்று பழமொழியே உள்ளதே!

– சி. வசந்தகோகிலம், சென்னை – 61.

பிரார்த்தனை!



காலையிலிருந்து எதுவுமே சாப்பிடக் கிடைக்கவில்லை. அலைந்து அலைந்து கால் வலி கண்டதுதான் மிச்சம். ராமசாமி மனசு நொந்து போனான்.

'சே! என்ன வாழ்க்கை இது!?' அதிகம் வேண்டாம். ஒரு பத்து ரூபாய்த் தாள் ரோட்டுல கிடந்தாக் கூடப் போதுமே...! எதையாவது வாங்கித் தின்னு பசியாத்திக்குவேனே! உயிர் போயிடும் போல இருக்கே...! தவித்தபடியே அங்கும் இங்கும் பார்வையைச் செலுத்தினான் ராமசாமி.

பசியால் தவித்துக் கொண்டிருந்தவனுக்குள் திடீரென ஒரு ஞானோதயம்.

'சே! பத்து ரூவா கீழ கிடைக்கணும்னு அநியாயமா வேண்டறமே... அதென்ன மந்திரத்துலயா கீழ கிடக்கப் போகுது? யாரோ ஒருத்தர் தவற விட்டாத்தானே கீழே கிடக்கும்..? அப்படிக் கீழே கிடந்து, அது எனக்குக் கிடைக்கறது ஒரு பக்கம் இருக்கட்டும்! அதைத் தவற விட்டவன் ஒருவேளை என்னைவிட மோசமான நிலையிலிருக்கறவனா இருந்தா...? பாவம்! அந்தப் பணத்தைத் தொலைச்சுட்டு அவன் என்ன பாடுபடுவானோ...? வேண்டாம்! பசி எனக்குப் பழகிப் போன ஒன்னுதான். கடவுளே, ஏதாவது பத்து ரூவா நியாயமா சம்பாதிக்கறா மாதிரி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடு போதும்' - கடவுளை வேண்டியபடி நிம்மதியாய் நடக்கத் தொடங்கினான் ராமசாமி.

- வே. ராதாகிருஷ்ணன்,
கோவை.



சமீபத்தில் சன் டி.வி.யில் ஒளிபரப்பான பட்டி மன்றத்தில் தமிழர் பண்பாடு பற்றிப் பேசியவர் சொன்ன கருத்து மிக அருமையாக இருந்தது. நாம் எவ்வளவுதான் நாகரிக முன்னேற்றமடைந்தாலும் தெருவில் பால், மோர் உள்ளிட்ட பொருள்கள் கூட விற்பனைக்கு வந்தபோதும் ஒருநாளும் வாழையிலையை, தெருவில் கூவி விற்பதில்லை. ஏனென்றால் ''வாழலை, வாழலை'' என்று அமங்கல ஒலி வந்து விடுமாம்!

அது தெரியாத ஒரு பெண், வாழையிலையைக் கூவி, கூவி விற்பனை செய்து கொண்டிருப்பதைப் பார்த்த அவளது தங்கை பின்னாலேயே வாழைக்காய் கூடையை

“வாழலை; வாழக்கா!”

எடுத்து வந்து ''வாழக்கா, வாழக்கா'' என்று கூவி சகோதரிக்கு நல்ல வார்த்தை, வாழ்த்தைத் தெரிவித்தாள் என்றும் சொன்னது ரசிக்கும் படி இருந்தது.

- கமலா பார்த்தசாரதி, சென்னை - 33.



பிடித்தமான நோய்கள்!



- திருடர்களுக்கு - 'கொள்ளை' நோய்
- பெண்களுக்கு - 'பொன்'னுக்கு விங்கி
- வழக்கறிஞர்களுக்கு - 'வாத' நோய்
- சாராய வியாபாரிகளுக்கு - 'காய்ச்சல்'
- அரசியல்வாதிகளுக்கு - கா'மாலை' நோய்
- கொத்தனார்களுக்கு - சி'தளம்'
- விவசாயிகளுக்கு - 'மேக'ப் படை
- காங்கிரசாருக்கு - கால் 'கை' வலி
- போர் விரர்களுக்கு - 'படை'
- வழுக்கைத் தலையர்களுக்கு - 'விக்'கல்
- பால்காரர்களுக்கு - 'கோ'மா
- எறும்புகளுக்கு - 'சர்க்கரை' நோய்
- வாத்துகளுக்கு - கக்'குவா'ன் இருமல்
- பாம்புகளுக்கு - 'புற்று'நோய்

கற்பனை : ஆ. விஜயலக்ஷ்மி, திருச்சி - 17.

மார்க்கெட் போகும் போது நிறைய பிளாஸ்டிக் கவர்கள் எடுத்துச் சென்றால் காய்களை அந்தப் பைகளிலேயே பிரித்து, வாங்கி வரலாம். விட்டுக்கு வந்து எல்லா வற்றையும் கீழே கொட்டி தனித் தனியாக பொறுக்கி எடுத்து வைக்க வேண்டிய அவசியம் இராது.

- ஜி. ஜெயலக்ஷ்மி, மடிப்பாக்கம்.





சுசீலா... சித்ரா... ஜானகி!

நம்மில் பல சகோதரிகள் மனதுக்குப் பிடிக்காத சம்பவங்கள் நடந்தால், திரும்பத் திரும்ப அதையே நினைத்து நொந்து போவார்கள்.

''ஐயோ! கணவர் ஆபீஸ் போகும் போது 'கள்' என்று பேசிவிட்டாரே!'' ''உறவினர் திருமணத்தில் எதிர்பார்த்த மரியாதை கிடைக்கவில்லையே!'' என்று மனது ஏதாவது சம்பவத்தை அசை போட்டு சோர்ந்து போகும்.

நான் ஆபீஸுக்கு பஸ்ஸில் பயணிக்கும் போதும், வரிசையில் காத்திருக்கும் சமயங்களிலும், எனக்குப் பிடித்த பாடல்களைச் சங்கிலித் தொடராய் முணுமுணுத்துக் கொள்வேன். உதாரணத்திற்கு, சூர்யா, பூமிகா நடித்த ''முன்பே வா, என் அன்பே வா'', பின் சூர்யா, ஜோதிகா நடித்த, ''உயிரின் உயிரே'', தொடர்ந்து ஜோதிகா, விஜய் நடித்த ''ஒரு பொண்ணு ஒண்ணு நான் பார்த்தேன்....'' இப்படி நடிகர்களை வைத்து தொடர் சங்கிலிப் பாடல்கள். பின்னணிப் பாடகர்கள் தொடர் சங்கிலி பிறகு ''ஜானகி ஹிட்ஸ், சுசீலா பாடல்கள், சித்ரா பாடல்கள்'' இப்படியாக முணுமுணுப்பேன். இது எனக்கு உடனடி உற்சாகம் தரும். மேலும் தேவையற்ற மனக்கலக்கம் நெருங்காது! நீங்களும் செய்து பாருங்களேன்!


- கீதா சுந்தரராசன்,
வேளச்சேரி.

அஹா 50!



குழந்தைகளுக்கான, ஈரத்தை உறிஞ்சும் 'டையபர்' மிகவும் உபயோகமானதுதான். ஆனால், அது தரும் சௌகரியத்தால், பல அம்மாக்கள் குழந்தைகளுக்கு 'டாய்லெட் ட்ரெயினிங்' அளிக்கத் தவறி விடுகிறார்கள். இது குழந்தைகளுக்கு மலச்சிக்கல் முதல் பல்வேறு வியாதிகளுக்கு வழிவகுக்கும். இளம் அம்மாக்கள் கவனிப்பார்களா?

– சுமதி சுப்ரமணியன்,
நவி மும்பை.


Be seen in a new light
The Rebel Collection
globus
MENS WEAR • LADIES WEAR • KIDS WEAR
CHENNAI - T NAGAR : 113/114 Sir Theyagaraya Road, Meena Kampala Arcade Tel: 28155058. ADYAR: 36, Lattice Bridge Road. Tel: 24460274
FACTORY OUTLET - KILPAUK : Abirami Mega Mall, Level II, 152 Purasawalkam High Road. Tel: 42023910
BANGALORE - RICHMOND ROAD. Prestige Corniche, 62/1, Tel: 6061 0123. KORAMANGALA: Salarpuria Towers II, Lusker Hosur Road. Tel: 6667 0802
ALSO AT HYDERABAD: City Center Mall, Junction Of Road No. 1 & Road No. 10, Banjara Hills. Tel: 329616037





ஆல்பம்

தாத்தா : ராமஸ்வாமி
பாட்டி : ஜெயலஷ்மி
பேத்தி : அனன்யா



தாத்தா : ஜி. அங்கப்பன்
பாட்டி : சீதா அங்கப்பன்
பேத்தி : எஸ். திருமங்கை மீனாட்சி

என் செல்லமே





தாத்தா : ராகவேந்திரராவ்
பாட்டி : சரஸ்வதி
பேத்தி : சமன்விதா





தாத்தா : பத்மனாபன்
பாட்டி : பிரேமா
பேத்தி : எச். ரிதுவர்ஷினி

தாத்தா : சி.ஆர். ரகுபதி
பாட்டி : அஜந்தா ரகுபதி பேரன் : அஜய் ஆதித்யா



உங்கள் மூட்டுவலியை தொலைப்பது எப்படி?

1. மூட்டுவலி ஏன் வருகிறது?

   பொதுவாக வயதான காரணத்தினால் மூட்டுகளில் ஏற்படும் தேய்மானத்தாலும் மூட்டுகளில் இருக்கும் லூப்ரிகேன்ட் திரவம் வற்றிப்போவதாலும் மூட்டுகளிடையே யூரிக் அமிலம் கிரிஸ்டலாக உருவாகிறது இதனால் மூட்டுகளுக்கு அதிக உராய்வு ஏற்பட்டு மூட்டுவலி வருகிறது.

2. மூட்டுவலிக்கு ஆர்தோக்யூர் எப்படி செயல்படுகிறது?

   ஆர்தோக்யூர் மாத்திரைகள் செலரி விதையின் சாரத்தை கொண்டு செயல்படுகிறது. இதன் முக்கிய குணமே மூட்டுகளுக்கு இடையே உருவாகும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்களை கரைப்பதுதான் இதனால் மூட்டுவீக்கத்திற்கும் மூட்டுவலிக்கும் செலரி விதையின் சாரம் மிக சிறப்பாக வேலை செய்வதால் மூட்டுவலி வெகுவாக குறைகிறது.

3. தற்போது மூட்டுவலிக்கு மார்கெட்டில் உள்ள பல மருந்துகளைவிட ஆயுர்வேத ஆர்தோக்யூர் எப்படி சிறந்தது?

   1. ஆர்தோக்யூர் 100 சதவீதம் ஆயுர்வேத மாத்திரை எனவே வயிற்று எரிச்சல், வாயில் புண் போன்ற எந்த பக்க விளைவும் வர வாய்ப்பில்லை. ரத்த கொதிப்பு நோய் மற்றும் பிற நோய் உள்ளவர்களும் அவர்கள் சாப்பிடும் ஆங்கில மருந்துடன் மூட்டுவலிக்காக ஆர்தோக்யூர் எந்த தயக்கமுமில்லாமல் எடுத்துக் கொள்ளலாம்.
   2. ஆர்தோக்யூர் மாத்திரையில் முதல்முதலாக செலரி விதையின் சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். செலரி விதை மிகச் சிறந்த துர்நீர் விளக்கி மூட்டுகளுக்கு இடையே படியும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்களை முழுவதும் கரைத்துவிடுகிறது. இதனால் செலரிவிதை சாரம் மூட்டுவலிக்கு, மூட்டு வீக்கத்திற்கு திறமையாக செயல்படுகிறது.
   3. ஆர்தோக்யூர் மாத்திரைகளில் வெள்ளை குங்குலீயம் உள்ளது. வெள்ளை குங்குலீயம் முதுகு வலி, கணுக்கால் வலி, குதிக்கால் வலி மற்றும் எரிச்சல் ஆகியவற்றுக்கு மிகச் சிறந்த மருந்தாகும்.
   4. ஆர்தோக்யூர் மாத்திரைகளில் மகாயோகராஜ குக்குலு உள்ளது. மகாயோகராஜ குக்குலுவின் சிறப்பு அம்சம் உடலில் வலியுள்ள அனைத்து இடங்களிலும் பரவி வலியை திறமையாக குறைக்கும். இது ஒரு ரத்த சுத்தி மருந்து.
   5. ஆர்தோக்யூர் மாத்திரைகளில் மகாரசநாதி வாத சூரணம் உள்ளது. இதன் சிறப்பு அம்சம் குளிர் காலங்களில் மூட்டுகளுக்கு இடையே உஷ்ணத்தைப் பரப்பி மூட்டு வலியை வெகுவாக குறைக்கிறது.



ஆர்தோக்யூர்®
மாத்திரைகள்

   செலரி விதையின் சாரம் தவிர வெள்ளை குங்குலீயம், மகாரசநாதி வாத சூரணம் மற்றும் மகாயோகராஜகுக்குலு ஆகிய மூன்றும் தனியாகவே சிறந்த வலி நிவாரணிகள் ஆகும். இந்த நான்கும் ஆர்தோக்யூர் மாத்திரைகளில் ஒன்றாக சேரும்போது பலன் மிக வேகமாக கிடைக்கிறது. எனவே மூட்டுவலிக்கு ஆர்தோக்யூர் மாத்திரை மிகச்சிறந்த மருந்தாக விளங்குகிறது.

4. ஆர்தோக்யூர் மாத்திரைகள் எவ்வளவு சாப்பிடவேண்டும்?

   கடுமையான மூட்டுவலி பிரச்சனையால் அவதிப்படுபவர்கள் ஆர்தோக்யூர் மாத்திரை காலை, மதியம், இரவு ஆகிய 3 வேலைகளில் ஓரோர் மாத்திரைகளை ஆகாரத்திற்கு ½ மணிநேரத்திற்கு முன் சாபபிடவேண்டும். இதுபோல் 45-60 நாட்களுக்கு மாத்திரைகளை சாப்பிட்டபின் மூட்டுவலியில் சிறிது குணம் தெரிந்தபின் காலை, இரவு ஆகிய இரு வேலைகளில் மட்டுமே ஓரோர் மாத்திரை எடுத்துக் கொள்ளவும். இவ்வாறு சாப்பிட்டு நன்றாக குணமடைந்த நிலையில் மாத்திரை சாப்பிடுவதை நிறுத்திவிடாமல் தொடர்ந்து ஒரு மாத்திரை சாப்பிட்டு வரவேண்டும்.

5. மூட்டுவலி நின்றுவிட்டால் ஆர்தோக்யூர் மாத்திரை சாப்பிடுவதை நிறுத்திவிடலாமா?

   ஆர்தோக்யூர் மாத்திரை தொடர்ந்து சாப்பிட்டுவருவதால் மூட்டுகளுக்கு இடையே படியும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்கள் மேலும் படியாமல் ஆர்தோக்யூர் மாத்திரை உடனுக்குடன் கரைத்துவிடுகிறது. மாத்திரையை நிறுத்தி விட்டால் மீண்டும் யூரிக் ஆசிட் கிரிஸ்டல்கள் மூட்டுகளுக்கு இடையே படிவதால் மீண்டும் அதிக வலி ஏற்பட்டு முதலிலிருந்து மூன்று இரண்டு ஒன்று என்றபடி ஆர்தோக்யூர் மாத்திரை சாப்பிட வேண்டிவரும். எனவே இதனை தவிர்க்க ஆர்தோக்யூர் மாத்திரை தினமும் ஓரோர் மாத்திரை (Maintenance Dosage) ஆக சாப்பிட்டு வருவதே சிறந்த முறையாகும்.



Marketed By : KUREWEL PHARMA, 111, 4th Avenue, Ashok Nagar, CHENNAI - 83. Tel : 2489 3013, 2471 1719.
BANGALORE : 080-22278594, 22239967 ● MUMBAI : 022-24022473, 24026874

பிற்பகல் ஒரு மணிக்கு பரீட்சை முடிந்து வீடு திரும்பும் மைத்ரேயி இன்னும் திரும்பவில்லை.

ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்ற உள்ளுணர்வு தேவகியை ஆட்டி வைத்தது!

ஐந்து மணிக்கு உமாவும், அவள் அக்காவும் கையில் பையுடன் சிரித்தபடி உள்ளே வந்தார்கள்.

''வெயில் தாங்கலை. எனக்கும், அக்காவுக்கும் ஜில்லுனு எலுமிச்சை ஜூஸ் கலந்து குடுங்க.''

''உமா! மைத்ரேயி இன்னும் வீடு திரும்பலை.''

''அதுக்கு நான் என்ன செய்யணும்?''

''என்னம்மா இப்பிடி கேக்கறே? ஒரு மணிக்கு வீடு திரும்பற பொண்ணு, அஞ்சு மணியாகியும் வரலைன்னா, கவலைப் படாம இருக்க முடியுமா? கோபாலுக்குத் தகவல் சொல்லு.''

''இதப் பாருங்க, அவருக்கு ஆபீஸ் டென்ஷன் போதாதா? இது வேற வேணுமா? வந்து சேருவா. நீ உள்ள வா அக்கா''

இருவரும் உள்ளே வர,



2 அமாவாசை

''எங்கியாவது ஊரைச் சுத்திக்கிட்டிருப்பா. வயசுக்கு வந்திருந்தா, கவலைப்படணும். இப்ப அந்தக் கவலையும் இல்லையே?''

அக்காக்காரி சொல்ல, அம்மா தேவகி புயலைப் போல உள்ளே வந்தாள்.

''ஏம்மா, நீயெல்லாம் ஒரு பொம்பளைதானா? நீ பேசற பேச்சுக்கு என்ன உள் அர்த்தம்? இப்படிப் பேச உனக்குக் கூசலை?''

உமா நெருங்கின.

''அப்படி அவ என்ன தப்பா பேசிட்டா? வீட்டுக்கு வர்றவங்களை அவமானப்படுத்தற பண்பாட்டை எங்கே கத்துக்கிட்டீங்க?''

''நிறுத்துடி! அண்ணினா, பெறாத அம்மா. நீ அப்படியா இருக்கே? பெண் மனசையும், உணர்வுகளையும் புரிஞ்சுக்க முடியாதவ, பொம்பளைனு சொல்லிக்கத்



நிலவு

தேவிபாலா

தகுதியே இல்லடி.''

''என்னடி உமா இது? உன் மாமியார் ராட்சஸியா இருக்காளே! எப்படி இந்தக் குடும்பத்துல வாழுற நீ?''

''நான் செஞ்ச பாவம்கா அது! நீ புறப்படு!''

உமா வாசல் வரை போனாள்.

இருவரும் கிசுகிசுப்பாய்ச் சில நிமிடங்கள் பேசினார்கள். அக்கா போய் விட்டாள்.

அம்மா புழுவாகத் துடித்தாள்.

கோபாலுக்கு ஃபோன் போடவும் அம்மாவுக்குத் தெரியாது. மைத்ரேயிக்குத்தான் அதெல்லாம் தெரியும். மைத்ரேயியின் பள்ளிக்கூடமும் தெரியாது.

'கடவுளே! நான் யார்கிட்டச் சொல்வேன்? நான் வாழுறதே என் மகளுக்காக! அவளுக்கு எந்த ஆபத்தும் வராம பத்திரமா என்கிட்ட கொண்டு வந்து சேர்த்துடு மகமாயி.''

இரவு ஏழரை மணிக்கு கோபால், உள்ளே வந்தான்.

''மைத்ரேயி இன்னும் வரலைடா கோபால்.''

''அதுக்காக நீ உமாவை கண்டபடி பேசினியாம்மா? அவ வரலைன்னா, உமா என்னம்மா பண்ணுவா?''

''அவளோட அக்கா...''

''நிறுத்தும்மா. வர வர, உன் தொல்லை தாங்க முடியலை. உன்னால என் நிம்மதியே போச்சு. நானும் சந்தோஷமா வாழணும்னு நீ நினைக்கணும்மா. மருமகளும் ஒரு பொண்ணுதான்னு ஏம்மா நீங்கல்லாம் நினைக்கறதேயில்லை?''

தேவகிக்கு தன் மேல நெருப்பை வாரிக் கொட்டியதைப் போல இருந்தது.

''கோபால்! என்னை நீ என்ன வேணும்னாலும் சொல்லுடா! இப்ப உன் தங்கச்சியைத் தேடுப்பா! எனக்கு எந்த வழியும் தெரியலைடா தம்பி! உன் கால்ல வேணும்னாலும் விழறேன்.''

அம்மா, கோபாலின் காலில் விழப் போக,

''என்னம்மா நீ? ஏன் இப்படியெல்லாம் பண்ற?''

''பெத்த வயிறு பத்திக்கிட்டு எரியுதுடா.''

கோபால் பதற்றமாகத் திரும்பினான். ''உமா! நான் மைத்ரேயி படிக்கற ஸ்கூலுக்குப் போறேன்.''

''அவ அங்கியா இருப்பா இந்த நேரத்துல?''

''சரிடி! எங்கியாவது போய்த் தேடித் தானே ஆகணும்? விட்ர முடியுமா? நாளைக்கு நாலு பேர் என்னைத்தானே கேள்வி கேப்பாங்க?''

அவன் வாசலுக்குப் போக கார் வந்து நின்றது.

காரிலிருந்து மைத்ரேயி இறங்கினாள். கூடவே நடுத்தர வயதுப் பெண்மணி ஒருத்தியும் இறங்கினாள்.

''வந்துட்டியாம்மா?''

அந்தப் பெண்மணி அருகில் வந்தாள். அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''என் பேரு திலகம். என் கணவரை சரியான நேரத்துல காப்பாற்றி, எனக்கு மாங்கல்ய பிச்சை போட்டது உங்க மகள் தான். அதுக்கு நன்றி சொல்லி, அவளையும் கொண்டு வந்து விடத்தான் நான் வந்தேன்.''

''நீங்க என்ன சொல்றீங்க?''

''மைத்ரேயி, நீயே சொல்லும்மா!''

''என் ஸ்நேகிதி சரண்யாவோட அம்மாவுக்கு ஆபரேஷன் நடந்து ஆஸ்பத்திரில இருக்காங்க. பரீட்சை முடிஞ்சதும், அவ ஆஸ்பத்திரிக்குப் போனா. நானும் கூடவே போனேன்.''

அந்தம்மா திலகம் தொடர்ந்தாள்.

''என் கணவர் மண்டைல அடிபட்டு, நிறைய ரத்தம் சேதமாகி, உயிருக்குப் போராடறார். ரத்த வகை அபூர்வ வகை. ரத்த வங்கில கிடைக்காம அலைபாயும் போது, அங்கே வந்த மைத்ரேயி நர்ஸ் மூலம் விவரம் தெரிஞ்சு, தனக்கும் அது தான்னு டாக்டர்கிட்ட சொல்லிட்டு, உடனே ரத்தம் தர சம்மதிச்சிட்டா. என் கணவருக்கும் அதைச் செலுத்தியாச்சு. இனிமே ஆபத்து இல்லைனு டாக்டர் சொல்லிட்டார். மைத்ரேயி ரத்தம் குடுத்துக்கிட்டிருந்த காரணமா, உங்களுக்குத் தகவல் தர முடியலை.''

அனைவரும் அப்படியே ஸ்தம்பித்து நிற்க,

''மைத்ரேயி, ரொம்ப நன்றிம்மா! நாளைக்கு அந்தப் பக்கம் வர்றியா?''



எல்லா வங்கிகளிலும் சேமிப்பு, கணக்கு, கரண்ட் அக்கவுண்ட் முதலியவற்றிற்கு கணக்கு வைத்திருப்பவருக்கான 'பாஸ்' புத்தகங்களை ஒரே இடத்தில் அச்சிட்டு வங்கிகளின் கிளைகளுக்கு அனுப்பு கிறார்கள். வங்கிக் கிளைகள் தங்கள் வங்கியின் பெயர், முகவரி முதலியவற்றை ரப்பர் ஸ்டாம்ப் செய்து இந்தப் புத்தகங்களில் பதித்துத் தருகிறார்கள். வங்கியின் தொலைபேசி எண்ணையும் சேர்த்து ரப்பர் ஸ்டாம்புகள் தயாரித்துப் பதித்தால் வாடிக்கையாளர்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வசதியாக இருக்கும்.

— சுமதி சுப்ரமணியன், நவி மும்பை.

மற்றவர்கள் நமக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை வாங்கி அதை எண்ணிய பிறகு, குறைவாக இருப்பதாகத் தோன்றினால், ''அதிகமாக இருக்கிறதே'' என்று கூறிவிட்டு, மீண்டும் எண்ண வேண்டும். இதன் மூலம் சங்கடத்தையும், மனக் கசப்பையும் தவிர்க்கலாம்.

- ஜெ. விஜயலச்சுமி, சேலையூர்.



''பரீட்சை முடிஞ்சதும் நேரா ஆஸ்பத்திரிக்கு வர்றேன்மா.''

''அமாவாசை நாள், என் வாழ்க்கைல இருட்டே நிரந்தரமாகிடும்னு நெனைச்சேன். அதை வெளிச்சமாக்கிய மைத்ரேயிக்கு நான் ஆயுள் முழுக்க கடமைப்பட்டிருக்கேன். எல்லோருக்கும் நன்றி. வர்றேன்மா.''

கார் புறப்பட்டுப் போனது.

அம்மா, மைத்ரேயியிடம் வந்தாள். கட்டிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

''நான் வாழறதே உனக்காகத்தான்டி. நாலஞ்சு மணி நேரமா செத்து செத்து பிழைக்கறேன்டி கண்ணே. ஒரு பெண்ணோட தாலியைக் காப்பாத்திட்டு வந்திருக்கே. உன் அருமை இங்கே யாருக்கும் தெரியலியே...''

உமா விசுக்கென முகத்தை இழுத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

கோபால் அருகில் வந்தான்.

''இதப்பாரு. சமூக சேவை செஞ்சு பாராட்டு வாங்கறதெல்லாம் இன்னியோட நிறுத்திக்கோ.''

''அண்ணே, ரத்தம் குடுக்கறது தியாகமோ, சமூகசேவையோ இல்லை. அது மனிதாபிமானமில்லையா?''

''மைத்ரேயி, அதெல்லாம் அவங்களுக்குப் புரியாது விடு.''

விசுக்கென திரும்பினான் கோபால்.

''என்னம்மா பேசற நீ? மனிதாபிமானம்னா எங்களுக்குப் புரியாதா? நான், பொண்டாட்டி, புள்ளைன்னு போகாம, உங்களையெல்லாம் ஒக்கார வச்சு சோறு போடறதே மனிதாபிமானம்தான். அதை நீ புரிஞ்சுக்கோ.''

''கேட்டியா மைத்ரேயி! பெத்த தாய்க்கு சோறு போடறதே பெரிய மனிதாபிமானமாம். கல்லுல செதுக்கணும் இதை.''

''கிண்டலை நிறுத்தும்மா. எங்கிட்டயே இப்பிடிப் பேசற நீ, உமாகிட்ட எப்படி பேசுவ? அவ சொல்லும்போது நான் கோவப்பட்டேன். ஆனா அவ சொல்றது எல்லாமே நியாயம்னு இப்பப் புரிஞ்சுகிட்டேன்.''

''ஆத்தாளை அடிச்சு விரட்டறதை நியாயம்னு சொன்னாளா உன் பொண்டாட்டி?''

''அம்மா நிறுத்து! ஏன் இப்பிடிப் பேசற?''

மைத்ரேயி குறுக்கிட்டாள்!

''இதப் பாரு, ஒழுங்கா வாயை மூடிக்கிட்டு யாருக்கும் பிரச்னை தராம இருக்கறதாயிருந்தா ரெண்டு பேரும் இருங்க. இதுக்கும் மேல என்னைப் பேச வச்சிடாதீங்க.''

'சரக்' என உள்ளே போய் விட்டான்.

அம்மா வேகமாக உள்ளே வந்தாள். அப்படியே மடிந்து, சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

''கெட்டத்தட்ட உங்கண்ணன், நம்ம ரெண்டு பேரையும் வெளில போகச் சொல்றான்டி மைத்ரேயி.''

''இந்த அளவுக்கு நீ ஏம்மா பிரச்னையைப் பெரிசு பண்ணினே? சரி விடு!

இனிமே அதிகமா பேசாதே.''

''இல்லைடா கண்ணு. இனிமே இந்த வீட்ல நீயும், நானும் இருந்தா, நாயை விடக் கேவலமா நடத்தப்படுவோம்.''

''புரியுதும்மா! எங்கே போவோம்?''

''காலைல சௌத்ரியைப் பார்த்தேன். மயக்கம் போட்டு விழுந்த எனக்கு முதலுதவி செஞ்சார்.''

''நீ மயக்கம் போட்டியா? எப்ப?''

''அதை விடு. சௌத்ரிகிட்ட எல்லாம் சொல்லிட்டேன். நாளைக்கு வரேன்னார். அவர்கிட்ட உதவி கேட்போம்.''

''அம்மா, எனக்குப் பசிக்குது!''

''இரு. சாப்பாடு இருக்கு. முகம் கழுவிட்டு வா, எடுத்து வைக்கறேன்'' அம்மா உள்ளே வர, அவர்கள் மூவரும் சாப்பிட்டு முடித்து, மீதியை உமா, பிச்சைக்காரனுக்கு போட்டுக் கொண்டிருந்தாள்.

''உமா, நீ என்ன செய்யறே? நாங்க ரெண்டு பேரும் இன்னும் சாப்பிடவேயில்லை?''

உமா பதில் பேசாமல், உள்ளே வந்தாள். கதவோரம் நின்றாள். உதடுகள் முணுமுணுத்தன.

''பட்டினி கிடங்க! அப்பவாவது ரோஷம் வருதான்னு பார்க்கறேன்.''

அம்மா உள்ளே வர, மைத்ரேயி எதிரே வந்து நின்றாள்.

''சாப்பாடு இல்லையா? அமாவாசைல பிறந்தவளும், அவளைப் பெத்தவளும் அமாவாசை நாள்ல விரதம் இருந்தா, நல்லது நடக்குமாம். தெரியுமா ஒனக்கு?''

''என்னடீ சொல்ற நீ?''

''அம்மா, பட்டினின்னு சொல்லும் போது வலிக்கும். அதையே விரதம்னு சொல்லிப் பாரு, எதையோ சாதிக்கற முயற்சியா தெரியும். எல்லாத்துக்கும் ஒரு பாஸிட்டிவ் பக்கம் உண்டும்மா. அதை மட்டுமே கைல எடுத்துக்கிட்டு வாழப் பழகினா, வாழ்க்கைல அமாவாசையே இருக்காதும்மா.''

அம்மா கண்ணீருடன் அவள் முகவாயை உள்ளங்கையில் ஏந்தி, அந்தத் தலையைத் தழைத்து முன்னுச்சியில் மெல்ல முத்தமிட்டாள்!

காலி வயிற்றுடன் மகள் படுக்கிறாளே என்ற வேதனையில் அம்மாவுக்கு உறக்கமே வரவில்லை!

நள்ளிரவில் மைத்ரேயி துள்ளி எழுந்தாள்.

''அம்மா! எனக்கு வயித்து வலி தாங்க முடியலைம்மா...''

(தொடரும்)



தாங்க முடியாத ஒற்றைத் தலைவலிக்கு சின்ன வெங்காயத்தை எடுத்து அம்மியில் நசுக்கி துணியில் வைத்து மூக்குத் துவாரத்தில் (ஒற்றைத் தலைவலி வலது புறம் என்றால் இடது துவாரத்திலும், இடதுபுறம் என்றால் மூக்கின் வலது துவாரத்திலும்) இரண்டு துளிகள் வெங்காயச் சாறை விட வேண்டும். சுரீர் என்று மூக்கில் பட வேண்டும். உடனே ஒற்றைத் தலைவலி போயே போய் விடும்.

- பி. பார்வதி,
கோவில்பட்டி.

EVP CLUB

Kolapakkam - 3 Kms from Miot Hospital

Independant Villas

Tudor Style ! Starts from 41 lakhs

We deliver.....Quality.
We insist on 4 fundamentals :
Design, Location, Finishing and Workmanship.
We have a track record that spans 24 years...



AMENITIES

Well-integrated Infrastructure
- Drainage
- Well lit 40 Ft and 30 Ft wide black top roads
- 24 Hrs Security

Shopping
- Super Market

Club House

It has every thing to ensure you a life luxurious, secure and peaceful. It's a place with sophisticated taste of socialites and high profile personalities.

- Snooker Tables
- Tennis Court
- Badminton Court
- Out-door Games
- Sauna Bath
- Fitness Center
- Aerobics
- Gymnasium
- Jacuzzi
- Out-door Movie Theater
- Banquet Hall
- Coffee Shop
- Business Center
- Ball Room
- TV Room
- Library
- Nature Care Center
- Meditation
- Yoga
- 30 Well designed rooms
- Permit room
- Affiliated to chain of International Clubs
- Health Centre
- Internet Kiosk

Environment Conservation
- Diverse avenues to build up ones mind, body and soul
- Beautiful Parks
- Jogging tracks
- Kids play area
- Swimming pool
- Rain water harvesting

Inaugural Offer Rs. 3219/- Sq.ft.

A Completely Different World

EVP Housing Chennai Pvt. Ltd.
Turning dreams into reality

No.23, Sir Thiyagaraya Road, Pondy Bazaar, T. Nagar, Chennai - 600 017. India.
Phone : 4550 6262, 4550 6272
Mobile : 98407 86209 / 99400 99789
99401 54488 / 93809 42592
9841069417
Email : sales@evpgroupchennai.com
Website : www.evpgroupchennai.com


SITE VISIT : 9.30 am to 3.30 pm on all days

Commercial Complex • Group Housing • IT Park • Flats at Delhi • Chennai • Mumbai

வண்ணக் கோலங்கள்



– கலைச்செல்வி பிச்சை, பெரம்பலூர் மாவட்டம். 17 – 7 (சந்துப் புள்ளி)



– பி. சுசீலா, கோவை – 47.
29 – 5 வரை 5 வரிசை (நேர்ப் புள்ளி)



– நிர்மலா கோபாலகிருஷ்ணன்,
தூத்துக்குடி.



– எஸ். பத்மாவதி சுப்பையன்,
பட்டுக்கோட்டை.
(15–8) இடைப்புள்ளி



– காசி. க. நிர்மலா பிரேம் ஆனந்த்,
மயிலாடுதுறை.
15 – 7 (சந்துப் புள்ளி)





கேட்டவரம் தரும்



ஸ்ரீ கணேச காயத்ரி (காரியங்கள் வெற்றி பெற)
ஓம் வக்ரதுண்டாய வித்மஹே லம்போதராய தீமஹி
தன்னோ தந்தி ப்ரசோதயாத்



ஸ்ரீ ஹனுமான் காயத்ரி (காரியத் தடை நீங்க)
ஓம் அஞ்ஜனீஸுதாய வித்மஹே வாயுபுத்ராய தீமஹி
தன்னோ ஹனுமத் ப்ரசோதயாத்



ஸ்ரீ ராம காயத்ரி (மனநிம்மதி கிடைக்க)
ஓம் தாசரதாய வித்மஹே சீதாவல்லபாய தீமஹி
தன்னோ ராம ப்ரசோதயாத்



ஸ்ரீ கிருஷ்ண காயத்ரி (குழந்தை செல்வம் உண்டாக)
ஓம் தேவகி நந்தனாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி
தன்னோ கிருஷ்ண ப்ரசோதயாத்



ஸ்ரீ ருத்ர காயத்ரி (பித்ரு சாபம் அகல)
ஓத் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி
தன்னோ ருத்ர ப்ரசோதயாத்

மேற்கண்ட எளிய ஸ்லோகங்களை மனப்பாடம் செய்வது சுலபம். பயணம், வாக்கிங், சமைக்கும்

காயத்ரி மந்திரங்கள்



ஸ்ரீ லக்ஷ்மி காயத்ரி (செல்வம் பெருக)

ஓம் மஹாதேவ்யைச வித்மஹே விஷ்ணு பத்னையச தீமஹி

தன்னோ லக்ஷ்மி ப்ரசோதயாத்



ஸ்ரீ சரஸ்வதி காயத்ரி (படிப்பு வர)

ஓம் ஐம் வாக்தேவ்யைச வித்மஹே காமராஜாயை தீமஹி

தன்னோ தேவி ப்ரசோதயாத்



ஸ்ரீ காமதேனு காயத்ரி (எல்லா வளமும் கூட)

ஓம் ஸுபகாயை வித்மஹே காமநாத்ரியைச தீமஹி

தன்னோ தேனு ப்ரசோதயாத்



கௌரி காயத்ரி (திருமணத் தடை நீங்க)

ஓம் ஸுபகாயை வித்மஹே காமமாலின்யை தீமஹி

தன்னோ கௌரி ப்ரசோதயாத்



ஸ்ரீ சத்யசாயிபாபா காயத்ரி (நினைத்ததைப் பெற்றிட)

ஓம் பர்த்தீசாய வித்மஹே ஸாயிராமாய தீமஹி

தன்னோ குரு ஸாயி ப்ரசோதயாத்

போது, தோட்ட வேலை செய்யும் போது என எந் நேரமும் ஜபிக்கலாம். நினைத்தது நிறைவேறும்!

– வி. சிந்து, பெங்களூர் – 56.

ஆஹா 50!



எப்போதாவது உபயோகிக்கும் ஷூக்களில் நாப்தலின் உருண்டைகளைப் போட்டு வைத்தால் பூச்சிகள் அண்டாது.

- வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி.

கழிவறை, ஃப்ளஷ்-டாங்கில் புதிதாக பாதி, முழு டாங்க் என்று இருவகை வந்துள்ளன. அடிக்கடி உபயோகப்படுத்தும் பொழுது பாதி டாங்கை உபயோகப்படுத்தினால் நிறையத் தண்ணீர் மிச்சமாகும். தண்ணீர்த் தட்டுப்பாடு நீங்கும்.

- உமா சுந்தரம், திருவனந்தபுரம்.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

"நீ அழகா இருக்கே!"

நமக்குத் தெரிந்தவர்களோ, நண்பிகளோ, புதிய அல்லது அழகான புடவை அணிந்திருந்தால், "இந்தப் புடவை அழகாக இருக்கிறது" என்று சொல்லாமல், "இந்தப் புடவையில் நீ அழகாக இருக்கிறாய்" என்று சொன்னால் உள்ளம் குளிருமே!

- சீதா மார்ஷெல், செம்பூர்.

ஜவ்வரிசியை வெறும் வாணலியில் வறுத்து மிக்ஸியில் மாவாக்கிக் கொள்ளவும். இந்த மாவில் கஞ்சி வைத்துச் சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு 'சட்' என நிற்கும்.

- பி. ருக்மணி, சேலம் - 5.

வெண்டைக்காய்ப் பிஞ்சை அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு போகும்.

- ஆர். ஹேமாவதி, மும்பை - 103.

மின்சார, டெலிஃபோன் மெயின் பாக்ஸ் அருகில் சிறுநீர் கழித்து இடத்தை அசிங்கம் செய்கிறார்கள். இதில் ரிப்பேர் என்றால் அங்கு அமர்ந்து எப்படி வேலை செய்வார்கள். அந்தோடு சுகாதாரக்கேடும் அல்லவா? அதைச் சுற்றி கம்பி கேட் போட்டால் சௌகரியமாக இருக்கும். ரிப்பேர் செய்பவர்களும் மனிதர்கள்தானே!

- ஷ. மகாலக்ஷ்மி, சென்னை - 17.



ஹலோ டாக்டர்!

ஒரு டாக்டர் நம்மிடம் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். அவர் இன்முகத்துடன் இருக்க வேண்டும்; நம் பிரச்னைகளை நம் முகம் பார்த்துக் கனிவுடன் கேட்க வேண்டும் என பட்டியலே வைத்துள்ளோம். ஒரு நோயாளி டாக்டரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் தெரியுமா?

- டாக்டர் அறைக்குச் சென்றவுடன் 'வணக்கம்' கூறுங்கள்.
- டாக்டர் ஸ்டெதஸ்கோப் வைத்துப் பார்க்கும்போதும் மருந்து எழுதும் போதும் பேசாதீர்கள்.
- கூட்டமாகச் செல்வதைத் தவிருங்கள்.
- அலர்ஜி தரும் விஷயங்களை முதலிலேயே சொல்லி விடுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த மாத்திரைகளின் பெயர்களைக் கூறி, டாக்டர் த்ரும் மருந்தை விடச் சிறந்ததா என கேட்பதைத் தவிருங்கள்.
- டாக்டரை கோயிலிலோ, கடைத் தெருவிலோ சந்திக்கும் போது, நீங்கள் குணமாகி விட்டதையும் அவருடைய கைராசியையும் 'வளவள' என்று பேசாதீர்கள். அவர் குடும்பத்துடன் செலவிடும் நேரத்தை வீணாக்காதீர்கள். ஒரு 'ஹலோ'வும் 'ஐயாம் ஆல் ரைட்' மட்டுமே போதும்!

\- லட்சுமி பாலசுப்ரமணியம், உள்ளகரம்.

நினைத்த நேரத்தில் தீபாவளி, பொங்கல்!

நம் பெண்கள்/ பிள்ளைகள் படிப்பிற்காகவோ அல்லது வேலைக்காகவோ வெளிநாடுகளுக்கும் வெளியூர்களுக்கும் சென்று விடுகிறார்கள். எல்லோரும் சேர்ந்து பண்டிகைகளை ஒன்றாகக் கொண்டாட முடிவதில்லையே என்று ஏக்கமாகத்தான் இருக்கும்.

வெளிநாட்டிலிருந்து அவர்கள் விடுமுறையில் நம்முடன் தங்க வரும்போது, சில முக்கியமான பண்டிகைகளை அந்த ஒருசில நாட்களில் நாம் கொண்டாடலாமே!

வாரம் இரண்டு, மூன்று பண்டிகைகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள். அந்தந்த பண்டிகைகளுக்கு செய்யும் விசேஷ சமையல் வகைகளை அந்த நாட்களில் செய்யுங்கள். உதாரணமாக, ஒருநாள் பொங்கல் கொண்டாடுங்கள். சமையலில் பொங்கல், வடை, பலவித காய் போட்ட கூட்டு செய்யுங்கள். மற்றொரு நாள், பொரி உருண்டைகள், அப்பம் எல்லாம் செய்து வீடு முழுவதும் அகல் விளக்கேற்றி கார்த்திகை தீபம் போல் கொண்டாடுங்கள். தீபாவளி சமயத்தில் விற்கப்படும் பட்டாசுகளை வாங்கி பத்திரமாக வைத்திருந்து, அவர்களுடன் கொளுத்தி தீபாவளி கொண்டாடுங்கள். வீடு முழுவதும் கிருஷ்ணர் கால் போட்டு கிருஷ்ணா ஜெயந்தி கொண்டாடுங்கள்.

இதனால், அவர்களுக்கும் நம் பழக்க வழக்கங்கள் மறக்காமல் இருக்கும். நமக்கும் சந்தோஷமாக இருக்கும்.

— எம். நளினி, மும்பை.



தேவையான பொருள்கள் :

சாக்ஸ் - 1 ஜோடி [விருப்பமான நிறத்தில்]
பழைய நோட்டு புக் - 1,
ஆடியோ கேசட் - 1,
கத்தரிக்கோல்
ஸ்டிக்கர் பொட்டு
சாட்டின் ஹார்ட்டின் [தொப்பியை அலங்கரிக்க].

எப்படித் தயாரிப்பது?

உபயோகப்படுத்திய சாக்ஸ் அல்லது புது சாக்ஸ் எடுத்துக் கொண்டு மேற்புறமும், கீழ்ப்புறமும் வெட்டவும். அதில் ஏதாவது ஒரு பகுதியை பொம்மைக்கு 'கேப்' (Cap) ஆக உபயோகப் படுத்திக் கொள்ளலாம்.


சாக்ஸின் ஒரு பகுதியில் ஒரு நூலிழையைப் பிரித்தால், நூல் மாதிரி பிரிந்து கொண்டே வரும். அதை நோட்டுப் புத்தகத்தில் ஒரே அடுக்காக சுற்றவும். (1½சாக்ஸ் அளவுக்குச் சுற்றவும்).

மீதமுள்ள ½ சாக்ஸை பழைய கேசட் அல்லது ஹேண்ட் டயரி மீது இதே மாதிரி சுற்றவும். இது கைப் பகுதியைச் செய்வதற்கு உதவும்.



விலை உயர்ந்த சாக்ஸ் எல்லாம் வாங்கத் தேவையில்லை. ஜோடி ரூ. 10 என பிளாட்ஃபார்மில் விற்பதே போதும். அழகான ஏஞ்சல் டால் தயாரித்து மகிழலாம்.







புஸு புஸு சாக்ஸ் பொம்மை!





பெரிய நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு, அதில் அதிகமான சாக்ஸ் நூலைச் சுற்றினால் பெரிய பொம்மை கிடைக்கும். நமக்கு வேண்டுமென்கிற அளவுக்குத் தகுந்த மாதிரி சிறிய, பெரிய நோட்டுப் புத்தகத்தில் சுற்றி பொம்மையின் அளவை அதிகரிக்கலாம், குறைக்கலாம்.

அனைத்து சாக்ஸையும் சுற்றி முடித்த பிறகு கத்தரிக்கோலால் நடுவில் வெட்டவும். இரண்டாக மடித்து, மேற்புறம் நூலால் முடிச்சு போடவும். அதன் நடுவே கத்திரியை நுழைத்து வெட்டினால் தலைமுடியாக அழகாக விரிந்து விடும். அதற்குக் கீழ் கொஞ்சம் இடம் விட்டு நூலால் முடிச்சு போல கட்டவும்.



அப்படியே பிரித்து வைத்தால் பாவாடையாக விரியும்.

தலையின் மேற்புறம் தொப்பியை ஒட்டவும்.

கேசட்டில் சுற்றியுள்ள சாக்ஸை இதே மாதிரி வெட்டி மடித்து இரு ஓரங்களிலும் நூலால் கட்டி உடம்பின் நடுப்பகுதியில் நுழைத்து வெளியே இழுத்தால் இருபுறமும் கைகள் நீண்டு விடும்.

அதுதான் முகம். அதில் கண், மூக்கு, வாய் என ஸ்டிக்கர் பொட்டுக்கள் வைக்கவும். அதற்கும் கீழே, சிறு இடம் விட்டு, முடிச்சுப் போட்டால் உடல் பகுதி வந்து விடும். மீதம் உள்ளதை,

வெறும் ஐந்து அல்லது பத்து ரூபாயில் அழகான பரிசுப் பொருள் தயார். இதை ஐம்பது ரூபாய் வரை விற்கலாம். சாக்ஸில் செய்த பொம்மை என்றே தெரியாது.

புஸுபுஸு ஏஞ்சல் பொம்மையை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?

- சுதா செல்வகுமார்

படங்கள் : ஸ்ரீஹரி



நிசப்தம்!

''தற்காலிகக் காது கேட்கும் கருவி பொருத்தியிருக்கேன். இது சரியாக இருந்தால், நிரந்தர 'ஹியரிங் எய்ட்' பொருத்திக்குங்க'' என்றார் காது நிபுணர். இரைச்சல் கூட சுநாதமாக ஒலிக்க, வீடு திரும்பினார் கணபதி.

படியேறும் போது மருமகள் மகனிடம் பேசுவது கேட்டது.

''இங்கே என்ன பணம் கொட்டிக் கிடக்கிறதா? கிழத்திற்கு காது கேட்காவிட்டால் என்ன?''

அறைக்குள் சென்று கருவியைக் கழற்றி வைத்தார். வெளியில் வந்த போதும் மருமகளின் வசவு தொடர்ந்து கொண்டிருந்தது. என்ன ஆச்சரியம்! கணபதிக்கு அவள் பேசுவது துல்லியமாகப் புரிந்தது. பிறகென்ன? காது கருவி வேண்டாமென முடிவெடுத்தார்.

'நிசப்தமான புதிய' உலகம் அவரை வரவேற்றது!

- மீரா கணேஷ், மும்பை.



ஆஹா 50!

பள்ளி விடுமுறையான ஏப்ரல், மே மாதங்களில் அநேகமாக இந்தியா முழுவதும் சுட்டெரிக்கும் வெயில்தான். விடுமுறையை நவம்பர் டிசம்பர் மாதங்களில் கொடுத்தால் சுற்றுலா செல்ல நன்றாக இருக்குமே! பள்ளி நிர்வாகிகள் கவனிப்பார்களாக.

- ஆர். ஜானகிராம், பெங்களூர்.

புளிப்பான தயிரில் சிறு சிறு தேங்காய்த் துண்டுகளைத் துருவிப் போட்டால் புளிப்பு குறைந்து விடும். தயிர் சுவையாக இருக்கும்.

- பி.ஜி. குருசாமி பாண்டியன், கிருஷ்ணன் கோவில்.

இவை எப்போமே ஆஹா 50 தான்!

ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் பிள்ளைகளிடம் பேச வேண்டிய விஷயங்களைக் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டால் காயின் ஃபோனில் அவர்கள் தொடர்பு கொள்ளும் சமயங்களில் 'நறுக்' என குறைந்த காலவரைக்குள் எதுவும் விட்டுப் போகாமல் பேச முடியும்.

- எஸ். மாலதி, முசிறி.

சம அளவில் கஸ்தூரி மஞ்சள், கார்போகத்து அரிசி, சுசுசாவை தூள் செய்து வைத்துக் கொண்டு அந்த மாவைத் தேய்த்துக் குளித்தால் சரும நோய் அண்டாது.

- ஆர். வேம்பு, ஸ்ரீரங்கம்.

தலைமுடி வளர...

வெயிலில் வெளியே சென்று விட்டு வரும்போது முகம் கறுத்து விடும்! அதனைத் தவிர்க்க, ஐஸ் கட்டியைச் சிறிது நேரம் முகத்தில் தேய்த்தபின் கழுவினால் சருமம் புத்துணர்வு கொள்ளும்.

- சி. கஸ்தூரி, தாரமங்கலம்.

கவரிங் நகைகளை நியூஸ் பேப்பரில் மடித்து வைத்து உபயோகித்தால் பளபளப்பு மாறாது இருக்கும்.

- லதா ஷங்கர், கல்கத்தா.


DHIRSHTAM
LOWEST PRICE GUARANTEED
FREE ASTROLOGY Consultant
NARAYANA
pearls & gems
MAIN SHOW ROOMS: KASI ARCADE, Next to GRT Hotel, 116, Thyagaraya Road, T.Nagar, Chennai - 17. Ph: 044 - 2815 3457 / 5824
COIMBATORE

மூலிகை மந்திரம் - 4



"இதென்ன உங்க வீட்டுல வினோதமா கீரைப் பந்தல்...?" காயத்ரி கேட்டாள்.

"இது சாதாரண கீரை இல்ல... கொடிப் பசலைக் கீரைப் பந்தல்... இந்த சம்மருக்கு நாங்க ஏசியே போட்டுக்கறதுல்ல; இந்த பசலைக் கீரைப் பந்தல், வெயிலை வடிகட்டி எங்க வீட்டை குளுகுளுன்னு ஆக்கியிருக்கு தெரியுமா...?" - மீனாவுக்கு ஒரே பெருமை!

"ஏதாச்சும் மூலிகை மருத்துவம் பார்க்க ஆரம்பிச்சுட்டியான்ன?" - மீனாவுக்குச் சந்தேகம்.

"ஏன்... ஏன்... பார்க்கக் கூடாது? உங்கப்பாவுக்கு பித்தப் பையில கல்லுனு வந்து எவ்வளவு கஷ்டப்பட்டாரு...? இந்த பசலைக் கீரை சாப்பிட்டா... வயத்துல, சிறுநீரகத்துல கற்களோ... கட்டிகளோ வராதுன்னு தெரியுமா உனக்கு...?"

"அப்படியா? நீங்க ஏதாவது ரெஸிபி சொல்லேன்!" என்று ஆர்வத்துடன் கேட்டாள் காயத்ரி...

பந்தலிலே பசலைக்கீரை!

பசலைக் கீரை சாதம்

பசலைக் கீரை - 1 கட்டு,
மிளகு - ½ ஸ்பூன்,
சீரகம் - 1 ஸ்பூன்,
உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்,
பெருங்காயம் - சிறிது.

கீரையைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நெய்யில் வறுக்கவும். அதே வாணலியில் பொடியாக நறுக்கி சுத்தம் செய்த பசலைக் கீரையைப் போட்டு ஓரிரு நிமிடங்கள் வதக்கவும். வறுத்ததைப் பொடி செய்து இதில் கலக்க வும். பின் சூடான சாதத்தில் நெய் ஊற்றி கீரைக் கலவையைப் பிசைந்து சாப்பிடவும்.

பசலைக் கீரை துவையல்:

பசலைக் கீரை நறுக்கியது - 2 கப்,
மிளகாய் வற்றல் - 5
வெந்தயம் - ½ ஸ்பூன்,
பெருங்காயம் - சிறிது.

மிளகாய் வற்றல், பெருங்காயம், வெந்தயம் இவற்றைச் சிவக்க வறுக்கவும். அடுப்பை அணைத்து விட்டு, அந்தச் சூட்டிலேயே பசலைக் கீரையை வதக்கவும். பிறகு நெல்லிக்காய் அளவு புளி, உப்பு சேர்த்து துவையலாக அரைக்கவும்.

டிப்ஸ்...டிப்ஸ்...டிப்ஸ்...

ராஜம் முரளி

ஆரோக்கியத்துக்கு ...

● உடம்பு சூட்டுக்கு மட்டுமில்லீங்க! மலச்சிக்கலுக்கும், பசலைக் கீரை உணவுதான் மிகச் சிறந்த மருந்து!

● தாய்ப்பால் சுரக்கவும், தாம்பத்திய உறவுக்கும் பசலைக் கீரை உதவுகிறது.

● வெயில் பயங்கரமாகக் காயும் நாட்களில் மெல்லிய துணியில் பசலைக் கீரை இலைகள் போட்டு தலையோடு கட்டிக் கொண்டால் சன் ஸ்ட்ரோக் தலை வலி வரவே வராது!



அழகுக்கு...

● பசலைக் கீரை இலையைக் கிள்ளி வந்து தண்ணில போட்டு கையால நல்லா கசக்கினா 'வழவழ'ன்னு ஒரு ஜெல் மாதிரி வரும்.. இந்த ஜெல்லை வடிகட்டி அதோட 1 டீஸ்பூன் சிவப்பு சந்தனப் பவுடர், 1 டீஸ்பூன் வெள்ளரி விதைப் பவுடர் (இரண்டுமே நாட்டு மருந்துக் கடையில கிடைக்கும்) கலந்து முகத்துல மிருதுவாகத் தேய்ங்க... ஒரு அஞ்சு நிமிஷம் ஊறினால் போதும்... குளிர்ந்த தண்ணில முகத்தைக் கழுவினா... வெயில் கறுப்பெல்லாம் ஓடியே விடும்!

● பசலைக் கீரையில ஜெல் எடுக்கறோமே, அதில் நல்லெண்ணெயும் நாலஞ்சு மிளகும் (மூக்கடைப்பு வராம இருக்க) போட்டுக் காய்ச்சி எண்ணெய் தேய்ச்சுக் குளிச்சா... அதிக சூடு உள்ள உடம்புக்கு ரொம்பவே நல்லது...!

● சுத்தமான பளபள கூந்தல் வேண்டுமா...?

பசலைக் கீரை இலை ஐந்து, செம்பருத்தி இலை 5, பூங்கங்கொட்டையில் கொட்டை நீக்கியபின், 5 கொட்டைகளின் தோல் (நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும்) பயத்தம் பருப்பு 1 டீஸ்பூன் எல்லாம் எடுத்துக்குங்க...

பூங்கங்கொட்டை தோலையும், பயத்தம் பருப்பையும் முதல் நாள் இரவே ஊறவைச்சு, அடுத்த நாள் கீரை இலை, செம்பருத்தி இலையோடு சேர்த்து அரைக்கவும். அரைத்த விழுதை தலையில் போட்டுச் சிறிது நேரம் ஊறவைத்து பின் வெறும் நீரில் அலசவும். (ஷாம்பூ, சீயக்காய் தேவையில்லை) சுத்தமான பளபளப்பான கூந்தலுக்கு பசலைக் கீரை கியாரண்டி!

தொகுப்பு :

பத்மினி பட்டாபிராமன்

படம் : ஸ்ரீஹரி

திருவார்த்தை சொர்க்கம்!

● பட்டப் பெயர்களும் - விளக்கமும் மற்றும் 'கற்றுலா சகுந்தலா' படித்து சிரித்துச் சிரித்து வயிறு வலித்தது. மரியாதையாக மருத்துவ செலவுக்குப் பணம் அனுப்பவும்.
சிதம்பரம், என். காளிதாஸ்.





● 'விழ்வது அவமானமில்லை, தோல்வியில் துவளவே கூடாது' என்று உணர்த்திய 'ஒரு வார்த்தை' பக்கம் இரு வார்த்தைச் சொர்க்கம்.
தேவகோட்டை, எம். அட்சயா.

● மங்கையர் மலர் இதழை வேண்டியவர்களுக்கு இரவலாகத்தரக் கூட பயமாக இருக்கிறது. பத்திரமாகப் பாதிப்பின்றி திரும்ப வேண்டுமே! (இரண்டு புத்தகமாக வாங்கி விட வேண்டியதுதானே சந்திரா! - ஆர்.)
நாகப்பட்டினம், நாகை சந்திரா.



● தேன் தமிழ் எழுத்தாளர் தேவிபாலாவின் 'அமாவாசை நிலவு' ஆரம்பமே அசத்தி விட்டது. ஒவ்வொரு ஜீவராசியும் காட்ட வேண்டிய முதல் நன்றியும் செலுத்த வேண்டிய முதல் காணிக்கையும் தாய்க்குத் தான் என்ற வரிகள் தாயில்லா என் மனதை உருக்கி விட்டது. அடுத்து என்ன நிகழும்? ஆவலைத் தூண்டும் தொடர். பாராட்டுக்கள்.
திருவண்ணாமலை,
உமாதேவி பலராமன்.

● ஆஹா டிப்ஸ் 50களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திட்டீங்களே! இம் மாதம் 54 டிப்ஸ்கள் உள்ளனவே!
கடலூர், க. இந்துமதி.

● தஞ்சை சகாவின் 'சுமை' கவிதை விழிகளை ஈரமாக்கி விட்டது.
தேளூர், ந. பார்வதி சௌந்தர்ராஜன்.

● மினி கல்கி பக்கங்கள் ருசியே தனிதான்!
இசையன்விளை,
ஆர்.ஜி. அம்பிகைராமன்.

● 'விடுமுறை' ஸ்பெஷல் பிரமாதம்! மங்கையர் மலரின் தரத்தை வைத்துப் பார்த்தால் பதினெட்டு ரூபாய் என்பது மிகக் குறைவுதான்.
மேலகிருஷ்ணன்புதூர், கே.எல். சபாக்கனி.

● மாதந்தோறும் மங்கையர் மலர் மாத இதழை மனப்பூர்வமாக வாங்கிப் படித்து விமர்சித்து வருகிறேன். ஏறத்தாழ 10 மாதமாகியும் கிராமத்து பகுதியிலிருந்து வரும் கடிதம் என்று அதனை குப்பையில் தூக்கி எறிந்து விடுகிறீர்களோ என்னவோ? மங்கையரை, மலர் கொடுத்து வரவேற்கும் இந்த இதழ் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமேயாகும்.
எரகுடி, ஆர். இராஜேஸ்வரி ராமகிருஷ்ணன்.

● கோதுமை மாவுடன் சுக்குப் பொடி ஓமம் சேர்த்து பிசைந்து சப்பாத்தி செய்தேன். பிரமாதம். 64 ரத்தினங்கள் பதித்த மாலையை, சாந்தி பலராமனுக்குப் பரிசளியுங்கள்!
காரைக்குடி - 2, திலகம் இராமச்சந்திரன்.

கொங்கு நாட்டுச் சமையல்!



அரிசி பருப்பு சாதம்

சுமார் 15ம் நூற்றாண்டு முதல் கொங்கு மண்டலத்தில் வழக்கத்தில் உள்ள இந்த உணவை 'அரிசி பருப்பு சாதம்' என்று அழைப்பர். இன்றும் இந்த வகை சாதம் திருப்பூர், காங்கேயம், பல்லடம் ஆகிய ஊர்களில் பிரபலம். பெரும்பாலும் கல்யாணம் மற்றும் வளைகாப்பு ஆகிய வைபவங்களில் இது பிரதானமான உணவாகப் பரிமாறப் படுகிறது. கொங்கு மண்டலத்தில் விவசாயம் பிரதானமானத் தொழிலாக இருப்பதால் அறுவடையான புத்தம் புது பருப்பு வகையைக் கொண்டு இந்த சாதத்தைச் செய்து, சாமிக்குப் படையல் செய்வது வழக்கம்.

இந்தச் சாதத்தை குழம்போ அல்லது வேறு எதுவுமோ தொட்டுக் கொண்டு சாப்பிடத் தேவை

கமகமக்கும் கொங்கு நாட்டுச் சமையலை ஆரம்பிச்சாச்சு! கோவை, கரூர், பொள்ளாச்சி, ஈரோடுனு நாங்களே உங்க வீட்டுக்குத் திடீர் விசிட் அடிச்சு... உங்க கைவண்ணத்தைக் கேட்டு எழுதவும் கூடும். தயாரா இருங்க!



அரிசி பருப்பு சாதம் செய்யத் தேவையான பொருள்கள் :

காராமணி பருப்பு - 1 கப் (வேகவைத்தது),
பச்சைப் பயறு - 1 கப் (வேகவைத்தது),
துவரம் பருப்பு - 1 கப் (வேகவைத்தது),
உப்பு - தேவையான அளவு,
மஞ்சள் தூள் - ¼ டீஸ்பூன்,
நெய் - 2 கப்,



ருசியோ... ருசி-6

யில்லை. ஏனெனில் 'வெண் பொங்கல்' போல, இந்தச் சாதமும் அரிசி, பருப்பு, மசாலாப் பொருட்கள் சேர்த்து சிறிதே குழைய சமைத்த பதார்த்தமாகும். ஆனால் காங்கயம் பகுதிகளில் இதனை உதிரி உதிரியாக பிரியாணி போலவும் செய்கின்றனர். சில பகுதிகளில் வெங்காயம் சேர்க்காமலும், சிலர் தக்காளி மற்றும் பூண்டு சேர்க்காமலும் செய்வர்.

தக்காளி - ¼ கிலோ (நான்காக வெட்டியது),
வெங்காயம் - ¼ கிலோ (சிறிதாக வெட்டியது),
மிளகாய் - 6 ,
மிளகுத் தூள் - 1 டீஸ்பூன்,
கறிவேப்பிலை - தேவையான அளவு.
துருவிய தேங்காய் - 1 கப்,
சீரகசம்பா அல்லது பொன்னி அரிசி - 2 கப்,
கடுகு, உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்.

செய்முறை :

1. குக்கர் அல்லது அடிகனமான பாத்திரத்தைச் சூடாக்கவும்.

2. நெய் விட்டு காய்ந்ததும், கடுகு, உளுத்தம் பருப்பு தாளிக்கவும்.

3. வெங்காயம், தக்காளி போட்டு நன்றாக வதக்கவும்.

4. அதில் மஞ்சள் தூள், காய்ந்த மிளகாய், உப்பு, மிளகுத் தூள் சேர்த்து வதக்கவும்.

5. நன்றாக வதங்கியதும், கறிவேப்பிலை, வெந்த பருப்பு வகைகள் மற்றும் தேவையான அளவு தண்ணீர் விட்டுக் கலக்கவும்.

6. ஒரு கொதி வந்ததும், ஊறவைத்துள்ள அரிசி மற்றும் தேங்காய்த் துருவலையும் சேர்த்து 2 விசில் வரும் படி சமைக்கவும்.

7. பரிமாறும் போது சிறிது நெய் விட்டுக் கிளறிப் பரிமாறலாம்.

நளபாக சக்கரவர்த்தி ஜேக்கப்



கொங்கு காளான் வறுவல்

இந்த ரெசிபி எனக்குக் கிடைத்தது மிகவும் சுவாரசியமான ஒன்று. சம்பவம் நடந்தது திட்டுப்பாறை என்னும் கிராமத்தில்!

பொதுவாகவே கொங்கு மண்டலத்தில் எள் மற்றும் வேர்க்

கொங்கு மசாலாப் பொடி செய்யத் தேவையான பொருள்கள் :

கசகசா - 1 டேபிள் ஸ்பூன்,

எள் (வெள்ளை) - 1 டீஸ்பூன்,

வறுத்த தேங்காய் - 5 டேபிள் ஸ்பூன்,

மஞ்சள் தூள் - ¼ டீஸ்பூன்,

நிலக்கடலை - 2 டீஸ்பூன்

(அனைத்தையும், எண்ணெய் சேர்க்காமல், வாணலியில் வறுத்து ஆறவிடவும். பின்னர் தண்ணீர் விட்டு அரைக்கவும்.)

காய் கொத்து இடியாப்பம்

கோவை மற்றும் அதன் சுற்று வட்டார ஊர்களான பெரியநாயக்கன்பாளையம், மேட்டுப்பாளையம் ஆகிய ஊர்களில் இந்த வகை இடியாப்பம் செய்வார்கள். பெரியநாயக்கன்பாளையத்தில் உள்ள சீனிவாசன் என்னும் நகைக் கடை அதிபர் ஒருவரது வீட்டில் யதேச்சையாக சாப்பிடக் கிடைத்த இந்த இடியாப்பம், நிஜமாகவே டாப் கிளாஸ்! சமைத்துப் பாருங்கள்!

தேவையான பொருள்கள் :

இடியாப்பம் - 3 கப் (நூடுல்ஸ் போல ஓரஸானதாக)

பட்டை, கிராம்பு, ஏலம் - தலா ஒன்று,

காரட் - 1 கப்,

பீன்ஸ் - 1 கப்,

காலிஃபிளவர் - 1 கப்,

பட்டாணி - 1 கப் (சிறிதாக வெட்டி உப்பு சேர்த்து வேகவைத்தது)

கொத்துமல்லி - 3 டீஸ்பூன் (சிறிது சிறிதாக வெட்டியது),

கொங்கு மசாலா - 4 டேபிள் ஸ்பூன், (கொங்கு காளான் வறுவலில் உள்ளது போல)

தேங்காய் எண்ணெய் - 100 மில்லி.

கடலை மிகவும் அதிகமாகப் பயிரிடப்படு கிறது. ஈரோடு மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் மஞ்சள் அமோக விளைச் சலைத் தரும். காங்கேயம் மற்றும் அதன் சுற்றுப்புற ஊர்களில் தேங்காய் எண்ணெய் மற்றும் அரிசி ஆலைகள் அதிகமாக உள்ளன. கொங்கு மண்டலத்தில் சமையல் காண்ட்ராக்ட்டுகள் செய்யும் சமையல்காரர் களை 'பண்டாரம்' என்றழைப்பர். அப்படிப் பட்ட ஒரு சமையல்காரர் என்னிடம் கூறியது, ''ஏன் சார் எத்தனையோ சமையல் பொடிகள் பழக்கத்தில் உள்ளன. ஆனால் அனைத்தும் ஒரு முழு பதார்த்தத்தை செய்ய ஏதுவாக இல்லை என்கிறீர்கள். நீங்களே ஏன் ஒரு பொடியைக் கண்டுபிடிக்கக் கூடாது? அதுவும் கொங்கு மண்டலங்களில் விளையும் பொருட்களைக் கொண்டு?'' என்றார்.

அவ்வாறு பிறந்ததே கொங்கு மசாலா பொடி. அதைக் கொண்டு செய்ததே இந்தக் காளான் வறுவல்.

காளான் - 2 பாக்கெட் (பாதியாக வெட்டியது),

மைதா மாவு - 3 டேபிள் ஸ்பூன்,

உப்பு - தேவையான அளவு

செய்முறை :

1. அரைத்த மசாலாவை, மைதா, உப்புடன் சேர்த்து, சிறிது நேரம் ஊறவிடவும்.

2. பின் வெட்டி வைத்துள்ள காளான் துண்டுகளைப் போட்டு நன்றாகப் பிசறி, வெயிலில் காயவைக்கவும்.

3. சூடான எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

சுவையான கொங்கு காளான் வறுவல் ஆளை மயக்கும்.



நளபாகப் போட்டி - 5 (முடிவு)

மே 2007ல் இடம்பெற்ற போட்டியின் விடை :

விடை : 1. கமலா, 2. சீதா, 3. மாதுளை, 4. மா, 5. ஆப்பிள், 6. திராட்சை, 7. பலா, 8. வாழை, 9. நாவல், 10. சப்போட்டா

வந்து குவிந்த கூப்பன்களில் ரூ. 150/- பரிசு பெறும் 20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்!

1. சுலோசனா, சென்னை - 90, 2. கே. சுமதி, தஞ்சாவூர், 3. சித்ரா சீனிவாச ராகவன், தில்லைகங்கா நகர், 4. டி. நிர்மலா தேவி, பம்மல் - 75, 5. கங்கா, வளசரவாக்கம், 6. மீனா ஈஸ்வரன், பெங்களூர், 7. அ. தமிழ் இனியன், பெரம்பலூர், 8. சீதா, வெள்ளக்கோவில், 9. சித்ரா மனோகர், நியூடெல்லி, 10. சுமனோன்மணி, திருச்சி - 21, 11. செண்பகவல்லி, தூத்துக்குடி, 12. ஆர். பிரபாவதி தேவி, தஞ்சாவூர் - 1., 13. ஆர். சுமதி, சென்னை - 20, 14. சாவித்திரி கிருஷ்ணன், பெங்களூர், 15. கே. செந்தில்குமாரி, கரூர்-1, 16. சு. இந்துமதி, விழுப்புரம், 17. என். வசுமதி, சேலம் - 8, 18. சு. வளர்மதி, கன்னியாகுமரி மாவட்டம், 19. எஸ். சாவித்திரி, கும்பகோணம், 20. எஸ். சுஜலஷ்மி, சென்னை - 39

காய் மசாலா இடியாப்பம்

செய்முறை :

1. வாணலியில் தேங்காய் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், அதில், கொத்துமல்லி, வெந்த காய்கறிகள், கொங்குமசால், உப்பு அனைத்தையும் போட்டு, மிதமான தீயில் வேகவிடவும். அவ்வப்போது தண்ணீர் தெளிக்கலாம்.

2. நன்றாக வெந்ததும், இறக்கி ஆறவிடவும்.

3. மீண்டும் வாணலியில் தேங்காய் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், பட்டை, கிராம்பு, ஏலக்காய் போட்டுப் பொரிக்கவும்.

4. அதில் காய்கறி மசாலாவைப் போட்டு வதக்கி, செய்து வைத்துள்ள இடியாப்பத்தைப் போட்டுக் கிளறவும்.

5. நன்றாக மசாலா கலந்தவுடன், இறக்கிப் பரிமாறவும்.

6. இதற்குத் தொட்டுக் கொள்ள சட்னியோ, குழம்போ தேவையில்லை.





ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் இடத்தின் பெயர் என்ன என்பதை முதலில் கண்டுபிடியுங்கள். கீழே உள்ள பட்டியலில் உள்ள தின்பண்டங்களில் எதெது எந்த இடத்துடன் இணைத்து வழங்கப்படுகின்றன என்பதை அடுத்ததாகக் கண்டுபிடித்து இரண்டையும் சேர்த்து எழுதுங்கள்.

உதாரணம் - கர்நாடக மாநிலத்தின் முந்தைய பெயர் மைசூர். இதை 'பாகு' என்பதுடன் இணைத்தால் கிடைப்பது 'மைசூர்பாகு'.

1. கர்நாடக மாநிலத்தின் முந்தைய பெயர் மைசூர்பாகு
2. மேற்கு வங்காளத்தின் தலைநகர் ....
3. ஏழுமலை ....
4. வீரபாண்டிய கட்டபொம்மனின் மாவட்டம் ....
5. ஏகாம்பரேஸ்வரரும், வரதராஜப் பெருமாளும் அருள்புரியும் நகரம் ....
6. பாகிஸ்தான் சொந்தம் கொண்டாடும் இந்தியப் பகுதி ....
7. மும்பை முன்பு ஆங்கிலத்தில் இப்படி அழைக்கப்பட்டு வந்தது ....
8. மாட்டுக்குப் பெயர் போன இடம் ....

மேற்கூறிய ஊர்களுடன் பொருத்தமாக இணைக்கப்பட வேண்டிய வார்த்தைகள் - அல்வா, புலாவ், முறுக்கு, காஜா, லட்டு, ரசகுல்லா, இட்லி, பாகு.

- ஜி.எஸ்.எஸ்.

இங்குள்ள புதிரைச் சரியாக நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!

கடைசித் தேதி : 15.6.2007

உறையின் மீது நளபாகப் போட்டி - 6 என்று குறிப்பிடவும்.
ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....

கண்டால் கவரும் காந்தம்!

1. உயரத்தில் இருப்பாள்
உண்ணும் போது அழைத்தால்
வரமாட்டாள்
கடன்வாங்கி பளபளப்பாள்
கடைசியில் ஒருநாள் காணாமல் போவாள்
— அவள் யார்?

2. வட்டமாய் இருக்கும் நிலவு அல்ல
வண்ணமாய் இருக்கும் மலரும் அல்ல
கண்டால் கவரும் காந்தம் அல்ல
கலகல சத்தம் வரும் சிரிப்பும் அல்ல
— அது என்ன?

3. கண்ணில்லாதவள் கெட்டதைக் கழிப்பாள்
கண்ணுள்ளவளோ நல்லதைக் கழிப்பாள்
ஒற்றைக் காதுள்ளவள் பிரிந்ததைச் சேர்ப்பாள்
இரட்டைக் காதுள்ளவளோ சேர்ந்ததைப் பிரிப்பாள் — அவர்கள் யார்?

4. மழைக்காலம் முளைக்கும் காளான்
மண் மீது முளைக்காத காளான்
தண்டைக் கையில்பற்றி எடுத்தால்
தலைக்கு மேலே வளர்வான்
— அவன் யார்?

5. அடுத்தடுத்து வருவார்கள்
ஆர்ப்பாட்டம் செய்வார்கள்
எதுவும் இயலாமல்
எல்லோரும் அழிவார்கள்.
— அவர்கள் யார்?

— எஸ். கவிதா,
திருநெல்வேலி — 7.

விடை :
1. நிலா, 2. கண்ணாடி வளையல், 3. முறம், சல்லடை, ஊசி, கத்தரிக்கோல், 4. குடை, 5. கடல் அலைகள்.


Prashanti-ன் புதிய Showroom
இன்னும் அழகாக, பெரிதாக!
The 'New Showroom' over 1500 sq.ft
dedicated to your favorite Silk Cottons.
PRASHANTI
House of Silk Cottons
New No 16, 6th Cross St., CIT Colony (Behind Chettiar Hall, TTK Road), Mylapore, Chennai - 600 004.
Ph: 2499 1850/ 2499 7636 (Timing: 10 a.m - 8 p.m)

ஒரு விஷயத்தைப் பற்றி ஏதும் தெரியாவிட்டால்... "சமையலா? சந்துருவுக்கா? சமையலின் ஏபிஸி கூடத் தெரியாதே!" என்பார்கள். இது கேலிதானே? செஞ்சுட்டுப் போகட்டும் ஏன்னா, எல்லோருக்கும் எல்லாம் தெரிய வேண்டிய அவசியமில்லை; வாழ்க்கையின் ஏ.பி.ஸி. கூடத் தெரியாமல் பலர் இருக்கிறார்களே?



ஏ.பி.ஸி. தெரியுமா?

அதென்ன ABC?

A என்றால் Attitude. அணுகுமுறை என்று சொல்லலாமோ? எந்த ஒரு அம்சத்திலும் ஓரளவாவது சாதக அம்சம் - பாசிடிவ் பாயின்ட் இருக்கும். அதை எண்ணி மனம் உற்சாகம் கொள்ள வேண்டும். என் நண்பர் ஒருவர் இருக்கிறார்; அரசியலிலிருந்து ஆன்மிகம் வரை, வங்கிச் சேவையிலிருந்து மியூச்சுவல் நிதி முதலீடு வரை, "எல்லாமே சீரழிந்து விட்டது! ஒரே ஃப்ராட்!" என்று விமரிசனத்தை அள்ளி வீசுவார்.

கொஞ்சம்... ஏன் அதிகமாகவே, அந்த விமரிசனத்தில் உண்மை இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் அதற்காக இதுபோன்ற பெஸிமிஸம் தேவையில்லையே. தொலைத் தொடர்பு வளர்ச்சி... மருத்துவ முன்னேற்றம் இவற்றை எண்ணி மகிழலாம்தானே? ஆக, பாசிடிவ் மனநிலை அவசியம்.

இதே 'A' இன்னொன்றையும் குறிக்கும். Aptitude. வீட்டிலே சமையல், அலுவலகத்தில் புதிய பிரிவு என செய்யும் வேலை எதுவானாலும் ஓர் ஆர்வத்தை ஆரம்பத்தில் சற்று செயற்கையாகவாவது வளர்த்துக் கொள்ளுதலும் பிடிப்பான வாழ்க்கைக்குத் தேவை.

இரண்டாவது எழுத்து 'B' இது Balance ஐக் குறிக்கும். (கை இருப்பு, வங்கித் தொகை இருப்பு) திடீர் திடீரென்று முளைக்கும் 'பந்த்'கள், முற்றும் எதிர்பாராத மெடிக்கல் செலவுகள், அவசரப் பயணம், சகலவற்றுக்கும் பணம் அவசியம்;

கணிசமான தொகை கைவசம் இருப்பது உசிதம்.

இதே பாலன்ஸ் நடுநிலைத் தன்மை என்ற அர்த்தத்தையும் தருமே? அதுவும் இந்த நாளில், வேலைக்குப் போய் வருமானத்தை அதிகரிக்கும் பெண்மணி, வீட்டையும் கவனிக்க வேண்டியுள்ளதே! ஸ்ட்ரைக் எ பேலன்ஸ். குடும்பத்திலும் அது போலத்தானே? அம்மாக்கோண்டுவாகவும் இருக்க வேண்டாம்; பெண்டாட்டிதாசனாகவும் இருக்க வேண்டாம்.

மூன்றாவது எழுத்து, C-Character நல் ஒழுக்கம். எந்த வேலை பார்த்தாலும், ஒழுக்கமாக இருப்பது. மது, மாது, புகையிலையைத் தவிர்ப்பது மட்டுமா நல்லப் பழக்கம்? முதியோர்களிடத்தில் பணிவு, குழந்தைகளை நல்லபடி வளர்ப்பது, எந்த அறிவுரையையும் வழங்கு முன் தான் ஓர் உதாரணமாக இருப்பது - எல்லாம் நல்லொழுக்கத்தின் அறிகுறிகள்.



Contentment திருப்தி அடைவது. "இருக்கிறதை விட்டுப் பறப்பதைப் பிடிப்பானேன்?" என்ற ஒரு வழக்கு உண்டு. முன்னேற... வாழ்வில் வளம் பெற, ஏதாவது சாதிக்க... ஆசை



எல்லாருக்குமே இருக்கும். ஆனால் சூழ்நிலை இடம் தராவிட்டால்? பிறருடன் ஒப்பிட்டு மனம் குமுறினால் சங்கடம்தான் ஏற்படும். என் நண்பன் ஒருவன் வயதான பெற்றோருக்காக, அமெரிக்காவை உதறி விட்டு.. இங்கு அதே கம்பெனியில் பணிபுரிகிறான். திருப்தியுடன்தான் இருக்கிறான்.

இனிமேல் யாராவது, "உனக்கு கணிப்பொறியின் ஏபிஸி கூடத் தெரியலியே?" "கார் மெகானிஸத்தில் ஏபிஸி கூடத் தெரியாதா?" என்றெல்லாம் கிண்டலாகக் கேட்டால், மனம் தளராதீர்கள். உங்களுக்குத்தான், வாழ்க்கையின் ஏபிஸி தெரிந்திருக்கிறதே?

- வாதூலன்

உங்க சண்டே

அனுஷா நடராஜன்

திலகம் இராமச்சந்திரன், காரைக்குடி-2.

டியரஸ்ட் அனுஷா! டிக்கெட் வாங்காமல் என் இதய ரயில் ஏறிய பயணியே! அன்பு வட்ட சந்திரனே! உனக்கொரு கேள்வி! அனுஷா வின் ஞாயிறு ஷெட்யூல் எப்படி? டிபனுக்குப் பிறகு தூக்கம். சாப்பாட்டுக்குப் பிறகு தூக்கம்... இப்படியா? பாக்கி வைத்த பத்திரிகை வேலை களைச் சுமப்பதா? சொல்லம்மா உன் சண்டே ஸ்பெஷலை!

இத்தனை மாசமா மாங்குமாங்குனு பதில் எழுதிக்கிட்டிருக்கோம். நம்ம இலக்கிய சேவையைப் பாராட்டி யாரும் எந்த ஒரு பட்டமோ, காத்தாடியோ தரவில் லையே என ஏங்கிக் கொண்டிருந்தேன். 'அன்பு வட்ட சந்திரன்!' அடடா! அருமை யான பட்டம்! நன்றி திலகம்!

பிஸிபேளாபாத்-அவியல், பூரி சாகு, தயிர் வடை, இப்படி கொஞ்சம் ஹெவி யாகவே சமைத்து விடுவதால், பிரேக் ஃபாஸ்டும் இல்லாமல், லஞ்சும் இல்லாமல் இரண்டுங்கெட்டானாக ஒரு 'பிரஞ்ச்!'

''சாப்பிட வாரட்டி போங்க... எனக்குப் பசிக்குது. எவ்ளோ டேஸ்டா சமைச் சிருக்கேன்... ஆஹா!'' என்று நானே செல்ஃபா பாராட்டிக்கிட்டு சாப்பிட்டு விடு வேன்.

அப்புறமா ஒரு தூக்கம் வரும் பாருங்க! உடம்பெல்லாம் இலேசாகி யாருமற்ற பால்வெளியில் மிதப்பேன். மூனாங் கிளாஸில் குச்சி பல்பத்துக்காக என்னுடன் சண்டை போட்ட சிவகாமி, 'மேரே சப்னோக்கி ராணி, புகழ் ராஜேஷ்கன்னா வுக்கு 'நெருப்பையும் கறையான் அரிக் குமோ நேர்ந்ததே!'னு தமிழ்ப் பாடம் நடத்துவது மாதிரியெல்லாம் அபத்தக் கலவையாய் வந்து போகும் பாருங்க!

அந்தக் கனவுகள்தான் என் சண்டே ஸ்பெஷல்!

[டிக்கெட் வாங்காமல் உங்கள் இதய ரயில் ஏறிய கற்பனை எல்லாம் சுகமாகத் தான் இருக்கிறது... அப்படியே எந்த டி.டி.ஈ.யும் செக்கிங்குக்கு வராமல் கொஞ் சம் பார்த்துக்குங்க ப்ளீஸ்!]

வே. பரந்தாமன், சிறுதாவூர்.

கல்யாண மண்டப வாயில்களில் வாழை மரம் கட்டப்படுவது ஏன்?

''கட்டலைன்னா வாழை மரம் விழுந் துடுமே!'' என்பது பழைய கடி ஜோக்!


வெட்ட வெட்ட குருத்து வளரும் ஒரே மரம் வாழை மரம்தான்! தலை வாழை சாய்ந்ததும், அதன் அருகிலேயே சிறு கன்றுகள் முளைக்கும். ''வாழையடி வாழையா, வம்சம் தழைக்கணும்'' என்ற பிரார்த்தனையுடன் பந்தல் கால் இட்டு, வாழை மரத்தைக் கட்டுகிறார்கள்.

எம். சுகந்திராணி, வேலூர் - 2.

நீங்க யாருக்காவது காத்திருந்த அனுபவம் உண்டா?

கல்லூரி படிப்பை முடித்து விட்டு,









ஸ்பெஷல் எது?

நான் வீட்டில் இருந்த காலத்தில், தபால்காரருக்காகக் காத்திருந்த அனுபவம் இருக்கே.... பரம சுகமானது! என் அக்காவுக்குத் திருமணமாகி குழந்தை இருந்தது. அண்ணன் வெளிநாட்டில் இருந்தான். அவர்கள் எழுதும் நீநீண்ட அன்புக் கடிதங்களுக்காக, அனைவருமே ஆர்வத்துடன் காத்திருப்போம். அது தவிர, என் தோழிகள் கடிதம் எழுதுவார்கள்; என் எழுத்துக்கள் ஏதேனும் பத்திரிகையில் வெளியாகி, அன்பிதழ்களும், அஞ்சு, பத்து என எம்.ஓவும் வரும்.

எங்கள் ஊர் கிராமப்புறம் என்பதால், ஒருசில வீடுகளுக்குத்தான் ரெகுலராக தபாலே வரும். ஸோ, தபால்காரர் வரும் நேரமாகப் பார்த்து, நான் வீட்டு வாசலில் மல்லிகைப் பந்தலின் நிழலில் நிற்பேன்.

எங்கள் வீடு இருக்கும் தெருமுனைக்கு வந்ததும், தபால்காரின் சைக்கிள் பெடலைக் கவனிப்பேன். அவர் அதை உந்தி அழுத்தாமல், ஸ்லோ பெடலில் காலை வைத்திருந்தால் ''தபால் உண்டு'' என்று அர்த்தம். சீட்டில் ஏறி உட்கார்ந்து, பெடலை ஓர் மிதி மிதித்தால் ''இல்லை'' என்று அர்த்தம்.

இன்று மேஜை நிறைய வந்து குவியும் வாசகியர் கடிதங்களுக்காக தினமும் காத்திருக்கிறேன். அதே ஆவல்! அதே ரசிப்பு! அனுஷா...

நீ மாறவே இல்லை!

விசாலாட்சி சுந்தரம், ஹைதராபாத்-1.

உங்களுக்குப் பிடித்த பின்னணிப் பாடகர் யார்?

சில குரல்கள் மாஸ்... (டி.எம்.எஸ். போல)

சில குரல்கள் கிளாஸ்... (கே.ஜே. யேசுதாஸ் போல...)

மாஸும், கிளாஸும் கலந்தது எஸ்.பி. பாலசுப்ரமணியத்தின் குரல்! 'இளமை என்னும் பூங்காற்று', 'பொன் மாலைப் பொழுது' 'இளைய நிலா பொழிகிறது' 'அந்தி மழை பொழிகிறது' அடடா... குழைவு, உச்சரிப்பு, இளமை, இனிமை, பாவம் என எல்லாம் சேர்ந்த கலாட்டா கிங் அவர். அவரது பெயரிலேயே Super Play Back Singer (எஸ்.பி.பி.) இருக்கே!

ஹரிணி சங்கர், வேலூர் - 2.

உண்மையான அன்பு எது?

நமது தோஹா வாசகி லட்சுமி சுப்ரமண்யம் எழுதிய சுவாரசியமான துணுக்கு ஒன்று கையில் கிடைத்தது. அதை அப்படியே தருகிறேன்.

சுவாமி விவேகானந்தரும், அவருடைய தோழி ஒருவரும் ஒரு நீச்சல் குளத்தின் படிக்கட்டில் அமர்ந்து இருந்தனர். அந்தப் பெண்மணி தன் உள்ளங்கைகளில் தண்ணீரை ஏந்தி இருந்தாள். தண்ணீர் அப்படியே அவள் கைகளில் இருந்தது. விவேகானந்தர் அந்த நீரைச் சுட்டிக்காட்டி ''இதுதான் அன்பு. உன் கையில் உள்ள நீர் உனக்கே சொந்தம் என்று நினைத்து உன் கைகளை மூட நீர் முயற்சித்தால், அந்த நீர் வெளியே செல்ல முயற்சிக்கும். மக்கள் செய்யும் மிகப் பெரிய தவறு இதுதான்! அவர்கள், தான் அன்பு செலுத்துபவர்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அழுத்தப் பார்க்கிறார்கள். அதனால் நீரைப் போல, அவர்களும் வெளியே ஓடப் பார்க்கிறார்கள்.

''நீங்கள் ஒருவரிடம் அன்பு செலுத்தினால், அவரை சுதந்திரமாக இருக்க அனுமதியுங்கள். உண்மையான அன்பு என்பது எதையும் கொடுக்கும்; எதையும் திரும்ப எதிர்பார்க்காது அறிவுரை சொல்லும்; கட்டளையிடாது. பிடிவாதம் செய்யாது. இதுதான் உண்மையான அன்பின் ரகசியம்'' என்றார்.

கே.எஸ். கிருஷ்ணவேணி, கும்பகோணம்.

நீங்கள் நடத்தும் ஆன்மிகப் போட்டி, நளபாகப் போட்டிக்கு கூப்பன்களைத் தனியாகத்தான் அனுப்பணுமா? இல்லை, நாங்கள் எழுதும் டிப்ஸ், துணுக்குச் செய்திகளுடன் சேர்த்து பின் செய்து ஒரே தபால் கவரில் அனுப்பலாமா?

சேர்த்தே அனுப்பலாம். ஆனால் தபால் உறையின் மீது ஆன்மிகப் போட்டி, நளபாகப் போட்டி, டிப்ஸ் என கொட்டை எழுத்தில் குறிப்பிட்டு விட்டால் பிரித்தெடுக்க வசதியாக இருக்கும்.




கறுப்புக் குடை வேண்டாமே!

கறுப்பு நிறக் குடைகள் வெப்பத்தை அதிகமாக்கி நம்மைத் தாக்கும். நம் நாட்டு தட்பவெப்ப நிலைக்கு வெள்ளைத் துணிக் குடைகளே சிறந்தவை. குடை தயாரிப்பாளர்கள் கவனிப்பார்களா?

- ஜெகா. கும்பகோணம்.



1



2



3

ஆனந்தம் தரும்

நமஸ்காரம் செய்யும் பொழுது ஆண்கள் நெடுசாண்கிடையாகவும், பெண்கள் முழங்கால்களை ஊன்றி, முதுகுப் பக்கத்தை முன்புறமாக வளைத்து, நெற்றிப் பாகம் தரையைத் தொடும்படியாகத்தான் செய்கிறார்கள். ஏனென்றால் பூப்புக் காலம், பிள்ளைப்பேறு போன்ற நிலைகளை அவர்கள்தான் அடைகிறார்கள். ஆகையால் இடுப்புப் பகுதியும், முதுகுத் தண்டின் கீழ்ப்பகுதியும் உறுதியாக இருத்தல் அவசியம். நமஸ்காரம் செய்யும் இந்நிலை பெண்களுக்கு சாதகமாக அமைகிறது. இந்நிலை சம்பந்தப்பட்ட ஆசனங்கள் செய்யும் பொழுது பெண்களுக்கே உண்டாகும் முதுகு, இடுப்பு வலி வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம். அதிக நேரம் ஒரே இடத்தில் உட்காரவோ, பிரயாணம் செய்யவோ முடியாத பிரச்னைகளிலிருந்து விடுதலை பெறலாம். இனி ஆசனங்கள்....

ஸ்திக பவன முக்தாசனம்


(அமர்ந்த நிலை பவன முக்தாசனம்)

செய்பவர் : ஹேமா லக்ஷ்மண்

நிலை 1 - சுகாசனம்

நிலை 2 - இரு கால்களையும் முன்புறமாக நீட்டவும்.

நிலை 3 - மெதுவாக வலது/இடது காலை (படத்தில் காட்டியபடி) ஆடு சதை தொடைப் பகுதியை அழுத்தியவாறு இருக்கும்படி மடக்கி வைக்கவும்.




நிலை 4 - மெதுவாக அடுத்த காலையும்

8 ஆசனம்

பேராசிரியர் கிருஷ்ண வாசுதேவன்











இடது/வலது மடக்கவும்.

நிலை 5 - இப்பொழுது இரு கைகளாலும் முழங்கால்களைச் சேர்த்து, இறுக அணைத்து, முகவாயை இரு முழங்கால்கள் மேல் வைக்கவும்.

நிலை 6 - நிலை 4ற்கு வரவும்.

நிலை 7 - நிலை 3ற்கு வரவும்.

நிலை 8 - நிலை 2ற்கு வரவும்.

நிலை 9 - சுகாசனம்

★ *கல்யாணி கண்ணன்*



உபவிஷ்ட கோணாசனம்

(அமர்ந்த நிலை கோணாசனம்)

செய்பவர் : கல்யாணி கண்ணன்



நிலை 1 - சுகாசனம்

நிலை 2 - கால்களை முன்புறமாக நீட்டவும்.

நிலை 3 - மெதுவாக கால்களை இருபுறமும் அகட்டி வைக்கவும்.

நிலை 4 - வலது கை விரல்களால், வலது கால் பெருவிரலையும், இடது கை விரல்களால் இடது கால் பெருவிரலையும் பிடித்துக் கொள்ளவும்.

நிலை 5 - அதே நிலையில் முன்புறமாகக் குனிந்து முகவாய்/ மூக்கு/முன்னுச்சி தரையில் படும்படி தலையை வைக்கவும். இதே நிலையில் 10-15 விநாடிகள்



தரையின் மீது உட்கார்ந்து ஜபம் செய்தால் பயனளிக்காது. கம்பளி மீது உட்கார்ந்து ஜபம் செய்தால் வேண்டுவது கிடைக்கும். தர்பாஸனத்தில் ஜபம் செய்தால் ஞானம் கிட்டும். இலைகளின் மீது உட்கார்ந்து ஜபம் செய்தால் ஆரோக்கியம் கிடைக்கும். குளம், நதியில் ஜபம் செய்தால் இருமடங்கு பயன் அளிக்கும். ஹோமந்தீயின் முன்னால் ஜபம் செய்தால் நூறு மடங்கு சக்தி கிடைக்கும். தெய்வ சந்நிதி, புண்ணிய ஸ்தலங்களில் செய்யும் ஜபம் நூறு கோடி சக்தி கொண்டது.

- ஆர். தங்கராஜ், திருப்பூர்.

GOOD SHEPHERD e-SCHOOL

பள்ளி / கல்லூரி பயிலும் மாணவ / மாணவிகளே!

இன்டர்நெட்டில் ஒரு முறை பயின்றால் 25 முறை புத்தகத்தில் படிப்பதற்குச் சமம். ஆம். இணைய தளத்தில் Good Shepherd e-School-ல் படிப்பது உங்கள் மூளைத்திறனை அதிகரிக்கச் செய்யும், கவனக் குறைவைப் போக்கும், கவனச் சிதறலை இல்லாமல் ஆக்கும். ஒரு முறை பயின்றால் உங்கள் புத்தகத்தை 25 முறை மீண்டும் மீண்டும் படித்து 25 முறை ஞாபகப் படுத்திக் கொள்வதற்குச் சமம். ஆகவே, உங்கள் படிப்பு சுமையைப் பஞ்சைப் போல எளிதாக்கும். Good Shepherd e-School -ல் இன்றே மிக மிகக் குறைந்த கட்டணத்தில் பயில்வீர்.

Chapterwise All Books Available

e-School -ல் படிப்பு V Std

NTSE (மாதம் ரூ. 200, 300, 500, 1000 என மத்திய அரசு வழங்கும்)

Sainik School, RIMC, Military School



Engineering படிக்க +2 தகுதி

IIT - JEE, AIEEE, BITSAT and State Entrance Exams.

Medical படிக்க +2 தகுதி

AIIMS, PMT, JIPMER, CMC, AFMC and All States MBBS Entrance Exams.

Medical / Engineering படிக்க மாணவர்களுக்கு Chapterwise Practise நடைபெறும்.

Engineering மாணவர்கள்

கல்லூரியில் சேர்ந்து முதல்வருடத்திலிருந்து aptitude exams பயிற்சி எடுத்துக்கொள்வது நல்லது. இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டு மாணவ - மாணவிகள் கண்டிப்பாகப் பயின்றால்தான் Campus Interview மற்றும் அதன் பின் வரும் தேர்வுகளில் வெற்றிப்பெற்று கை நிறைய சம்பளம் பெற முடியும்.

Arts / Science Students Degree

IAS Exams (all upsc exams) Railway Exams, Banking Exams, Staff Selection Commission Exams, MBA, MCA Ent.Exams, IIIT, IIMS, IIBM, XLRI and other Management Studies & TNPSC, Exams வெற்றிபெற.

Defence:

ARMED FORCES MEDICAL COLLEGE, MILITARY NURSING SERVICES EXAM, NATIONAL DEFENCE ACADEMY, COMBINED DEFENCE SERVICES, SSB INTERVIEW Etc. அனைத்துக்கும் எங்களது GOOD SHEPHERD e-SCHOOL - ல் CHAPTER WISE ஆகப் பயின்று, OBJECTIVE WISE QUESTIONS, ANSWERS & Explanations etc. மூலம் படித்தப்பின் அந்தந்த தேர்விற்குரிய Model Exams வெற்றி பெறுவதன் மூலம் உங்களின் வெற்றியை 100% உறுதிசெய்து கொள்ளலாம், எங்களிடம் வெற்றிபெற்று விட்டால் அந்தந்த தேர்வுகளில் 100 சதவிகிதம் வெற்றி உறுதியே. மிக மிகக் குறைந்த கட்டணம். உங்களுக்குரிய தேர்வில் வெற்றிபெறும் வரை e-SCHOOL - ல் பயிலலாம். தற்சமயம் Educational offer-ஆக Rs.25,000க்குரிய பயிற்சிக் கட்டணம் ரூ.1000/- மட்டுமே குறைந்த நாட்களுக்கு மட்டுமே இச்சலுகை மேலும் விவரங்களுக்கு

Send Rs. 100 for Prospectus Coresponds

GOOD SHEPHERD e-SCHOOL

(HOLY ANGEL'S ONLINE EXAM)

11/20, தக்குதீன் கான் தெரு, ஆதம்ஸ் மார்க்கெட் எதிரில், திருவல்லிக்கேணி, சென்னை-5.

CELL : 9360313921

www.aptitudeexams.com info@aptitudeexams.com



இருக்கவும்.

நிலை 6 - மெதுவாகத் தலையைத் தூக்கி நிலை 4ற்கு வரவும்.

நிலை 7 - நிலை 3ற்கு வரவும்.

நிலை 8 - நிலை 2ற்கு வரவும்.

நிலை 9 - சுகாசனம்.

ஜானு சீர்ஷாசனம்

(வலது/இடது முழங்கால் தலையைத் தொடும் நிலை)

செய்பவர் : ஆர்.எம். சரோஜா

நிலை 1 - சுகாசனம்

நிலை 2 - இரு கால்களையும் முன்புறமாக நீட்டவும்.

நிலை 3 - வலது/இடது காலை மடித்து உட்புறத் தொடையோடு பதியும்படி வைக்கவும்.

நிலை 4 - இரு கைகளை நீட்டி முன்புறமாகக் குனியவும்.

நிலை 5 - இரு முழங்கைகளையும் இடது/வலது முழங்காலுக்கு இருபுறமும் தரையில் ஊன்றவும். முகத்தை இடது/வலது முழங்காலைத் தொடும்படி செய்யவும்.

நிலை 6 - நிலை 4ற்கு வரவும்.

நிலை 7 - நிலை 3ற்கு வரவும்.

நிலை 8 - நிலை 2ற்கு வரவும்.

நிலை 9 - சுகாசனம்

தொகுப்பு : **மாலதி சந்திரசேகரன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

(ஆனந்தம் தொடரும்)



வாழ்வின் வழிமுறை
எஸ்டேட் ஃப்ரெஷ் ஃபில்டர் காபியின்
அதிகாலை ஆரம்பம்
இதுபோன்ற நிறைவில்லை வேறெந்த காபியிலும்
இன்று காலை வணக்கம் தமிழகத்தில் சுவையும் மணமும் மற்றும் உங்கள் நாவில் நெடுநேரம் நிலைத்து இருக்கும் எஸ்டேட் ஃப்ரஸ் பில்டர் காபியுடன் ஆரம்பம் ஆகிறது.
பல காலமாக எங்கள் வாடிக்கையாளர்களால் பெரிதும் விரும்பப்பட்டு வரும் எஸ்டேட் ஃப்ரஸ் பில்டர் காபியை உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கி சுவைத்து இன்றைய நாளை தொடங்குங்கள்.
COFFEE 85%
CHICORY 15%
E/G
ESTATE
FRESH
Coffee
For Door Delivery
Chennai:
044-24415290
Rest of Tamilnadu:
94862 63342
E/G
Estate Foods & Grains
சென்னை மற்றும் தமிழகமெங்கும் வியாபார விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்பு கொள்க: Chennai:9841221796, Rest of Tamilnadu: 9486263342

(1.6.2007 முதல் 30.6.2007 வரை)
சுபஸ்ரீ சர்வஜித் வருஷம்
வைகாசி மாதம் 18-ஆம் தேதி முதல்
ஆனி மாதம் 16-ஆம் தேதி வரை

மேஷ ராசி :

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ஆம் பாதம்)

மேஷராசி நேயர்களே! தொட்டது துலங்கும். முடியாது என விட்ட பணிகள் வெற்றிகரமாகும். நிலபுலன்கள், வண்டி, வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தில் வீண்வாக்குவாதங்களைத் தவிர்த்தல் நலம். வெளிநாடு செல்பவர்கள் பிரயாண ஆவணங்களில் மிக மிக கவனம் தேவை. 5, 6, 7



தேதிகளில் உத்யோக மேன்மை கிட்டும். 8, 9 தேதி களில் நினைத்தது நடக்கும். கேட்டது கிடைக்கும். 15, 16, 17 தேதிகளில் எதிர்பாரா தனலாபம் கிட்டும். தூரதேசத்திலிருந்து நல்ல செய்திகள் வரும். 22, 23, 24 தேதிகளில் கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். மாத ஆரம்பம் முதல் 2.6.2007 காலை வரை மற்றும் 28.6.2007 காலை முதல் 30.6.2007 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : வடிவுடையம்மனை மனமுருக வழிபடவும். குங்கும அர்ச்சனை செய்க!

ரிஷபராசி :

(கார்த்திகை 2, 3, 4 - ஆம்பாதங்கள். ரோஹிணி, மிருகசீரிஷம் 1, 2 -ஆம் பாதங்கள்).

ரிஷபராசி நேயர்களே! உமது புத்திக் கூர்மையினாலும் நிர்வாகத் திறமையினாலும் பாராட்டுப் பெறுவீர்கள். ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் செழிக்கும். தூர தேசத்திலிருந்து எதிர்பாராத நற்செய்தி வரும். இளையசகோதர வழியில் ஏற்றம் கிட்டும். மாணவர்கள் மிகவும் கவனமுடன் படித்தல் நலம். மனைவி வழியில் லாபம் பெருகும். கம்ப்யூட்டர், எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ், போக்குவரத்து போன்றவை தொடர்பு

டையவர்கள் மிகுந்த அனுகூலமடைவர். 7, 8, 9 தேதிகளில் உத்யோக மேன்மை கிட்டும். 9, 10, 11 தேதிகளில் நினைத்தது நடக்கும். 17, 18, 19 தேதிகளில் எதிர்பாராத தனலாபம் கிட்டும். 25, 26, 27 தேதிகளில் எண்ணம் ஈடேறும். 2.6.2007 காலை முதல் 4.6.2007 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : மகாலட்சுமியை வழிபடவும். தினசரி விநாயகரை வழிபட நன்று.

செவ்	சந்	சூரி புத	
ரா	1.6.2007 அன்று		சனி க.க்
	உள்ள கிரக நிலை		கேது
	குரு		



இந்த மாதம் எப்படி?

10, 11 தேதிகளில் தொழிலில் முன்னேற்றம் கிட்டும். 11, 12, 13 தேதிகளில் நீண்ட கால எண்ணம் ஈடேறும். 4.6.2007 மாலை முதல் 6.6.2007 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம் கவனம் தேவை.

பரிகாரம் : லட்சுமி நரசிம்மரை பக்திசிரத்தையோடு வழிபட நன்று.

மிதுன ராசி :

(மிருகசீரிஷம் 3, 4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 -ஆம் பாதங்கள்).

கணவன் - மனைவி இடையில் ஊக்கமும் உற்சாகமும் நிலவும். குடும்பத்தில் சுபச்செலவுகள் உண்டாகும். எதிர்பாராத பிரயாணம் அமையும். சிவில் வழக்குகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். கடன் தீரும். குருவருள் கிடைக்கும். கம்ப்யூட்டர், மின்சாரம், ஃபைனான்ஸ் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவினர் நல்ல முன்னேற்றம் பெறுவர். 1,2,3 தேதிகளில் கடன் தீரும். 9,

கடக ராசி :

(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்).

கடக ராசி நேயர்களே! பூர்விகச் சொத்து மூலம் அபரிமிதமான வருவாய் கிட்டும். சகோதர வழி உதவிகள் தேடி வரும். உமது மகன் (அ) மகள் திருமணம் இனிதே கூடும். முதலீட்டுக்குத் தேவையான நிதி ஆதாரம் கிட்டும். வலிய வந்து சிலர் கடன் தருவர். வீடு, மனை, பூமி வாங்க வாய்ப்பு உள்ளது.

பிரிந்து வாழும் தம்பதியர் இணைந்து வாழ இடமுண்டு. இசைத் துறையினர், மருத்துவம், திருமணத் தகவல் மையம், புரோகிதர், ஜோதிடர், பொதுநலச் சேவை போன்ற பிரிவினர் ஏற்றம் அடைவர். 3, 4, 5 தேதிகளில் கடன் பைசல் ஆகும். 11, 12, 13 தேதிகளில் தொழில் மற்றும் வியாபார மேன்மை கிட்டும். 14, 15 தேதிகளில் நாட்டப்பட்ட ஆவல் பூர்த்தி ஆகும். 6.6.2007 நள்ளிரவு முதல் 8.6.2007 பின்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : ஸ்ரீ ஆதிபராசக்தியை வழிபடவும். பிரதி சனிக்கிழமை சனி பகவானுக்கு நெய் தீபம் ஏற்றவும்.

சிம்ம ராசி :

(மகம், பூரம், உத்திரம் - 1 - ஆம் பாதம்).

சிம்ம ராசி நேயர்களே! வியாதிகளிலிருந்து நிவாரணம் கிட்டும். கடன் தீரும். இல்லத்தில் இனிமை தவழும். இறையருள் கூடும். இன்னல் அகலும். பிரார்த்தனைகள் நற்பலன் தரும். சுகப்பிரசவம் ஆகும். வாகனங்களை ஓட்டும் போது போக்குவரத்து விதிகளை கவனமுடன் அனுசரிக்கவும். சுற்றுச்சூழல், வணிக வரி, திரைப்படத் தணிக்கை, மண் பரிசோதனை, பயிர் பாதுகாப்பு, எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக்ஸ், மருத்துவம் போன்ற பிரிவினர் மிகுந்த முன்னேற்றமடைவர். 5, 6, 7 தேதிகளில் தெய்வ அனுகூலம் கிட்டும். 13, 14, 15 தேதிகளில் செய்தொழிலில் மேன்மை கிட்டும். 16, 17 தேதிகளில் விருப்பம் நிறைவேறும். 8.6.2007 பின்னிரவு முதல் 11.6.2007 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : பிரதோஷ காலத்தில் சிவாலய தரிசனம் செய்க.

கன்னி ராசி :

(உத்திரம் 2, 3, 4 -ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்).

கன்னிராசி நேயர்களே! செய்தொழில் எதுவானாலும் அதில் பெயரும் புகழும் பெறுவீர்கள். கடன் கணிசமாகக் குறையும். திடீர் பிரயாணம் அமையும். புனித ஸ்தலங்களுக்குச் சென்று வர நேரும். வீட்டில் ஒற்றுமை நிலவும். வங்கி, நூலகம், அஞ்சலகம், பிரவுசிங் சென்டர், மின்சார வாரியம், போக்குவரத்து, தொலைத் தொடர்பு போன்ற பிரிவுகளில் சம்பந்தமுடையவர்கள் ஏற்றம் பெறுவர். 1, 2, 3 தேதிகளில் எதிர்பாராத தனலாபம் கிட்டும். 10, 11, 12 தேதி



நமது வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்குச் சமையல் செய்யும் முன், அவர்களுக்குப் பிடித்த, பிடிக்காத உணவு, காய்கறிகளை அவர்களிடமே கேட்டுச் சமைத்தால் அவர்களுக்கும் மகிழ்ச்சி. நமக்கும் பூரண மனத் திருப்தி!

- எஸ். விஜயலட்சுமி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

குணம் பெற்றவர்கள் கூறும் உண்மைக்கதை



வெள்ளைத் தழும்புகள்

எனக்கு சில வருடங்களாக வெண்குஷ்டம் என்ற தோல் நோயினால் அவதியுற்றேன். டாக்டரின் பேட்டியை ஜெயா டி.வியில் பார்த்து, இராயப்பேட்டையில் உள்ள ரப்பானி வைத்திய சாலாவிற்கு சென்று, சில மாதங்கள் மருந்து சாப்பிட்டதில் நான் பூரண குணமடைந்தேன் என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார். **- அமீர் பாட்ஷா, தில்லாம்பட்டி**

இடுப்பு வலிக்கு சிறந்த சிகிச்சை



நான் கடந்த சில ஆண்டுகளாக இடுப்பு வலியாலும், கை, கால், மூட்டு, குதிக்கால் வலியாலும் அவதியுற்று இருந்தேன். பல மருத்துவமனைகள் சென்று பார்த்தேன். பலன் கிடைக்கவில்லை. அதன் பிறகு டி.வி. மூலம் விளம்பரத்தை பார்த்தேன். ரப்பானி வைத்திய சாலாவில் மருந்து சாப்பிட்டு வருகிறேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்ல முறையில் இருக்கிறேன். **- செல்வராணி, சென்னை**

மூட்டு வலிக்கு சிறந்த சிகிச்சை




கடந்த 3 ஆண்டுகளாக மூட்டு வலியாலும், கைகால், குதிக்கால் வலியாலும் அவதியுற்று இருந்தேன். டி.வி. மூலம் விளம்பரத்தை பார்த்தேன் ரப்பானி வைத்திய சாலாவில் வந்து 3 மாதம் மருந்து சாப்பிட்டு வருகிறேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்ல முறையில் இருக்கிறேன். **- லத்தீப்புன்நிஷா, சென்னை - 600 042**

நாள்பட்ட ஆஸ்த்துமா (Asthma)



நான் கடந்த 20 ஆண்டுகளாக ஆஸ்த்துமா (Asthma) என்ற நோயால் அவஸ்தைப் பட்டு வந்தேன். தங்களது மருத்துவமனை பற்றி டி.வி மூலம் தெரிந்து தங்களது விலாசத்திற்கு வந்து என்னுடைய உடம்பை பரிசோதித்து மருந்து கொடுத்து சுமார் 5 மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்துள்ளேன். 3 பாகம் சரியாகிவிட்டது. இப்போது எந்த தொந்தரவும் இல்லாமல் இருக்கிறேன். **- சரோஜா, ஆரணி**

சோரியாஸிஸ்



நான் கடந்த சில ஆண்டுகளாக சோரியாஸிஸ் நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். உடம்பில் மீன் செதில்கள் போல் கொட்டும். பல டாக்டர்களிடம் பார்த்தும் சரியாகவில்லை. கடைசியில் டாக்டரின் விளம்பரத்தை பார்த்து அவரிடம் சென்றேன். இப்போது மருந்து சாப்பிட்டு குணம் அடைந்து இருக்கிறேன். இப்போது உடம்பில் எந்த வடுகூட இல்லாமல் மிக நன்றாக இருக்கிறேன். **- பத்மநாபன், சென்னை - 56**

நாள் பட்ட பக்கவாதம் (Paralysis)



எனக்கு 2 வருடம் கை, கால் வாதம் (Paralysis) ஏற்பட்டு நடக்க முடியாமல், கை, கால் செயல்படுத்த முடியாமல் பல பெரிய மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்தும் பலன் கிடைக்கவில்லை. டி.வி. மூலம் விளம்பரத்தை பார்த்து ரப்பானி வைத்திய சாலாவில் சிகிச்சை பெற்று வருகிறேன். இப்போது கை, கால் தூக்க முடிகிறது. நல்ல முறையில் நடக்கிறேன். இப்போது எந்த குறையும் இல்லை. **- ரமேஷ், மதுரை**

கை, கால் வாதம், மூளை வளர்ச்சிக் குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவமனை



ரப்பானி வைத்யசாலா

பழைய 65 / புதிய 139, டாக்டர் பெசன்ட் ரோடு, மீர்சாகிப்பேட்டை, மார்க்கெட் அருகில், இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன்: 28476969, 28470874

ராஜ் டி.வி. காலை 8.30 - 9.00
திங்கள் முதல் சனி வரை தமிழன் டி.வி. மாலை 6.00 - 6.30,
திங்கள் முதல் வெள்ளி வரை தமிழன் டி.வி. காலை 9.30 - 10.00

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவம் மாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

•	காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
•	மதிய உணவு	ரூ.	2,000/-
•	இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
•	இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
•	ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
•	ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
•	குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை *ஸ்ரீ சாரதா சக்தி பீடம்* என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

வாழைக்காயை இரண்டாக வெட்டி தண்ணீரில் போட்டுக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் ஒரு வாரத்திற்கு பழுத்துப் போகாமல் இருக்கும்.

- பி.டி. விஜயசாமுண்டீஸ்வரி,
வாணியம்பாடி.



களில் தெய்வ அனுகூலம் பெருகும். 15, 16, 17 தேதிகளில் தொழில் மேன்மை கிட்டும். 18, 19 தேதிகளில் நினைத்தது நடக்கும். 11.6.2007 காலை முதல் 13.6.2007 வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : பிரதி புதன்கிழமை மகா விஷ்ணுவை துளசியால் அர்ச்சித்து விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்க.

துலாம் ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

துலாம் ராசி நேயர்களே! தாயார் வீட்டு சீதனம் எண்ணம் போல் கிடைக்கும். சிலர் அரசு வழக்குரைஞராக அமர ஆணை கிடைக்கும். வீட்டுப் பராமரிப்புப் பணியை மேற்கொள்ள நேரும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். கணவன் - மனைவி இடையில் வீண் வாக்குவாதம் கூடாது. புதிய முயற்சிகளுக்கு அரசு ஆதரவு கிட்டும். மகான்கள் நல்லாசி கிட்டும். புனித ஸ்தல யாத்திரை செல்ல நேரும். ரெஸ்டாரன்ட், ரியல் எஸ்டேட், மேன்பவர் கன்ஸல்டன்சி, செக்யூரிட்டி சர்வீஸ், பதப் படுத்திய உணவு போன்றவை தொடர்புடையோர் மிகுந்த அனுகூலம் பெறுவர். 3, 4, 5 தேதிகளில் திரவிய லாபம் பெருகும். 9, 10, 11 தேதிகளில் தெய்வ அனுகூலம் கிட்டும். 17, 18, 19 தேதிகளில் உத்யோக மேன்மை உண்டு. 20, 21 தேதிகளில் எண்ணம் ஈடேறும். 13.6.2007 காலை முதல் 15.6.2007 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : துர்க்கா, லட்சுமி, பரமேஸ்வரியை வழிபடவும். காலை மாலை வேளைகளில் வீட்டில் தீபம் ஏற்றி மனமுருக வேண்டவும்.

விருச்சிக ராசி :

விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

விருச்சிக ராசி நேயர்களே! கடன் தீரும். கவலைகள் கதிர் முகம் கண்ட பனி போல விலகும். சகோதர வழியில் நிலவிய மனஸ்தாபம் விலகும். கணவன் - மனைவி இடையில் கருத்து வேறுபாடுகள் அகன்று சந்தோஷக் காற்று வீசும். தாயாரின் உடல் நலனில் கவனம் தேவை. வெளிநாடு செல்ல இடமுண்டு. கருவூலம், ஆய்வு மையம், தலைமைச் செயலகம், வங்கிகள், திட்டக்குழு, தணிக்கை தொடர்புடையவர்கள் மிக்க அனுகூலம் அடைவர். 5, 6, 7 தேதிகளில் திரவிய சேர்க்கை உண்டாகும். 11, 12, 13 தேதிகளில் வழக்கில் வெற்றி மற்றும் கடன் பைசல் ஆகும். 20, 21, 22 தேதிகளில் உத்யோக மேன்மையும் வியாபார அபிவிருத்தியும் கிட்டும். 23, 24 தேதிகளில் எண்ணிய எண்ணம் ஈடேறும். 15.6.2007 காலை முதல் 18.6.2007 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : திருச்செந்தூர் முருகனை வழிபட நன்று. சஷ்டிகவசம், சுப்ரமண்ய புஜங்கம் பாராயணம் செய்க.

தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்.

தனுசு ராசி நேயர்களே! வீடு, மனை, பூமி வாங்கும் பாக்யம் உண்டாகும். சகோதர வழியில் விட்டுக் கொடுத்துப் போக நேரும். சிலர் மனைவி சொல்லே மந்திரம் என கேட்டு அதன்படி நடக்க நேரிடும். அரசு வழி அல்லல் அகலும். வழக்குகளில் சாதகமானத் தீர்ப்பு வரும். சிலர் மறுமணம் புரிய வாய்ப்பு உருவாகும். தூர தேசத்திலிருந்து எதிர்பாராத நற்செய்திகள் வரும். உமது மகன் (அ) மகள் திருமணம் சம்பந்தமான முயற்சி எடுப்பீர்கள். புதிய ஒப்பந்தம் கிட்டும். லைசென்ஸ், ஏஜென்சி, தரகு, ஷேர் மார்க்கெட், ரியல் எஸ்டேட் தொடர்புடையவர்கள் மிகவும் நன்மை பெறுவர். 7, 8, 9 தேதிகள் திரவிய லாபம் கிட்டும். 13, 14, 15 தேதிகளில் அரசு வழி அனுகூலம் கிட்டும். 22, 23, 24 தேதிகளில் தொழில் மேன்மை உண்டு. 25, 26, 27 தேதிகளில் கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும். 18.6.2007 நள்ளிரவு முதல் 20.6.2007 பின்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : ஸ்ரீதட்சிணாமூர்த்தியை மஞ்சள் மலரில் வழிபடவும். பிரதோஷ நேரத்தில் சிவாலய தரிசனம் செய்ய நன்று.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4- ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 - ஆம் பாதங்கள்.

மகர ராசி நேயர்களே! தொழில் வழியில் மிகுந்த லாபம் காணும் உமது மகன் (அ) மகள் காதல் திருமணம் புரிவர். புதிய முயற்சிகளில் வெற்றிகிட்டும். உமது மனைவி பேரில் புதிய நிலபுலன் (அ) மனை வாங்க வாய்ப்பு உண்டு. எஞ்ஜினியரிங், ஆட்டோமொபைல், ரியல் எஸ்டேட், ஏற்றுமதி, இறக்குமதி, சுற்றுச் சூழல், வணிக வரி, திரைப்படத் தணிக்கை தொடர்புடையவர்கள் ஏற்றம் பெறுவர். 9, 10, 11 தேதிகளில் திரவிய லாபம், தானதான்யம் சேர்க்கை உண்டு. 15, 16, 17 தேதிகளில் கடன் தீரும். வழக்கில் வெற்றி கிட்டும். 25, 26, 27 தேதிகளில் தொழில் மேன்மை அடையும். 28, 29 தேதிகளில் எண்ணம் ஈடேறும். 20.6.2007 பின்னிரவு முதல் 23.6.2007 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : தினசரி காலையில் வெங்கடேஸ்வர சுப்ரபாதம் கேட்கவும். சனிக்கிழமை வெங்கடாஜலபதியை வழிபடவும்.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4-ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 -ஆம் பாதங்கள்.

கும்ப ராசி நேயர்களே! கடன் தீரும். கவலைகள் விலகும். தாய் தந்தையுடன் அனுசரித்துப் போவது நலம். வெளிநாட்டுத்



வீட்டில் இருக்கும் மரங்களில் இருந்து விழும் இலைகளையும், சருகுகளையும் ஒரு பள்ளம் தோண்டி அதில் கொட்டி வையுங்கள். பள்ளம் நிரம்பிய பிறகு அதன் மீது மண்ணைப் போட்டு மூடி விடுங்கள். அது, மூன்று மாதத்தில் மக்கி, சிறந்த இயற்கை உரமாகிவிடும். இந்த உரத்தில் நைட்ரஜன் சத்து அதிகம். இதை நம் வீட்டிலுள்ள செடிகளுக்குப் போட்டு தண்ணீர் விட்டால் அவை வேகமாக வளரும். விரைந்து பலன் தரும்.

— ரா. மாலினி, திருக்கோவிலூர்.

பஞ்சாமிர்தம்



எள்ளுப் பாட்டி : ஜெயலக்ஷ்மி அம்மாள்
கொள்ளுப் பாட்டி : லக்ஷ்மிகாந்தம்
பாட்டி : ஸ்ரீரஞ்சனி
அம்மா : பவித்ரா
குழந்தை : தேஜஸ்

தொடர்பு கிட்டும். செய்தொழில் எதுவானா லும் அதில் அதிக வேலை பளுவும் அலைச் சலும் இருக்கும். கணவன் மனைவி இடை யில் பரஸ்பர அன்பு நிலவும். ஆசிரியர், புரோகிதர், வழக்கறிஞர், மதபோதகர், வங்கி, அறநிலையம் தொடர்புடையவர்கள் மிகுந்த நன்மை காண்பர். 3, 4, 5 தேதிகளில் தொழில் வழி முன்னேற்றம் கிட்டும். 11, 12, 13 தேதிகளில் திரவிய லாபம் கூடும். திடீர் பணவரவு கிட்டும். 17, 18, 19 தேதிகளில் இறையருள் கூடும். இன்னல் விலகும். 23.6.2007 காலை முதல் 25.6.2007 முன்னிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : பிரதி புதன், ஐய்யப்பனை வழிபடவும். இயலாதவர்கள் ஐய்யனாரை வழிபடவும்.

மீன ராசி :

பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

மீனராசி நேயர்களே! கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விடுவீர்கள். அரசு வழி அனுகூலம் தேடி வரும். சிலர் வெளி நாடு செல்ல வாய்ப்பு உண்டாகும். கணவன் - மனைவி பரஸ்பரம் விட்டுக் கொடுத்துப் போவது நலம். ஏற்றுமதி இறக்குமதி வாணி பத்தில் ஈடுபட்டோர் மிகுந்த நன்மை அடை வர். பிரயாணத்தின் போது பணம் பத்திரம். பூர்விகத் தொழிலில் ஈடுபட்டோர், விவசா யம், உணவுப் பதப்படுத்தல், மக்கள் தொடர்பு, பெண்கள் நலன், கல்வி, வங்கி தொடர்புடையவர்கள் ஏற்றம் பெறுவர். 5, 6, 7 தேதிகளில் எண்ணியது ஈடேறும். 13, 14, 15 தேதிகளில் எதிர்பாராத தனலாபம். 20, 21, 22 தேதிகளில் வழக்கில் வெற்றி கிட்டும். 25.6.2007 முதல் 28.6.2007 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை.

பரிகாரம் : பிரதி வியாழன், தட்சிணா மூர்த்திக்கு கொண்டைக்கடலையை தாம்பூல தட்சிணையுடன் சமர்ப்பித்து நெய் தீபம் ஏற்றி வழிபடவும். ●



கவிதை

வேண்டாம் அம்மா!

நீ போகும்போது...
உன் முந்தானை பிடித்து
உடன் வர முடியவில்லை!

வெட்கப்படும்போது...
உன் சேலைத் தலைப்பால்
முகம் மறைக்க முடியவில்லை!

நீர் குடித்த வாய்துடைக்க...
உன் கொசுவம் தேடி
ஓடிவர முடியவில்லை!

தூக்கம் வர...
பஞ்சு போல் பாதுகாக்கும்
பக்குவமான மடி தேட முடியவில்லை!

ஆமாம்... அம்மா...
இனிமேல் நீ..
போடாதே நைட்டியை!

தீ.கவிமனோ

“பாட்டி! நீங்க ஏன் அழறீங்க?”

“போடா! நா ஒண்ணும் அழல...”

“இல்லை, நீங்க எப்பவும் அழுதுகிட்டேதான் இருக்கீங்க. நான் பார்க்கும் போதெல்லாம் ஒங்க கண்ணுல நீர் தளும்பியே இருக்கு...”

“அதெல்லாம் ஒண்ணுமில்லைடா கண்ணா. எனக்குக் கண் ஆபரேஷன் ஆனதுலேர்ந்தே என் கண் இப்படித்தான் இருக்கு. நானே நெறைய தடவை கண்ணாடில பார்த்திருக்கேன்...”

“இல்லே பாட்டி! நீங்க பொய் சொல்றீங்க எனக்குத் தெரியும். உங்களை இப்பல்லாம் யாரும் மதிக்கறதே இல்லேன்னுதானே அழறீங்க? உங்களைப் பார்க்க இப்பல்லாம் யாரும் வர்றதே இல்லேன்னுதானே வருத்தப்படறீங்க?”

“டேய்! கிருஷ்ணா! நீ சும்மா இருக்க மாட்டே? என்னத்தையோ உளறிக்கிட்டு? அது போகட்டும். இப்ப நீ எதுக்காக இங்கே வந்தே? அதைச் சொல்லு.”

“பந்து எடுக்க வந்தேன் பாட்டி!” நான் அப்புறமா வர்றேன்.”

எண்ணி எடுத்தா பத்து வயசு தாண்டாது. பக்கத்து வீட்டுப் பொடியன், அதான் கிருஷ்ணன் என்ன பேச்சுப் பேசறது? இது நெஜமாகவே பந்து எடுக்க வந்ததா? அல்லது வீட்டு வம்பைத் தெரிஞ்சுகிட்டுப் போக அவ அம்மா அடிக்கடி இங்கே அவனை அனுப்பதானா? எது எப்படியோ! சுமதி ஒவ்வொரு நாளும் துவண்டுதான் போனாள். அதனால் அவள் முகமும் வயசு கூட்டித்தான் காண்பிக்கிறதோ என்னவோ?

அவளிடம் பணமிருக்கு, படித்திருக்கிறாள். வீட்டில் அந்தந்த வேலைக்கு வேலையாட்களும் இருக்கிறார்கள். நான்கு மகன்கள், மருமகள்கள், வீடு நிறைய பேரன் பேத்திகளோடு பெரிய குடும்பமாக, சுகமாகத்தான் இரண்டு வருடம் முன்பு வரை வாழ்ந்து கொண்டிருந்தாள்.



ஆனாலும் கிருஷ்ணன் சொல்வது நிஜம்தான். இவன் குழந்தையல்லவா? கள்ளம் கபடமறியாதவன். சட்டென்று புரிந்து கொண்டு விட்டான். கேட்டும் விடுகிறான். அதற்காக! வயது எழுபத்தஞ்சு ஆனாலும் தன்னையோ, தன் குழந்தைகளையோ மற்றவர்களிடம் விட்டுக் கொடுத்துப் பேச முடியுமா? அல்லது அப்படிப் பேசித்தான் பழக்கமா?

இரண்டு வருடங்கள் முன்பு, சுமதியின் கணவர் ரங்கசாமி இறந்து விட்டார். அவர்களின் எண்பதாம் கல்யாணம், அதான் சதாபிஷேகம். இரண்டு வருடம் முன்பு மிகவும் பிரமாதமாகத்தான் கோவிலில் வைத்து நடந்தேறியது.

எது எப்படியானாலும், உள்ளுக்குள்ளே ஆயிரம் இது இருந்தாலும் நாலு மருமகள்களும், மகன்களும், பேரன், பேத்திகள் உள்பட அத்தனை பேரும் ஒற்றுமையோடு ஒன்று கலந்து பேசி, அந்த வயதான தம்பதிகளுக்கு ஒரு குறையும் வைக்காமல் 'ஜாம்

இறக்கை முளைத்த குருவி!

ஜாம்' என்று நடத்தி விட்டார்கள். ஊரே, அந்தக் குடும்ப ஒற்றுமையைப் பார்த்துப் பிரமித்து மகிழ்ந்தது.

அதுவே திருஷ்டியானாற்போல், நடந்து முடிந்த மூன்றாவது நாள் திடீரென்று வந்த நெஞ்சு வலியில் ரங்கசாமியின் மூச்சு அப்படியே நின்று விட்டது.

சுமதியின் கணவர் இறந்து வருஷ திதி முடிந்ததோ இல்லையோ, அதற்காகவே காத்திருந்தது போல் நான்கு பிள்ளைகளும் தனித்தனியாகப் பிரிந்து போய் விட்டார்கள். அவர்களுக்கும் குடும்பம் பெரியதாகி விட்டது. பெண், பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து, மூத்தவன் பேரன், பேத்தி கூட எடுத்து விட்டான். அதனால் அவரவர் தங்கள் பிள்ளைகளிடம் போய் இருக்கவே விரும்பினார்கள்.

கடைசி மகனுக்கு மூன்றும் பெண்கள். மூத்தவன் மட்டுமே

ஸ்ரீ





பீரோ தட்டுகளில் உபயோகித்திய கொசுமேட்டை ஐந்தாறு பரப்பி அதன் மேல் பேப்பர் போட்டுத் துணியை அடுக்கினால் ஒரு வருடம் வரை பூச்சிகள் நெருங்காது.

- என். தஞ்சியம்மாள் நடராஜன், வளையாம்பட்டு.

திருமண வயதிற்கு வந்திருக்கிறான். மற்ற இரண்டு பெண்களும் காலேஜ், ஸ்கூல் என்று போய்க் கொண்டிருக்கிறார்கள். சுமதியின் துணை அவர்களுக்கு வேண்டியிருந்தது. வீட்டுக்கும் நல்ல காவல். வயசுப் பெண்களை வீட்டில் தனியாக விட்டுட்டு வேலைக்குப் போகிறோமே என்ற பயமும் இருக்காது. அது மட்டுமில்லை. நடுநடுவில் பிறந்த வீட்டுக் கல்யாணம், நல்லது பொல்லாதது, உள்ளூரிலும் கல்யாணம், கார்த்திகை என்று போக அம்மா வீட்டோடு இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்தார்கள் கடைசிப் பையனும் மருமகளும்.

போகட்டும். அதெல்லாம் வேண்டாங்கலை, அதற்காக வயதானவர்களை அலட்சியம் செய்வதும், கேட்ட கேள்விக்கு பதிலே சொல்லாமல் இருப்பதும் அல்லது இடக்காக பதில் சொல்வதும் ஏதாவது சொன்னால், அடிக்கடி வயதைச் சுட்டிக் காட்டி, ஏளனமாக எடுத்தெறிந்து பேசுவதும்...

சுமதியின் கண்களில் கண்ணீர் தளும்பிக் கொண்டேதான் இருக்கும். இதில் சுமதியின் வருத்தம் முக்கியமாக என்னவென்றால், 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்த' கதையாக தன் மகன்களும், தான் வளர்த்த பேரன் பேத்திகளும் கூட தன்னையே எதிர்ப்பதும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரும் சேர்ந்து கொண்டு தன்னை அடக்கப் பார்ப்பதும், 'வயசாகன்னா வாயை மூடிக்கிட்டு பேசாம இருக்கணும். சும்மா நொணநொணக்கக் கூடாது. சின்னவங்க விஷயத்துலெல்லாம் அடிக்கடி தலையிடப்படாது. இவ்வளவு வயசுக்கப்புறம் இதுகூடச் சொல்லித்தான் தெரியணுமோ?' என்றெல்லாம் மருமகள்கள் குத்திக்காட்டிப் பேசுவதும்...

எழுபத்தஞ்சு வயதான சுமதியால் இப்பல்லாம் சிறியவர்களின் வார்த்தைக் குத்தல்களைத் தாங்க முடியவில்லை.

❖❖❖

"இல்லே பாட்டி! நீங்க பொய் சொல்றீங்க எனக்குத் தெரியும். உங்களை இப்பல்லாம் யாரும் மதிக்கறதே இல்லேன்னுதானே அழறீங்க? உங்களைப் பார்க்க இப்பல்லாம் யாரும் வர்றதே இல்லேன்னுதானே வருத்தப்படறீங்க?"

❖❖❖

'ஒரு காலத்தில் நாம் இளமையாக இருந்தோம். நமக்குத் தெம்பு இருந்தது. இவர்களை அடக்கி வந்தோம். இளமையும், சரீர பலம், பணபலம், படிப்பு பலம் எல்லாம் கொடுத்த தைரியம். அதது வேலைக்கு ஆட்கள் சகிதம், தாட்பூட்டென்று அதிகாரம் செய்வதும், நம் அதிகாரத்தில்

எல்லோரையும் அடக்கி விடலாம், அடக்கி விட்டோம்; அடங்கி விட்டார்கள் பார்!' என்றெல்லாம் மனத்திற்குள் ஒரு இறுமாப்போடு இருந்தோம் இல்லையா?

இன்று? அன்றே நான், இவர்களிடம் அதிகம் அதிகாரம் செலுத்தாமலும் அடக்குமுறையும் கொடுக்காமல் வாழ்ந்திருந்தால், இன்று எல்லோரும் நம்மிடம் சாதாரணமாகப் பேசுவார்கள். பழகுவார்கள். என் வயதையும் அடிக்கடி சுட்டிக்காட்ட மாட்டார்கள்.

அதற்கெல்லாம்தான் சேர்த்து வைத்து ஒரு தண்டனையாகவே இப்போது இவர்களின் அடக்குமுறையில் நான் அடங்கி ஒடுங்கிப் போய் நிற்கிறேன். அவர் உயிரோடு இருந்தால் இவர்களெல்லாம் பிரிந்திருப்பார்களா? அல்லது எனக்கு இவ்வளவு அடக்குமுறைதான் வந்திருக்குமா?'' சுமதி கிள்ளுக்கீரை போல உணர்ந்தாள்.

❖❖❖

குருவியின் முட்டை மிக மிகச் சிறியதுதான். அதை உள்ளங்கையில் வைத்து மூடி விடலாம். ஆனால் அந்தச் கூட்டில் அது குருவிக் குஞ்சாகி, இறக்கையும் முளைத்து விட்டால் உள்ளங்கையால் மூடி விட முடியுமா?

❖❖❖

குருவியின் முட்டை மிக மிகச் சிறியதுதான். அதை உள்ளங்கையில் வைத்து மூடி விடலாம். ஆனால் அந்தச் கூட்டில் அது குருவிக் குஞ்சாகி, இறக்கையும் முளைத்து விட்டால் உள்ளங்கையால் மூடி விட முடியுமா? இறக்கை முளைத்தால் அது பறந்து விடாதா? குருவி தன் இறக்கையால் அடைகாப்பதும் முட்டைக்குச் சூடு கொடுப்பதற்காகத் தானே?

தானே முட்டையை உள்ளங்கையில் வைத்துச் சூடு கொடுத்துவிட்டு இன்று இறக்கை முளைத்த பிறகு, இறக்கை முளைத்து விட்டதே என்று வருத்தப்படலாமா? தான் செய்த அதிகாரம் இன்று தன்னிடமே திரும்புகிறது? விஷ விதையை நட்டால் விஷ மரம்தான் முளைக்கும். அந்த மரத்தடியில் நின்றால் அதிலிருந்து விஷக் காற்றுதான் வரும்.

அன்று அன்பால் அடக்கியிருந்தால் இன்று அதே அதே அன்பு திரும்பக் கிடைத்தும் இருக்கும். நிலைத்தும் இருக்கும். அதிகாரத்தால் அடக்கினாள். இன்று அவளே அடங்கி விட்டாள்.

சுமதி அழுகிறாள். அழுதுகொண்டேதான் இருக்கிறாள்... ●

வேப்பம் பூவை சீஸனில் சேகரித்து வைக்கும் போது சுத்தப்படுத்திய பூவை, கண்ணாடி அல்லது பீங்கான் பௌலில் போட்டு எலுமிச்சைச் சாறு, உப்புத் தூள், சிறிது பெருங்காயத் தூள் சேர்த்து ஊறவிடவும். பிறகு, வட்டிலில் போட்டு நிழலிலேயே உலர்த்தி காற்றுப்புகாத பாட்டிலில் எடுத்து வைத்துக் கொண்டால் வறுத்து சாதத்தில் கலந்து சாப்பிட்டாலும், ரசம் வைத்தாலும் ருசி சூப்பராக இருக்கும்.

- மன்னை. ஜி. நீலா.



நான் என் பெண் லக்ஷ்மி, தோழி காமாட்சியுடன் சென்னையிலிருந்து திருவனந்தபுரத்தில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில், குழித்துறையில் பஸ் சிறிது நேரம் நின்றது. சில பெண்கள் சதுரமான முறத்தில் எதையோ வைத்துக் கொண்டு பஸ்ஸில் உள்ளவர்களி டம் ''அண்டி





"அண்டி வேணா அண்டி வேணா!"

வேணா, அண்டி'' என்று கூவிக் கொண்டிருந் தார்கள். ''அண்ட வேணா அண்ட வேணா என்கிறார்களே எதை அண்ட வேணாம்?'' என்று கேட்டாள் காமாட்சி.

''அண்டி வேணுமா எனக் கேட்கிறார்கள். அண்டின்னா, முந்திரிப் பருப்புதான். வேறொன்றுமில்லை'' என்றேன்.

பிரியப்படுகிறாளே என்று காமாட்சிக்கு வாங்கிக் கொடுத்தேன்.

சதுரமான முறத்திற்குள் அழகான ஓலைப் பெட்டிகளில் சுட்ட அண்டிக் கொட்டைகள் வைக்கப்பட்டிருந்தன. சுவைத்துப் பார்த்தாள்.

''கடைகளில் வாங்கும் முந்திரி பருப்பை விட, இவை மிகவும் ருசியாக உள்ளன. பார்க்கவும் வித்தியாசமாகக் காணப்படு கின்றனவே!'' எனக் கேட்டாள்.

''ஓ! அதுவா, கொல்லாங்கோட்டையை - (முந்திரிக் கொட்டையின் இத்திருத்தல நாமகரணம்) - நெருப்பில் சுடுவார்கள். சுடும் பொழுது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் கொட்டையின் ஓட்டுக்குள் பால் இருக்கும். அது சூடேறியதும் எண்ணெயாகி கொட்டையிலிருந்து வெளியே நாலாபக்கமும் தெளிக்கும். சூடான எண்ணெய் நம் மீது பட்டால் சருமத்தில் கொப்புளங்கள் ஏற்பட்டு காயங்களும் உண்டாகலாம். இதனைத் தயாரிக்கும் பெண்களுக்கு காலம் நேரப் பக்குவம் தெரியும். சமயமறிந்து கொல்லாங் கொட்டைகளை நெருப்பிலிருந்து எடுத்து ஆறவைத்து, லாகவமாக ஓடுகளை நீக்கி பக்குவமாகப் பருப்பை எடுப்பார்கள். சீனிக்கிழங்கை வேகவைத்துச் சாப்பிடுவதை விட சுட்டு சாப்பிட்டால் ருசி அதிகம் இல்லையா? அது மாதிரித்தான் இதுவும். சுட்டதனால் ஆய பயன் தெரிஞ்சுக்கோ!'' என்றேன் ரொம்ப மேதாவித்தனமாக!


காமாட்சி, 'சரியான முந்திரிக் கொட்டை' என என்னை நினைத்திருப்பாளோ?

– ஜெயஸ்ரீ பஞ்சாபகேசன்,
முகப்பேர் (மேற்கு)

DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL

Cancer & Radiation, Byepass (CABG) At Affordable Rates


இருதயத்துக்கு இதம் தரும் காமாட்சி மருத்துவமனை



- ஹார்ட் அட்டாக் வந்து நான்கு மணி நேரத்துக்குள் அட்மிட் செய்தால், ஆஞ்சியோ பிளாஸ்டி செய்து, உயிரைக் காப்பாற்ற இங்கே வசதியுண்டு.
- இருதய வால்வுகள் பழுதடைந்தாலோ, பிறவியிலேயே துவாரம் ஏற்பட்டிருந்தாலோ பைபாஸ் சிகிச்சை செய்து குணப்படுத்த முடியும்.
- இருதயம் ஓடும் நிலையிலேயே Beating Heart Surgery செய்தால் விரைவில் குணம் பெற இயலும்.
- பலூன் வழியாக அடைப்பை நீக்கும் சிகிச்சை, மல்ட்டிபிள் சர்ஜரி, ஆஞ்சியோ பிளாஸ்டி என்று நோயின் தன்மைக்கு ஏற்ற சிகிச்சை முறைகள் உண்டு.

கவனிக்க வேண்டியவை:

மூச்சுத் திணறல் அல்லது (Breathing Problem) தொடர்ந்து இருந்தால் கவனியுங்கள். அதிக உயரம் ஏறும்போது மார்புவலி வந்தால் அது ஓர் எச்சரிக்கை. சிலருக்கு முதுகுவலி, பல்வலி, வயிற்றுப் பகுதியில் வலி என்று சுற்றியுள்ள பகுதியில் வலி வரும். சிலர் அதிகமாகச் சோர்ந்து போய் இருப்பார்கள். 'என்ன காரணம் என்றே தெரியவில்லை, ஆனால் ஒரேயடியாக அடித்துப் போட்ட மாதிரி சோர்வாக இருக்கிறது' என்பார்கள். இவை எல்லாம் இருதய நோய்க்கான சில அறிகுறிகள்.



இலவச ஆலோசனைக்கு

எஸ். சுபாஷிணி 93451 20265

DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL

1, Radial Road, Pallikaranai, Chennai - 601 302
Tel : +91-44-22469200 (10 Lines) Fax : +91-44-22463282
E-mail : infor@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital

10 % Special Discount On Sunday for Master & Executive Health Check-up

''சிவகங்கையிலிருந்து வந்திருந்தாள் புதுமணப் பெண் தேவி. அவளுடைய கணவர், அமெரிக்காவில் இருந்தார். ஆறு முறை விஸாவுக்கு மனு செய்தும், தேவிக்கு விசா கிடைக்கவில்லை. கணவனைப் பிரிந்த



ஏக்கம், எதிர்காலம் குறித்த பயம், விசா கிடைக்கவில்லையே என்ற கவலை... என எல்லாம் சேர்ந்து மனச் சோர்வில் இருந்த தேவி, எங்களை அணுகினார். அவருக்கு விசா தொடர்பான ஏ டு இஸட் எல்லா விஷயங்களையும் செய்து கொடுத்ததோடு, விஸா இன்டர்வ்யூவில் எப்படி நடந்து கொள்ளணும் என்றும் சிறப்புப் பயிற்சி தந்தோம்.

''இந்த முறை அழுகையோ, பதற்றமோ இல்லாமல், தேவி நேர்முகத் தேர்வை எதிர்கொண்டாள். விஸா கிடைத்தே விட்டது. 'மேடம்... உங்க உதவியை என்

அன்புடன் உதவுறாங்க!



வாழ்நாள் முழுக்க மாட்டேன்'னு கண்ணீருடன் நன்றி சொன்ன தேவி, இன்று அமெரிக்காவில் கணவருடன் சந்தோஷமாக இருக்கிறாள்!'' என்கின்றனர், சென்னை, அடையாறில் 'விஸா வேஸ்' என்கிற நிறுவனத்தை நடத்தி வரும் சாந்தி, அருந்ததி, சரஸ்வதி.

''விஸா பெறுவதற்கான சட்டங்களும் சம்பிரதாயங்களும் மிகவும் கடினமானவை ஆயிற்றே! உங்களுக்கு இத் தொழிலில் ஆர்வம் வந்தது எப்படி?''

''என் கணவர் அமெரிக்கத் தூதரகத்துல பத்து வருஷம் வேலை பார்த்தவர். அதனால எங்க நண்பர்கள், உறவினர்கள்னு பல பேர், விஸா சம்பந்தமா ஏதாவது சந்தேகம் கேட்பாங்க. நானும் என் கணவர்கிட்ட கேட்டு விளக்குவேன். அப்படி உதவி செஞ்சதுல, என்னையுமறியாமல், விசா சம்பந்தமான விவரங்கள் அத்துப்படி ஆயிடுச்சு! என்

கணவர் தூதரக வேலையை விட்டுட்டு வேறு வேலைக்கு மாறிய பிறகும், 'அப்ளிகேஷன் வாங்கித் தாங்க; விண்ணப்ப ஃபார்ம் நிரப்பித் தாங்க'னு வந்துக்கிட்டே இருந்தாங்க. சரி, இதையே பிஸினஸா செஞ்சா என்னன்னு தோணுச்சு. என்னோட இரண்டு அண்ணிகளையும் இதில் இணைச்சுக்கிட்டேன். 'விஸா வேஸ்' உருவாயிடுச்சு'' என்றார் சாந்தி.

''ஆரம்பத்துல மிகவும் எளிமையா, வீட்டிலிருந்தேதான் ஆரம்பிச்சோம். சில கஸ்டமர்ஸ், வெளியூர்லயிருந்து திடீர்னு கிளம்பி வந்துடுவாங்க. அவங்களுக்காக, லீவு நாட்கள்ல கூட



வேலை பார்த்திருக்கோம். படிக்காதவங்களும் கிராமப்புற ஆட்களும் எங்களை அணுகும் போது, அவங்களுக்குப் புரிய வைக்கிறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடும். ஆனாலும் ரொம்பப் பொறுமையா, சொல்லிக் கொடுப்போம். எங்களோட கடுமையான உழைப்புக்குக் கை மேல பலன் கிடைக்க, இன்னிக்கு இந்தத் தொழில்ல நாங்க முன்னணியில இருக்கோம்னா, அதுக்குக் கடவுளோட அனுகிரகமும், எங்க குடும்ப நபர்கள் தரும் உற்சாகமும், ஊக்கமும்தான் காரணம்'' என்று பெருமிதப் பட்டார் சரஸ்வதி.

விஸா வாங்குவது பற்றி சில அடிப்படை நுணுக்கங்களைப் பகிர்ந்து கொண்டார் அருந்ததி.

அமெரிக்கா மட்டுமல்லாது, அனைத்து வகையான வெளிநாட்டு விஸாக்களும் பெற நாங்கள் உதவுகிறோம். அமெரிக்கா விஸா பெறுவதற்கான அடிப்படை செயல்பாடுகள் வித்தியாசமானவை. சற்றுக் கடினமானவை. அது முழுக்க முழுக்க கணினிமயமானது. சின்னத் தவறு நேர்ந்தாலும் கணினி, உங்கள் மனுவை நிராகரித்து விடும்.

விஸாவில் நிறைய வகைகள் உள்ளன. டூரிஸ்ட் விஸா, பிஸினெஸ் விஸா, ஸ்டூடண்ட் விஸா, கலைத் துறை விஸா... இப்படி. அவரவர்



பஸ்ஸின் மேல் கம்பி உயரமானவர்களுக்கு மட்டும்தான் எட்டுகிறது. பஸ்ஸில் ரப்பர் வளையங்களை மாட்டினால் உயரம் குறைந்தவர்களுக்கு வசதியாக இருக்குமே!

– கே. விஜயா, திருச்சி.

விஸாவுக்கு ஏற்ப தேவைப்படும் ஆவணங்கள் அனைத்தையும் நேர்மையாகத் தயாரித்து வழங்க வேண்டும். இன்டர்வ்யூவில் நம்மைப் பற்றிய விவரங்களைத் தெளிவாகவும், உண்மையாகவும் சொல்ல வேண்டும்''

இதில் முக்கியப் பங்குவகிப்பது மாணவர் விஸாதான்! மாணவர்கள், விஸா கிடைக்கணுமே என்று டென்ஷனாக இருப்பார்கள். அவர்களுக்கு இன்டர்வ்யூவுக்கான அப்பாயிட்மெண்ட் எடுப்பதிலிருந்து, விஸா கிடைக்கும் வரை உள்ள செயல்முறைகளை விரிவாக விளக்குவோம். நேர்முகத் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள், அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்து, அவர்களது தன்னம்பிக்கையைப் பன்மடங்கு ஆக்குவோம். இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் கவனம் செலுத்தி, தயார் செய்யும் போது, மாணவர்களுக்கு விஸா கிடைப்பது எளிதாகிறது'' என்றார் அருந்ததி.

“**ச**மீபத்தில் ஒரு பெண்மணி, சிறுநீரக ஆபரேஷன் செய்யப்படவிருக்கும் தமது தங்கை மகளைப் பார்த்துக் கொள்வதற்காக, அமெரிக்கா போக வேண்டியிருந்தது. அவருடைய நிலைமையைப் புரிந்து கொண்டு, வேகமாகச் செயல்பட்டு, விஸா வாங்கித் தந்தோம். அவர் ஊர் போய் சேர்ந்ததும், எங்களிடம்தான் முதலில் பேசினார். நன்றி சொல்லி அழுதே விட்டார். ''ஏதோ நாங்களும் பிஸினெஸ் செஞ்சோம் நாலு காசு சம்பாதிச்சோம்''னு இல்லாமல், மற்றவர்களின் பிரச்னைகளை அன்புடன் அணுகி, உதவுவதால்தான் எங்கள் நிறுவனம் தனித்து நிற்கிறது'' என்கின்றனர் மூவர் கூட்டணி கோரஸாக!

பேட்டி : **அம்முலு**
படங்கள் : **ஸ்ரீஹரி**



வெயில் அதிகமாகி விட்டது. இரவில் சாதத்தில் தண்ணீர் ஊற்றி வைத்துக் காலையில் அந்தத் தண்ணீரில் நல்லெண்ணெய் ஒரு ஸ்பூன் ஊற்றிக் குடித்தால், வயிற்றுப் போக்கு, சீதபேதி, அஜீரணம் சம்பந்தப்பட்ட எந்தக் கோளாறும் வராது.

– ஆர். பார்வதி, சென்னை.

ஜூன் மாதம் பிறந்தாச்சு...
ஸ்கூல் திறந்தாச்சு...
குட்டீஸைத் தயார்ப்படுத்தி ஸ்கூலுக்கு
அனுப்புவதில் அம்மாக்களுக்கு மட்டுமா
டென்ஷன்? குழந்தைகளுக்கும்தான்...
அதைக் குறைக்க சில எளிய டிப்ஸ்...

ஸ்கூலுக்குக் கிளம்பியாச்சா?



★ ஸ்கூல் திறக்கும் முன்பே குழந்தைகள் மனதில் புதிய ஆண்டு/வகுப்பைப் பற்றி ஒரு சந்தோஷ எதிர்பார்ப்பை ஏற்படுத்த சில சிறிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளுங்கள்.

★ ''ஸ்கூலுக்குப் போனால் உன் ஃப்ரெண்ட்ஸ்ஸை பார்க்கலாம்.''

''உன் ஹாலிடே ஃபோட்டோக்களை உன் கிளாஸ் பசங்களுக்குக் காட்டப் போறியா?''

''நிறைய புது ஃப்ரெண்ட்ஸ் கிடைப்பாங்க!'' - இப்படி எல்லாம் சொல்லி உற்சாகப்படுத்தலாம்.

★ ஸ்கூலுக்கு வேண்டிய பொருட்களை வாங்கும் ஷாப்பிங்கில் உங்கள் குழந்தையை ஜாலியாக ஈடுபடுத்துங்கள்.

புதிய புக்ஸ், ஷூ, சாக்ஸ், பென்சில் பாக்ஸ் வாங்குதல், நோட்புக்குகளுக்கு அட்டை போட்டு கலர் கலராக லேபிள் ஒட்டுதல் போன்ற சாதாரண விஷயங்களைக் கூட நீங்கள் சுவாரசியமானதாக்கலாம்.

★ லீவ் நாட்களில் காலை நேரத் தூக்கம் அதிகமானதால் ஸ்கூல் திறந்தவுடன் சீக்கிரமே எழுந்து தயாராக குழந்தைகள் சற்று சலிப்படைவார்கள். அதை மாற்ற அவர்களை இரவு சீக்கிரமே தூங்க அனுப்புங்கள்.

★ புதிய வர்ணத்தில் இட்லி,

குட்டிக் குட்டியாய் நறுக்கிய சாண்ட்விச், வயிற்றை நிரப்பும் சுவையான பழ மில்க் ஷேக் என்று காலை உணவை சுவாரசிய மாக்க முயற்சி செய்யுங்க!

★ ஸ்கூல் பேக் வேன், ஆட்டோவில் மாறிவிட வாய்ப்பு உண்டு. அதைத் தவிர்க்க பேக் மீது குழந்தைகளுக்குப் பிடித்தமான கார்ட்டூன், விலங்குகள் ஸ்டிக்கர்களை ஒட்டி வைத்தால் சுலபத்தில் குழந்தை தன் பையை அடையாளம் கண்டுகொள்ளும்.

★ குழந்தைகளின் ஷூக்களை தாமே போட்டுக் கொள்ளப் பழக்கி விடுங்கள். வலது, இடதுகால்களில் அடையாளத்திற்கு 'R', 'L' என்று எழுதி வைக்கவும். ஷூக்களை மாற்றி போட்டுக் கொள்ளாமல் இருப்பார்கள்.

★ லஞ்ச் கேரியரை அடுக்கி வைப்பது குழந்தைகளுக்கு சிரமமாக இருந்தால், பாத்திரங்களில் 1, 2, 3 என்று எண்கள் எழுதி வைத்தால் போதும். குழந்தைகள் சுலபமாக தாங்களே செட் செய்து விடுவார்கள்.

★ டீச்சர், உடன் படிப்பவர்களைப் பற்றிய புகார்களை உதாசினப்படுத்த வேண்டாம். அதே சமயம் பெரிதும் படுத்தாமல் 'பாசிட்டிவ்'வாக சமாளித்தால் சிறு பிரச்னைகள் தாமே காணாமல் போகும்.

★ புதிய வகுப்பு ஆரம்பித்தவுடன் ஒரிருமுறை உங்கள் பிள்ளையின் ஸ்கூலுக்குப் போய் ஆசிரியர், ஃபிரெண்ட்ஸை பரிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

★ ஸ்கூல் திறந்தவுடனேயே படிப்பு, ஹோம்வொர்க் என்று ஒரேயடியாக விரட்டாமல் விடுமுறையில் அவர்கள் ஈடுபட்ட ஹாபிகளுக்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்.

★ ஓவர் லோடாக குழந்தைகளை ஏற்றும் ஆட்டோ, வேன் ஆகியவற்றைக் கூடியவரை தவிர்ப்பது குழந்தைகளின் பாதுகாப்புக்கு அவசியம்.

★ அப்பா, அம்மாவின் மொபைல், லேண்ட் லைன் நம்பர்கள், வீடு, ஆபீஸ் அட்ரெஸ் போன்றவற்றை படிப்படியாக அவர்களுக்கு மனப்பாடம் செய்யப் பழக்குங்கள்.

தவிர, அவற்றை ஸ்கூல், டைரி போன்றவற்றில் எழுதி வைக்கவும்.

★ முன்பின் பழக்கமில்லாதவர்களுடன் பழகுவதில் எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துவது குழந்தைகளின் பாதுகாப்புக்கு அவசியம்.

- ஜெயலட்சுமி, சென்னை - 42.



உடம்பில் வலி இருக்கும் போது ஹாட் வாட்டர் பேக் வைத்துக் கொள்வோம். ஒரு வேளை வெந்நீர் போட நேரமில்லாவிடில் ஹேர் டிரையர் பயன்படுத்தி, சூடான காற்றை ஸ்பிரே செய்து கொண்டால், நல்ல பலன் தெரியும்.

- ராஜி கணேசன்,
வளசரவாக்கம்.

அஹா 50!



இந்த கோடைக் காலத்தில் பொரியலுக்கு, வத்தக் குழம்புக்கு இரும்புச் சட்டியையும், சாதம், தயிர், குடிதண்ணீர், கம்பங்கூழ் வைக்க மண்பானையையும் உபயோகிக்கலாமே!

- ஈ. உஷா, ஈரோடு.

பால் மிளகு ரசம்!

அரை ஸ்பூன் மிளகு, ஒரு ஸ்பூன் தேங்காய்த் துருவல் இரண்டையும் நெய் விட்டு வறுத்து தண்ணீர் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து பாத்திரத்தில் வைத்துக் கரைத்துக் காய்ச்சவும். உப்பு, ஒரு கிண்ணம் பால் இவற்றைக் கொதிக்கும் ரசத்தில் போட்டு சிறிது கண்டியபின், சீரகத்தைப் பொரித்துக் கொட்டவும். இந்த மிளகு ரசம் சுவையானது மட்டுமல்ல; ஜலதோஷம், நீர்க்கோவை, பசியின்மையையும் நீக்கும்.

- ஆர். வி. சுஜாதா, சென்னை

நாம் கம்மல் அணியும் போது ஓர் இடத்தில் உட்கார்ந்து போட வேண்டும். நின்று கொண்டு போட்டால் திருகாணி, தோடு, கீழே விழுந்தால் எங்கேயாவது உருண்டு ஓடிவிடும். கல், முத்தும் விழுந்து விடும். மொசைக் தரையில் விழுந்தால் கண்டுபிடிப்பது கஷ்டம். உட்கார்ந்து போடும் பொழுது பெரும்பாலும் நம் மடியில்தான் விழும். தேட வேண்டாம்.

- சாந்தா கண்ணப்பன், சென்னை.

குழந்தைகளை கைபிடித்துக் கொண்டு போகும் போது சாலையின் வலது பக்கமானால் குழந்தைகளை வலதுபக்கமாகவும், இடதுபக்கமானால் இடது கையிலும் குழந்தையைப் பிடித்திருக்க வேண்டும். குழந்தைகள் நம்முடைய கையை விட்டுப் போனாலும் நேரடியாக ரோட்டில் போக முடியாதே. அதோடு, குழந்தைகள் நம்முடைய கையைப் பிடித்துக் கொள்வதற்குப் பதில் நாம் அவர்களுடைய கையைப் பிடித்திருக்க வேண்டும்.

ஆர். ராதாராமன், கொச்சின்.

பெண்களுக்கு மாதவிலக்கு சமயத்தில் சிறிது பொரிகடலையை தினமும் சாப்பிட்டு வந்தால் மாதவிலக்கு தள்ளிப் போகும்.

- வே. லெட்சுமி, மதுரை.

பச்சை மிளகாயை மிக மெல்லியதாக நறுக்க கத்தரிக்கோலைப் பயன்படுத்தலாம்.

- சீதா சம்பத், சென்னை - 78.



இந்தியாவின் முதல் மூலிகை கொசு விரட்டி மற்றும் பூச்சி விரட்டி
மூலிகை கொசு விரட்டி
100% NATURAL
மூலிகை பூச்சி விரட்டி
HI'NIGHT Nets
HERBAL
MOSQUITO REPELLANT VAPORIZER
HERBAL'S CHOICE
HERB'X
MULTI PURPOSE HERBAL
INSECT REPELLANT SPRAY
Products with the foundation of Aloe vera & combination of various Medicinal herbs.
Lively Cosmetics
SKIN CARE SERIES :
Fairness gel, Fairness cream, Antiwrinkle cream
HAIR CARE SERIES :
Hair Gel, Protein Antidandruff & Conditioning Shampoo
Manufactured by
HERBALS SOLUTIONS,
BANGALORE DIST - 562 107.
Marketed by
RANGA & CO.,
47-E, 2nd AGRAHARAM, SALEM - 636 001.
9443217918, 9360624144



ஆல்ஃபா மைண்ட் பவர்
ஆழ்மனதின் சக்தி!
ALPHA MIND POWER ™
"Unwind Your Mind & Empower Yourself"
டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்
ஆல்ஃபா தியான அனுபவம் இதோ ஒரு
தபால் மூலம் கற்கலாம்
ஜூன் மாத பயிற்சி வகுப்புகள்
சென்னை : 10.5.07
கோயம்புத்தூர் : 17.6.07 பெங்களூர் : 8.7.07

டூ வீலர் பயணிகள் கட்டாயமாக ஹெல்மெட் அணியும் சட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. இந்தச் சட்டம் பற்றி காரசாரமாக விவாதிக்கிறார்கள் இவர்கள்...

உதயம் ராம் : (தொலை தொடர்புத் துறை அதிகாரி)

சென்னை நகரத்துக்குள்ள கூட பரவாயில்லை... ஆனா சிட்டி லிமிட்டுக்கு வெளியே... ஈஸிஆர் ரோடு மாதிரி இடங்கள்ல எல்லாம் இளைஞர்கள் ரொம்ப ஸ்பீடா போறாங்க... பொண்ணுங்க கூட 60, 80 னு பறக்கறாங்க... நகரத்துக்கு வெளியே ஹெல்மெட் அவசியம் வேணும்...

எஸ்.வி. ராஜசேகர் : (தலைவர், உரத்த சிந்தனை அமைப்பு)





ஹெல்

அதற்காக சிட்டிக்குள்ளே விபத்துக்கள் நடக்கலைன்னு சொல்ல முடியாது... வேகம் குறைவா இருக்கறதால பாதிப்பும் குறைஞ்சு இருக்கலாம்... ஹெல்மெட் சிட்டிக்குள்ளேயும் வேணும்...

எஸ். விக்னேஷ் ரவி : (சொந்த பிசினஸ் வைத்திருப்பவர்)

ஹெல்மெட் நிச்சயம் தலைக்குக் கவசம் தான். ஆனால் பிஸினஸ் விஷயமா பல இடங்களுக்கும் அடிக்கடி போக வேண்டி

யிருக்கு... அப்பல்லாம் ஹெல்மெட் ஒரு சுமையாத்தான் இருக்கு...

சி. ஷர்மினி : (எம்.பி.ஏ. மாணவி)

அதுக்குத்தான் ஸ்கூட்டர்ல லாக் வைச்சிருக்காங்களே...



மெட்..?

ஹரீஷ் : (பி.காம்., மூன்றாம் ஆண்டு மாணவர்)

நீங்க வேற! லாக்கை உடைச்சிட்டு ஹெல்மெட் திருடிட்டுப் போயிடறாங்க! சுமைதான்... இருந்தாலும், ஹெல்மெட் தேவைதான்... இப்பல்லாம் பசங்க கேட்கிற ஹைபவர் வண்டியை, 80,000 ரூபாய் ஆனாலும் பேரண்ட்ஸ் வாங்கிக் குடுத்துடறாங்க... அவனவனும் 100 கிலோ மீட்டர்ல போறான். எங்க காலேஜ் பைபாஸ் ரோட்டுல குறைஞ்சது மாசம் இரண்டு விபத்து நடக்குது... அதிலும் கேர்ள் ஃபிரண்ட்ஸ் பின்னாடி இருந்தா... கேக்கவே வேணாம். ஹீரோவா நினைச்சு கைகளை விட்டுட்டு ஒட்டறதும்... படுத்துகிட்டே ஒட்டறதுமா அட்டகாசம் பண்றாங்க!

லலிதா விக்னேஷ் ரவி : (குடும்பத் தலைவி) : பின்னால உட்காருகிறவங்களும் ஹெல்மெட் போடணுமே... வேர்த்துக் கொட்டும்... தலைமுடி கொட்டிப் போகும்னு பயமுறுத்தறாங்களே...

எஸ்.வி. ராஜசேகர் :

அதெல்லாம் இல்ல... சைட்ல சின்ன ஓட்டைகள் வச்ச ஹெல்மெட் கிடைக்குது. உள்ள ஃபோம் கொடுத்திருக்காங்க... காற்றோட்டமாதான் இருக்கும்..

ஹரீஷ் : ஹெல்மெட் கூட தொப்பி தராங்க. அதைப் போட்டு அது மேல ஹெல்மெட் மாட்டிக்கலாம்.

லலிதா : குழந்தைகளுக்கும் ஹெல்மெட் போடணுமாமே! அப்ப அந்த சைஸ்ல கிடைக்குமா?

உதயம் ராம் : சமீபத்துல பேப்பர் பார்த்தீங்களா? ஒரு குழந்தை அதுவும் கைக் குழந்தையா இருந்தா மட்டும்தான் டூவீலர்ல கூட்டிப் போகலாம்... முன்னாடி, பின்னாடி நிக்க வெச்ச, ரெண்டு மூணு குழந்தைகளை எல்லாம் கூட்டிப் போகக் கூடாதுன்னு சட்டம் வருதே...

ஷர்மினி : அதெப்படிங்க முடியும்? குடும்பத்தோட அவசியமா போக வேண்டிய காரியமா இருந்தா, அஞ்சாறு வயசுக் குழந்

தைகளை விட்டுல தனியா விட்டுட்டா போக முடியும்...?

லலிதா : அதானே? இதைக் கொஞ்சம் ஆலோசிச்சா தேவலை!

ராஜசேகர் : சத்தம், புகை போன்ற மாசுப் பொருட்களிலிருந்து உடம்பைப் பாதுகாக்க ஹெல்மெட் நல்ல கவசம்...

ஹரீஷ் : பசங்க இஷ்டத்துக்கு காதுல வாக்மேன், கைல செல்ஃபோன்னு பாட்டு கேட்டுகிட்டோ, பேசிக்கிட்டோ போக முடியாது.

உதயம் ராம் : கொஞ்சம் பொறுங்க. விரைவில, ஹெல்மெட்டுக்குள்ளேயே ஃபோன், மைக் வசதி கொண்டு வந்துடுவாங்க.

ஷர்மினி : ஏங்க, அது மாதிரி கவனம் சிதறிப் போகக் கூடாதுன்னுதானே ஹெல்மெட் சட்டமே கொண்டு வராங்க...

ராஜசேகர் : போற இடத்துல எல்லாம் தூக்கிக்கிட்டு போகணும்னு விக்னேஷ் ரவி சொல்றாரு... சரி, ஒரு வீட்டுல நாலு பேர் பைக் சவாரி செய்யறவங்க இருந்தா அந்த நாலு ஹெல்மெட் வைக்கவே நிறைய இடம் வேணுமே! இப்ப இருக்குற சின்ன ஃபிளாட் அமைப்புல...

உதயம் ராம் : நான் என்ன நினைக்கிறேன்னா, இதனால நிறைய வேலை வாய்ப்புகள் உருவாகலாம். இப்ப செல் சென்டர்னு செல்ஃபோன் வைக்கிறதுக்கு சில இடங்கள்ல இருக்கே, அது மாதிரி ஹெல்மெட் சென்டர் வரலாம்.. ஜனங்க கூடுற இடத்துல செருப்பு பாதுகாக்கிற மாதிரி ஹெல்மெட் வைத்து பாதுகாத்து டோக்கன் தரலாம்.

ராஜசேகர் : சைக்கிள் வாடகைக்கு விடுகிற மாதிரி அங்கங்கே ஹெல்மெட் வாடகை கடைகள் கூட முளைக்கலாம்.

எஸ். விக்னேஷ் ரவி : இதையெல்லாம் தாண்டி உயிருக்குப் பாதுகாப்பு என்கிற ஒரே காரணத்துக்காக ஹெல்மெட்டை வரவேற்கலாம். ஆனா ரெண்டு குழந்தைங்களை டூவீலர்ல கூட்டிப் போகக் கூடாதுனு சட்டம் வந்தா... ஒரு குடும்பத் தலைவன் என்கிற முறையில எப்படி சமாளிக்கிறதுன்னுதான் புரியலே...

லலிதா : ஒருவேளை, கூட்டுக் குடும்ப வாழ்க்கை திரும்பி வர வாய்ப்பு ஏற்படுமோ... என்னமோ...!

தொகுப்பு :

பத்மினி பட்டாபிராமன்

படங்கள் : ஸ்ரீஹரி



உடல் இளைக்க முயற்சி செய்பவர்கள் கொதிக்க வைத்த நீரில் ஒரு ஸ்பூன் சீரகம் போட்டு தினமும் 2 லிட்டர் பருகி, இரவு உறங்கும் முன் தூய்மையான நல்லெண்ணெய் ஒரு ஸ்பூன் பருகி வந்தால் கொலஸ்ட்ரால் அளவு குறையும். நாளடைவில் உடல் இளைக்கும்.

- கவிதாயினி தங்கம்,
நங்கநல்லூர்.

வருவது வரும்!



வருவதுதானே, வரும்
வருவது, தானே வரும்
வாரியார் அடி எடுத்துத் தந்தார்
அடியேன் தொடர்கிறேன்

அடுத்தவன் பொருள்
உன்னிடம் நிற்காது.
உனக்கு உள்ளது
யாரையும் சேராது.

உழைத்துச் சேர்த்தது
உன்னை விட்டு விலகாது
விட்டுக் கொடுத்தது
வீணாய்ப் போகாது

ஏமாற்றி எடுத்தது,
எதிலும் ஒட்டாது.
பகிர்ந்து எடுத்தது
சிதறிப் போகாது.

தப்பாய் எடுத்தது,
தங்கி நிற்காது.
ஏய்த்து எடுத்தது,
எதற்கும் உதவாது.

அத்தனையும் உண்மை
என்றிருப்போம்
வருவது, தானே வரும்;
வருவதுதானே, வரும்!

கோமதி நடராஜன்

இரவல் தராதீங்க!

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் சரக்குகளை ஏற்றிச் செல்லும் மினி டெம்போ டிரைவர் ஒருவர் குடியிருக்கிறார். சமீபத்தில் அவர் டெம்போ ஸ்டாண்டில் இருந்தபோது ஒருவர் வந்து, "வீடு மாறுகிறேன். இரண்டு வீதி தாண்டியுள்ள சந்தில் இருந்து வீட்டுச் சாமான்களை ஏற்றிக் கொண்டு புதிய வீட்டுக்குப் போகணும். புதிய வீடு, மெயின் ரோட்டில் உள்ளது" என்று கூறி வாடகை பேசி டெம்போவில் ஏறிக் கொண்டார்.



டெம்போவில் செல்லும் போது டிரைவரிடம், "என்னுடைய செல்ஃபோனை எடுத்துக் கொண்டு வர மறந்து விட்டேன். உங்க செல்ஃபோனைக் கொடுங்க. வீட்டுக்கு ஒரு ஃபோன் செய்ய வேண்டும்" என்று கூறி, செல்ஃபோனை வாங்கி "டெம்போ ஏற்பாடு செய்து விட்டேன். டெம்போவில் வந்து கொண்டு இருக்கிறேன். நம்ம வீட்டு சந்து வரும் பொழுது மீண்டும் பேசுகிறேன்" என்று கூறிவிட்டு செல்ஃபோனை டிரைவரிடம் கொடுத்து விட்டார்.

வீடு இருக்கும் சந்து அருகே டெம்போ நின்றவுடன் அவர் டெம்போவில் இருந்து இறங்கி டிரைவரிடம் "வண்டியை ஓரத்தில் நிறுத்தி வையுங்க" என்று கூறிவிட்டு டிரைவரிடம் இருந்து செல்ஃபோனை வாங்கி, "நாங்க வந்தாச்சு. விரைவில் சாமான்களை எடுத்துக் கொண்டு வா" என்று செல்ஃபோனில் பேசிக் கொண்டே ஏதோ சந்துக்குள் வேகமாகச் சென்று மாயமாகி விட்டார். "இதோ வருவார்... இதோ வருவார்" எனக் காத்திருந்து, டெம்போ டிரைவர் அக்கம் பக்கத்தில் விசாரித்துப் பார்த்த போதுதான் தான் வசமாக ஏமாந்தது அவருக்குத் தெரிந்தது.

அறிமுகம் இல்லாதவர்களிடம் செல்ஃபோனை மறந்தும் கொடுத்து விடாதீர்கள்!

- எஸ். கௌரி,
கோவை.


மங்கையர் மலர்
அடுத்த இதழில்...
naturals
UNISEX SALON & SPA
'நேச்சுரல்ஸ்'
வீணா
வழங்கும்
உள்ளங்கால் முதல் உச்சிவரை...
அழகுக்கலை
தொடர்
ஆரவாரமாக
ஆரம்பம்!

முதல் பரிசு: டேபிள் டாப் வெட் கிரைண்டர் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: சித்ரா ஜெயசீலன், பெருங்குடி



பொருள்:
மாலை நேர நொறுக்ஸ்

மண்ணடியான் வறுகண்டம்

தேவையான பொருள்கள்:

சேனைக்கிழங்கு- ¼ துண்டு.
உருளைக் கிழங்கு - 2,
சர்க்கரைவள்ளிக் கிழங்கு - 5,
பெருங்காயம் - சிறுகட்டி.
சீரகம், ஓமம் தலா 1 டீஸ்பூன்,
எள் - 2 டீஸ்பூன்,
உப்பு தேவைக்கு ஏற்ப,
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை,
எண்ணெய் - பொரிக்க.

செய்முறை:

கிழங்கு வகைகளைக் கழுவி சுத்தம் செய்யவும். தோல் நீக்கி, துண்டுகளாக வெட்டி மஞ்சள் தூள் சேர்த்து வேக

இம்மாத இல்லத்தரசி



விட்டு நன்கு மசிக்கவும். அல்லது மிக்ஸியில் ஒட்டி எடுத்து வைக்கவும்.

வெங்காயம், வற்றல் மிளகாயை வெறும் வாணலியில் வறுத்து மைபோல் அரைத்து கிழங்குக் கலவையில் இடவும். பாசிப்பயறு, வேர்க்கடலை இரண்டையும் வாசனை வரும் வரை வறுத்து, மாவாக அரைத்து எடுக்கவும். சீரகம், ஓமம், எள் மூன்றையும் வறுத்து அரைத்த மாவுடன் கலந்து உப்பு சேர்த்து கிழங்கு விழுதில் போட்டு நன்கு பிசைந்து சிறு சிறு தட்டைகளாகத் தட்டி சூடான எண்ணெயில் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

சுவையும் சத்தும் கொண்ட இந்த வறுகண்டம் ஒரு மாதம் வரை வைத்துக் கொள்ளலாம்.

- சித்ரா ஜெயசீலன்,
பெருங்குடி

இரண்டாம் பரிசு ரூ.300/-

ஹெல்த்தி சோயா பவுல்

தேவையான பொருள்கள்:

சோயா மாவு - 1 கப்
அரிசி மாவு - ½ கப்
கடலை மாவு - ½ கப்
எண்ணெய் - பொரிப்பதற்கு
உப்பு - தேவைக்கேற்ப
ஸ்மால் கிண்ணங்கள்,
வேர்க்கடலைப் பொடி - தேவையான அளவு

பூரணத்திற்கு:

வெள்ளரிக்காய் - 1 (நறுக்கியது)
காரெட் - 1 (துருவியது)
தக்காளி நறுக்கியது - 2
உப்பு - தேவையான அளவு



எமது வாசகியர்
ராதா சம்பத் குமார், பிரபா,
ஹேமலதா, ராஜேஸ்வரிக்கு
நன்றி...

வறுத்து அரைத்த சீரகப் பொடி - 1 டீஸ்பூன்
சாட் மசாலா - ½ டீஸ்பூன்
கொத்தமல்லி - தேவைக்கேற்ப
எலுமிச்சைச்சாறு - தேவைக்கு.

செய்முறை:

மாவு வகைகளுடன் உப்பு, 2 தேக்கரண்டி எண்ணெய் விட்டு, வெதுவெதுப்பான தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து வைக்கவும்.

நெல்லிக்காய் அளவு (கிண்ணத்தின் அளவிற்கேற்ப) மாவு அடுத்துக் கொண்டு சிறு சிறு பூரிகளாக இட்டுக் கொள்ளவும். ஸ்டீல் கிண்ணத்தின் வெளிபாகத்தில் பூரிகளை சுற்றிலும் ஒட்டி வைக்கவும். எண்ணெய் சூடானவுடன் கிண்ணத்துடன் போடவும். மாவு வெந்தவுடன் ஸ்டீல் கிண்ணங்களை விட்டு வெளியில் வந்து விடும். அனைத்தையும் பொரித்தெடுத்து காற்றுப் புகாத டப்பாவில் வைத்துக் கொள்ளவும்.

பூரணத்திற்கு சொன்ன அனைத்தையும் சேர்த்து, தேவையான அளவு எலுமிச்சை சாறு கலந்து கிண்ணங்களில் நிரப்பி மேலே வேர்க்கடலை பொடி, நறுக்கிய கொத்துமல்லி அலங்கரிக்கவும். சாப்பிடும் நேரம் ஃப்ரெஷ்ஷாகப் பரிமாறவும்.

பூரணத்தில் நிறைய வகைகள் செய்தும் அசத்தலாம். பன்னீர் சீஸ் கலந்து செய்தால் இன்னும் சுவையாக இருக்கும். கிண்ணங்களை செய்து வைத்துக் கொண்டால் திடீரென வரும் விருந்தினர்களுக்கும், பள்ளியில் இருந்து வரும் குழந்தைகளுக்கும் சத்தான, சுவையான, புதுமை நிறைந்த நொறுக்ஸாக இருக்கும்.

- பத்மா கலைமணி,
கொல்கத்தா

மூன்றாம் பரிசு ரூ.200/-

மூலிகை சிப்ஸ்

தேவையான பொருள்கள்:

மைதா மாவு - 200 கிராம்
வெற்றிலை - ஒன்று
துளசி இலை - 25 கிராம்
ஓமம் - 1 ஸ்பூன்
இஞ்சி - 1 சிறிய துண்டு
மிளகு - 6 (எண்ணிக்கையில்)
சுக்குத்தூள் - 1 சிறிய ஸ்பூன்
பூண்டு - இரண்டு பல்
புதினா - சிறிதளவு
கசகசா - 1 ஸ்பூன் (ஊறவைக்கவும்)
முள்ளங்கி - 200 கிராம்
வெண்ணெய் - 1ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
பெருங்காயத்தூள் - சிறிதளவு
சமையல் எண்ணெய் - 200 கிராம்



ஒவ்வொரு நாள் இரவும் ஒரு குடத்தில் தண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வது நல்லது. ஒருவேளை காலையிலேயே மோட்டார் ரிப்பேர் ஆனால் பழுது பார்ப்பவர் வரும் வரை அந்தத் தண்ணீரை உபயோகிக்கலாம்.

– விஜயலக்ஷ்மி வேங்கடேசன்,
கொட்டிவாக்கம்.

தொடர்ந்து மூன்று மணி நேரம் விக்கலால் அவதிப்பட்டேன். திணற திணறத் தண்ணீர் குடித்து சீனி சாப்பிட்டுப் பார்த்தேன். நிற்கவேயில்லை. இரண்டு காதுகளையும் கை விரலால் அடைத்துக் கொண்டு மூச்சை ஒரு நிமிடம் இழுத்துப் பிடித்து, விட்டேன். விக்கல் போயே போச்சு!

- லக்ஷ்மிதேவி அருணாசலம், சீர்காழி.



செய்முறை:

முள்ளங்கியை தோல் சீவி நறுக்கி மிக்ஸியில் அரைத்து வடிக்கட்டி சாறு எடுத்துக் கொள்ளவும். துளசி இலை, ஓமம், வெற்றிலை, ஊறவைத்த கசகசா, இஞ்சி, பூண்டு தோல் உரித்தது, புதினா எல்லாம் சேர்த்து அரைத்து சப்பாத்தி மாவில் சேர்த்து, முள்ளங்கி சாறு விட்டு, 1 டீஸ்பூன் வெண்ணெய் சேர்த்து பெருங்காயத்தூள், சுக்குத்தூள், மிளகுத் தூள் போட்டு தேவையான உப்பு சேர்த்து கெட்டியாக சப்பாத்தி மாவு பதத்தில் பிசையவும்.

சப்பாத்தியாக உருட்டி டைமன் வடிவத்தில் கத்தரிக்கவும். அடுப்பில் வாணலியில் எண்ணெய் விட்டு மிதமானத் தீயில் கத்தரித்த சிப்ஸ்களை சிறிது சிறி தாகப் போட்டு பொறித்து எடுக்கவும். காரம் தேவையில்லை.

இளம் பச்சை நிறத்தில் மூலிகை பொருள்களின் நறுமணமும், காரமும் நிறைந்த மூலிகை சிப்ஸ் மிகவும் நன்றாக இருக்கும்.

- எஸ். பத்மா, சென்னை - 61

ஆறுதல் பரிசு ரூ.100/-

கலவை கலர் லக்கிடி

தேவையான பொருள்கள்:

உயர்ரக சேமியா - ¼ கிலோ

ரவை - 100 கிராம்

மைதா - 150 கிராம்

நெய் - 6 டீஸ்பூன்

எண்ணெய் - பொரிக்க தேவையான அளவு

சமையல் சோடா - சிட்டிகை

சமையல் கலர்கள் (சிவப்பு, மஞ்சள், ரோஸ், பச்சை, ஆரஞ்சு) - கொஞ்சம் கொஞ்சம்

உப்பு - தேவைக்கு

மிளகுத்தூள் - 1 ஸ்பூன்

பால் - 100 மில்லி

செய்முறை:

சேமியா, ரவையைப் பாலில் ஊறவிட வும். பின் மிக்ஸியில் அரைக்கவும். அதில் உப்பு, மிளகுத்தூள், நெய், மைதா இவற் றைப் போட்டுப் பிசையவும். ஐம்பது கிராம் மைதாவைத் தொட்டுக் கொள்ள வைத்துக் கொள்ளவும். மாவை ஆறு பாகமாக பிரிக்கவும். ஐந்து பாகத்தில் ஐந்து கலரைச் சேர்க்கவும். ஒரு பாகத்தை வெள் ளையாகவே விடவும்.

மாவுகளை மெலிதான சப்பாத்தி போல இடவும். கத்தியால் வேண்டிய வடிவில் வெட்டிப் பொரிக்கவும். கலர் கலரான லக்கிடி கரகரப்பாக ஜோராக இருக்கும். மாலை வேளை நொறுக்ஸ் - கலர் ஃபுல் நொறுக்ஸ் - குழந்தைகளைக் கவரும்.

- திருமதி. கமலா, தஞ்சாவூர்.

பிரசுரத்துக்கு...

ஸ்வீட் அண்ட் ஹாட் பிஸ்கட்

தேவையான பொருள்கள்:

சோள மாவு - 2 கப்
வெண்ணெய் - ¼ கப்
சர்க்கரைத்தூள் - 2 மேஜைக் கரண்டி
ஏலத்தூள் - சிறிது,
மிளகுத் தூள் - 2 டீஸ்பூன்,
பெருங்காயத்தூள் - சிறிது,
பொரிக்க எண்ணெய்.

செய்முறை:

சோள மாவை வெண்ணெய், உப்பு சேர்த்து கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். சர்க்கரை ஏலம் பொடித்து ஒரு பக்கமும் மிளகு சீரகம் பொடித்து அதில் பெருங்காயத் தூள் சேர்த்து ஒரு பக்கமும் வைக்கவும்.

பிசைந்த மாவை, சப்பாத்தி மணையில் சற்றே மெல்லியதாக இட்டு கருட்ட வேண்டும். பிறகு ஒரே சீராக சிறு சிறு துண்டுகளாக வெட்ட வேண்டும்.

அடுப்பில் எண்ணெய் காயவைத்து இந்த வளையங்களைப் பொரித்தெடுக்க வேண்டும்.

சர்க்கரைத் தூளில் புரட்டி எடுத்து வைத்தால் ஸ்வீட் பிஸ்கட். மிளகுத் தூளில் புரட்டி வைத்தால் ஹாட் பிஸ்கட். சூடாக இருக்கும் போதே இதை செய்ய வேண்டும். அப்போதுதான் தூள் ஒட்டிக் கொள்ளும்.

குழந்தைகளுக்கு மிளகுக் காரம் பிடிக்காவிட்டால், சிப்ஸுக்கு செய்வது போல் சிறிது காரப் பொடியில் புரட்டலாம். அப்படியே சாப்பிடவும் நன்றாகத்தான் இருக்கும். சோளமாவில் செய்வதால் சத்தானதும் கூட.

பெரியவர் சிறியவர் அனைவரும் விரும்பும் மாலை நேர நொறுக்ஸ் இது.

- சாந்தா ராமசாமி, சென்னை

இம்மாத இல்லத்தரசி


சமையல் கூப்பன்

பொருள் : குருமா

கடைசி தேதி : **20.6.2007**

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


THE CARTOON CRAZE:
Think Before You Watch!
COVER STORY
A Different DRUM
New Serial
Now on the Stands
JUNE 2007
RS.10/-
GOKULAM
THE Magazine for Children



இரைச்சல்

ஹிந்தி மூலம் : மங்களா ராமச்சந்திரன் தமிழாக்கம் : ஜி.ஜி

நாலாபுறமும் மௌனம் நிலவியது.

"உனக்கு இம்மாதிரி சூழ்நிலைதானே விருப்பமாக இருந்தது?" என் மனம் என்னை இடித்துக் கேட்டது.

"ஓ! இதுபோன்ற மௌனச் சூழல்தான் விருப்பமானதாக இருந்ததா?" என்னை நானே கேட்டுக் கொண்டேன்.

போஸ்ட்மேன் கதவிடுக்கு வழியாக ஒரு கடிதத்தை வீசி விட்டுச் சென்றார்.

இளைய மகனின் கடிதம் தான் அது. என் மனம் கெஞ்சியது - 'அவன் விருப்பத்திற்குச் சம்மதம் சொல். ஒரு வேளை இதுவே கடைசி அழைப்பாகக் கூட இருக்கலாம்.'

சரிதான், சில நாட்கள் இளையவனிடமும், சில நாட்கள் மூத்தவனிடமும் இருந்து பார்க்கலாம். அதன் பிறகு சரி என்று தோன்றுவதைப் பார்த்துக் கொள்வோம் என்ற முடிவுக்கு வந்தேன்.

"ஹையா... தாத்தா வந்துட்டாங்க..!"

குழந்தைகளின் இரைச்சல் கேட்டு இளையவன் ஆதித்யா வெளியே வந்தான்.

"வாங்கப்பா..."

அவன் என்னை உள்ளே அழைத்துப் போனான். மருமகள் என் கால் தொட்டு வணங்கி, "இதென்ன மாமா, இவ்வளவு இளைச்சுட்டீங்களே?" என்று குசலம் விசாரித்தாள்.

நான் குழந்தைகளுக்காக இனிப்புகள் தந்தேன்.

குழந்தைகளும், மருமகளும் எனக்கு வேண்டிய வசதிகள் செய்வதில் அன்புடன் முனைந்தனர்.

சில நாட்கள் கழிந்தன.

ஒருநாள் நான் என் அறையில் அமர்ந்து கடந்து போன நாட்கள் குறித்து யோசித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று குழந்தைகளின் இரைச்சலோடு, மருமகளின் கூச்சலும் கேட்டது.

மருமகள் மிகத் தாழ்வான குரலில், சொல்லிக் கொண்டிருந்தாள்.

"இதோ பாருங்க... நீங்க மூணு பேரும் இன்னும் கொஞ்ச நாளைக்கு நல்ல பிள்ளைகளா இருக்கணும்."

"இந்த மாதிரி நல்ல பிள்ளைகளா நடிக்கறதக் காட்டிலும் கெட்ட பிள்ளைகளாவே இருந்துடறோம். எங்களை முன்ன மாதிரி இயல்பா இருக்க விடேம்மா."

"நோ...நோ...! தாத்தாவுக்குக் கூச்சலே பிடிக்காது. அவர் இங்க இருக்கற

வரைக்கும் அமைதியா இருக்க முயற்சி பண்ணுங்க'' என்றவள் தன் குரலை மேலும் தாழ்த்தி, ''உங்க பாட்டி குழந்தைகளை அடக்கறதா நினைச்சுத் தானும் பெரிசாக் கத்தவாளாம். இதுக்காகவே தாத்தா பாட்டியிடம் 'கடுகடு'ன்னு இருப்பாராம்'' என்றாள்.

சொல்லிக் கொண்டே இருந்தவள் எதேச்சையாகத் தலை நிமிறவே என்னைப் பார்த்துத் திகைத்துப் போனாள்.

''போம்மா! டீ.வி. போட்டா சத்தம் வருது. கிரிக்கெட் விளையாடினா ஒரே இரைச்சல் தான். கேரம்போர்ட் மாதிரி உக்காந்து விளையாடற விளையாட்டும் விளையாடக் கூடாதுங்கறே. நாங்க வேற என்னதான் செய்யறது?''

மருமகள் கோபத்தில் குழந்தைகளை நோக்கிக் கையை உயர்த்தியவள், உடனே சமாளித்தாள். ''மாமா, நீங்க உங்க அறைக்குப் போங்க. உங்களுக்கு கார்ன் ஃப்ளேக்ஸ் எடுத்திட்டு வர்றேன்.''

நான் எப்போது என்ன சாப்பிட வேண்டும், என்ன குடிக்க வேண்டும், என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்திருக்



கிறது. சரியான நேரத்தில் எனக்கான பணிவிடைகளைச் செய்து விடுகிறாள். லக்ஷ்மியும் இதே போல்தான் எனக்கு எல்லாம் செய்தாள்.

மருமகள் இப்போது செய்வதைப் பாராட்டும் நான், ஏன் ஒரு நாளேனும் இதை விடக் கடுமையாக உழைத்த என் மனைவி லக்ஷ்மியின் மீது சிறிதளவேனும் அனு தாபமோ, இரக்கமோ கொண்ட தில்லை? ஆமாம், அவள் குழந்தைகளோடு போராடிப் போராடித் தோற்றே கூச்சலிடு வாள். இன்று அவளை நினைத்து மன உளைச்சல் ஏற்படுகிறது.

மூத்த மகள் வீட்டிற்கு ஒரு முறை போனேன். அங்கு மனம் நிலை கொள்ள வில்லை. அங்கிருந்து புறப்படும்போது மகளிடம், ''நீ உன் அம்மாவைப் போலவே இருக்கிறாய். கூச்சல் போடாமல் உன்னால ஒரு வேலை செய்ய முடியலே'' என்று கத்தினேன்.

நான் கூறியதைக் கேட்ட மாப்பிள்ளை சிரித்தபடியே, ''மாமா, எல்லோருமே அமைதியாக, மௌனிகளாக இருந்தா தனித்தீவுகள் போல ஆகிவிடுவோமே. இத்தனை கோலாகலம் வீட்டில் இல்லாம போனால், எனக்கு மூச்சுத் திணற ஆரம்பிச்சுடும்'' என்றார்.

''அதுக்குன்னு இப்படியா? ம குடிக்க, குளிக்க, சாப்பிட, எதுக்கெடுத்தாலும் கூச்சலா? குழந்தைகளுக்கு முறையா எடுத்துச் சொல்லணும்.''

''மாமா, உங்களிடம் ஏன் மறைக்கணும்? நானும் குழந்தையா இருக்கும் போது இப்படித்தான் இருந்தேனாம். நாம் சொல்லாமல் குழந்தைகள் அவங்கவங்க வேலையை ஒழுங்கா செஞ்சிட்டா அவங்க குழந்தைகளே இல்லே.''

இந்த நேரத்தில் குறுக்கே வந்த மகன் சொன்னான் ''அப்பா ,போன தடவை லீவுல என்னாச்சு தெரியுமா? குழந்தைகள் பாட்டி வீட்டுக்குப் போனாங்க. நாங்க ரெண்டு பேரும் ரெண்டு - மூணு நாளை எப்படியோ கழிச்சிட்டோம். அதுக்கு மேல எங்களால இரைச்சல் கேட்காம இருக்க முடியல்லே. கடைசியில் அவங்களைப் பாட்டி வீட்லேருந்து அழைச்சுட்டே வந்துட்டோம்.''

எனக்கு இப்போது புரிகிறது. கூச்சல், கும்மாளம் என்பதே குழந்தைகளின் சிறப்பு அடையாளம். மகள் எனக்காக, என் அமைதிக்காகக் குழந்தைகளை அடக்கி வைக்க மிகுந்த முயற்சி செய்தாள். ஆனால், குழந்தைகள் இயல்புக்கு மாறாக எவ்வளவு காலம் இருக்க முடியும்?

அன்றொரு நாள் லக்ஷ்மி குழந்தைகளு டன் போராடிக் கொண்டிருந்தாள். அவர்கள் மின்விசிறியைப் போட்டுவிட்டு அணைக்க மறந்து ஓட்டி அடித்துக் கொண்டிருந்தார் கள்.

ஒருநாள் வெடித்தே விட்டேன் - ''எப்போது பார்த்தாலும் என்ன ஒரே கூச்சல்? இது வீடா அல்லது சந்தைக் கடையா? இதோ பார் லக்ஷ்மி! ஒன்றுமில் லாததற்கெல்லாம் கூத்தடிப்பதும், காட்டுக் கூச்சல் போடுவதைத் தவிர உனக்கு ஏதாவது தெரிகிறதா? நீயும், உன் குழந்தைகளும் என் வாழ்க்கையையே நரகமாக்கிட்டீங்க'' என்று கத்தினேன்.

''இதுகள் என் குழந்தைகள் மட்டுந் தானா? உங்களுடையது இல்லையா?



ஒரு துண்டு சுக்கு, ஒரு துண்டு லவங்கப் பட்டை எடுத்துத் தூள் செய்து சுண்டைக்காயளவு தேனில் கலந்து சாப்பிட விக்கல் நிற்கும்.

- ஜி. ஜெயஸ்ரீ கோபாலன்,
மேற்கு மாம்பலம்.

பாங்குகளில் நீண்ட காலத்துக்குப் பணத்தை ஃபிக்ஸட் டெபாசிட்டாகப் போடும் முன், இடையில் கடன் பெற முடியுமா என்பதைத் தெரிந்து போடுவது நல்லது. சில பாங்குகளில் (லாக் இன் பிரியடு) கடன் பெற இயலாது என்பதைக் கேட்டால்தான் கூறுவார்கள்.

- எஸ். சீனிவாசன், மதுரை.



இங்க என்ன தப்பா நடந்துடுச்சுன்னு இந்தக் கத்து கத்தறீங்க?'' லக்ஷ்மி வெறி பிடித்தவள் போலப் பேசினாள்.

''வாயை மூடு! நீயே எனக்கு மரியாதை காட்டலேன்னா குழந்தைகள் என்ன மரியாதை காட்டும்? வீடா இது? நரகம்!''

குழந்தைகளை நையப்புடைத்தேன். லக்ஷ்மி குறுக்கே வர அவளுக்கும் அடி விழுந்தது.

அன்றைய தினத்திற்குப் பிறகு எங்களிடையே ''ஊம்... ஆங்...'' என்ற அளவிலேயே பேச்சு நின்று போயிற்று. மரணத் தருவாயிலும் அவளது உதடுகள் இறுக மூடி இருக்க, உயிர்ப் பறவை பறந்து போயிற்று. அதற்குப் பிறகு என் வாழ்விலும் மௌனம்தான்!

வீட்டில் மௌன சாம்ராஜ்யம் கோலோச்சிக் கொண்டிருந்தது. ''தாத்தாவுக்கு இரைச்சலே பிடிக்காது'' என்று பேரன் -பேத்திகள் என்னைப் புகழ்வது போல இகழ்ந்து கொண்டிருந்தனர். என் முதுமைக்கும், கோபத்திற்கும் அஞ்சி செயற்கையான அமைதியை நிலவச் செய்ய எல்லோரும் முயன்று கொண்டிருந்தனர். இந்தப் போர்வையை உருவி எறிந்தால் எனக்கு மறுபிறவி கிடைத்தது போலாகிவிடும். லக்ஷ்மியும் என்னை மன்னித்து விடுவாள். ஆனால் தொடங்குவது எப்படி? அப்போதே எனக்கொரு வாய்ப்புக் கிடைத்தது.

''அம்மா, நீங்க செய்யறது கொஞ்சம் கூட நல்லாயில்லே. பாதி விளையாட்டிலேயே எழுந்துக்கிறீங்க. முழு விளையாட்டையும் கெடுக்கறீங்க.''

''டிபன் செய்யணும்டா; நான் என்ன செய்வேன் சொல்லு.''

''அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாலு பேர்ல ஒருத்தர் விலகினாலும் ஒருவருக்கு ஜோடி ஆட்டக்காரன் இல்லாம போயிடுது. விளையாட்டையே நிறுத்திக்க வேண்டியதுதான்.''

''பாருங்க, அம்மாவை அவள் வேலையைச் செய்ய விடுங்க. அவளுக்குப் பதிலா நான் விளையாடறேன்'' வாய்ப்புக்குக் காத்திருந்த நான் அறையை விட்டு சடாரென்று வெளியே வந்தேன்.

''தா..த்...தா! நீங்க... நீங்க எங்களோட விளையாடுவீங்களா?'' குழந்தைகள் முகத்தில் பெரு வியப்பு.

''ஆமாம், ஆமாம்! நானேதான். நான் உங்களோட விளையாடுவேன். ஊம்... நானும், என் ஜோடிதாரியுமே ஜெயிப்போம்.''

''ஹை...! தாத்தா வாங்க'' ஒரு கை பாப்போம். குழந்தைகள் கூச்சலிட்டன.

சிறிது நேரத்தில் அலுவலகத்திலிருந்து வந்த மகன் வாயடைத்து நின்றான்.

''ஏய்! என்ன இது? ஒரே கூச்சல், கும்மாளம்! என்ன விஷயம்?'' தன் மனைவியை நோக்கிக் கேட்டான்.

''எனக்கொண்ணும் இது கூச்சலாத் தெரியல்லே. குழந்தைகள் விளையாட்டுன்னா இந்தச் சத்தம் கூட இருக்காதா?'' என்றேன் நான். ●

ஆஹா 50!



ரயில்வே ரிசர்வேஷன் படிவத்தில் தற்போது ஒரே ஒரு ரயிலில் இடம் ரிசர்வ் செய்ய வசதி உள்ளது. அதையே ஆப்ஷன் **I**, ஆப்ஷன் **II**, ஆப்ஷன் **IIII** என்று படிவத்தில் இடம் விட்டு விட்டால், நமது அடுத்த விருப்பத்தையும் அதில் எழுதி விடலாம். இதனால் சுலபமாகவும், அதிகப் பேச்சின்றியும் ரிசர்வ் செய்ய வசதியாக இருக்கும்.

- எஸ். சுமதி சுவாமிநாதன், கோயமுத்தூர்.

திருமணமாகாத பெண்கள், அருகிலுள்ள கோவிலுக்குச் சென்று தினமும் கோலம் போட்டால் கூடிய விரைவில் நல்ல கணவரை அடைவார்கள்.

- ஆர். பார்வதி, அம்பத்தூர்.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

பிரமாதமாக விளம்பரப்படுத்தப்படும் 'மாஜிக்' திரவங்களுக்கு எல்லாம் மசியாத டாய்லெட்டில் காணப்படும் கறைகள், உப்புத்தாள் கொண்டு தேய்த்தால் மாயமாய் மறைந்துவிடும். மொசைக், மார்பிள் தரைகளில் படிந்த கறை, அழுக்குகளையும் அதிக சொரசொரப்பில்லாத உப்புத்தாள் கொண்டு சுலபமாக நீக்கலாம்.

- மீரா ராமகிருஷ்ணன், பெங்களூர்-82.

வெளியூர் பயணம் செய்யும் பொழுது குடிக்கும் தண்ணீரில் சிறிது பச்சைக் கற்பூரம் கலந்து குடித்தால் வயிறு சம்பந்தமான உபத்திரவம் வராது. ஹோமியோபதி டாக்டர் ஒருவர் கூறியது.

- புஷ்பா நரசிம்மன், மேடவாக்கம்.

நல்ல கணவரை அடைய...

வேப்பம் பூவை இலேசாகத் தணலில் வாட்டியெடுத்துப் பொறுக்கக் கூடிய சூட்டுடன் உச்சந்தலையில் தேய்த்து வந்தால் கூந்தல் செழித்து வளரும்.

- பா. கருணா, வையூர்.

தினமும் சுவாமிப் படங்கள் எதிரே இரண்டு முக தீபம் ஏற்றி, 'ஸ்வாகதம் ஸ்வாகதம் ஸ்வாகதம் லக்ஷ்மி' எனச் சொல்லிவர, வீட்டில் ஐஸ்வர்யம் பெருகும்.

- கீதா சுப்ரமணியன், மடிப்பாக்கம்.

நினைவெல்லாம் நீ!



உனக்கும் எனக்குமான தூரம்...
இரு கண்களின் இடைவெளி
வரையில்தான்!

உறங்கும் பொழுதும் விழித்திருக்கும்
என் கண்களில் நான்
காண்பதெல்லாம்
உன்னைப் பற்றிய நினைவுகள்தான்!

உனக்கும் எனக்குமான தூரம்...
இரு கைவிரல் இடைவெளி
வரையில்தான்!
கண்ணீர் கன்னத்தைக் கடக்கும் முன்
கரம் நீட்டித் துடைப்பதும் உன்
விரல்தான்!

உனக்கும் எனக்குமான தூரம்...
இரு இதழ்களின் இடைவெளி
வரையில்தான்!

கோபத்தை அடக்கும் என்
மௌனத்திலும்
சோகத்தை மறைக்கும் என்
புன்னகையிலும்...
இணைந்திருப்பது உன் இதழ்தான்!

நீ வேறு நான் வேறு நம் குடும்பம்
வெவ்வேறென
வேரோடு பிரித்து விட்டாய் திருமணம்
எனும் பெயரில்!
இருப்பினும் மனத்தாலும்
நினைவாலும்
நாம் புரியவேயில்லையே...
இதன் பெயர்தான் தாய்-மகள்
உறவென்பதோ?

ரம்யா ஷான்

என்னோட இத்தனை வருஷ பல் மருத்துவத்துல நான் தெரிஞ்சுகிட்ட உண்மை இது! யாருக்காவது முன் பக்க பல் விழுந்துடிச்சுன்னா, அவங்க எழுபது வயசுக்காரங்களா இருந்தா கூட உடனே பல் கட்டிக்க வந்துடுவாங்க... அதுவே கடைவாய்ப் பல்லா இருந்தா, இளம் வயசுப் பெண்கள் கூட கண்டுக்கவே மாட்டாங்க. பல் விழுந்த இடம்தான் வெளிப்படையா தெரியறதில்லையே! அதனால அக்கறை காட்ட மாட்டாங்க! ஆனா இது தவறான அணுகுமுறை!

ஞானப் பல் (விஸ்டம் டூத்) என்கிற மூன்றாவது கடைவாய்ப் பல்லைத் தவிர வேறு எந்தப் பல் விழுந்தாலும் அதை உடனே பொருத்திக் கொண்டு விட வேண்டும். இட்ஸ் எ க்ரைம் டு லூஸ் தி டூத்!

இப்படி வலியுறுத்துவதன் காரணம் என்ன?

நாம் சாப்பிடும்போது, ஜீரண வேலையானது வாய்ப் பகுதியிலேயே தொடங்கி விடுகிறது. பற்களால், முக்கியமாக கடைவாய்ப் பற்களால் நன்கு மெல்லப்பட்டு, உமிழ்நீருடன் அது கலக்கும் போதுதான் ஜீரணத்தின் முதல் கட்டம் முழுமையடைந்ததாகவே அர்த்தம். தவிர, விழுந்த பல்லுக்கு நேரெதிராக உள்ள பல், தனக்கு எதிர் வரிசையில் ஜோடிப் பல் இல்லாததால், அரைக்கும் வேலை கிடைக்காமல், டம்மிப் பல் ஆகிவிடும்.

நம் உடலில் எந்தப் பகுதியுமே நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தாமல் இருந்தால், அது சுருங்கி, நீங்கி விட வாய்ப்புண்டு. எனவே தேவையே இல்லாமல் ஜோடிப்



படம் : ஆண்டனி ஸ்ரீதர்

'பல்'லாண்டு வாழ்க!

டாக்டர் **என்.வி. ஆறுமுகம்**



பல்லையும் இழக்க நேரிடும்.

இது தவிர, இன்னொரு முக்கியக் காரணமும் உண்டு. பல் விழுந்த பகுதிக்கு அடுத்ததாக உள்ள பல், மெல்ல ஓட்டையின் பக்கமாகச் சாயத் தொடங்கும். பற்களிடையே, மிக மெளனமாக நடைபெற்று வரும் இந்த மாற்றங்களை நிறைய பேர் உணர்வதில்லை. எனவே, எந்த ஒரு பல் விழுந்தாலும் உடனடியாக மாற்று பல் பொருத்திக் கொள்வதுதான் சிறந்தது.

முன்பெல்லாம் ஒரு பல் விழுந்து விட்டால், 'பிரிட்ஜிங்' முறையைப் பயன்படுத்துவோம். அதாவது, இரு பக்கமும் உள்ள பற்களின் ஆதரவில், நடுவில் பொருத்தப்பட்ட பல் நிற்கும். இதற்காக, அருகில் உள்ள இரண்டு ஆரோக்கியமான பற்களின் மீது சிறிய 'Cap' ஒன்றைப் பொருத்த வேண்டி வந்தது.

ஆனால் இப்போது பலவிதமான நவீன சிகிச்சை முறைகள் வந்து விட்டன. அதிலும் 'இம்ப்ளான்ட்' வகை ரொம்பவே நூதனம்!

விழுந்த பல்லின் வேர்ப் பகுதியில் டைட்டானியத்தால் ஆன ஸ்க்ரு ஒன்றைப் பொருத்தி விடுவோம். அந்த ஸ்க்ரு, தாடை எலும்புடன் நன்கு இணைந்ததும், அதன் மீது புதிய பல்லைப் பொருத்தி விடுவோம். இதற்கு 'இம்ப்ளான்ட் டென்சர்' என்று பெயர். இந்த முறையில் மொத்த பற்களையும் கட்டணும் என்றால் அதற்கும் வழி உள்ளது.

இதற்காக தாடை எலும்பில் போதிய அகலம் இருக்கிறதா என்பதை எக்ஸ்-ரே எடுத்துப் பார்ப்போம். அப்படியிருந்தால்தான் டைட்டானியம் ஸ்க்ருவை அதில் பதிக்க முடியும். தாடை எலும்பு போதிய அகலத்தில் இல்லை என்றால், அங்கு வேறு எலும்பைப் பொருத்தி (இதை போன்-கிராஃப்டிங் என்போம்) பிறகு ஸ்க்ருவைப் பொருத்த வேண்டும். அதிதீவிர, நீரிழிவு நோய்க்காரர்களுக்கு சர்க்கரை அளவைக் கட்டுக்குள் கொண்டு வந்து, அதன் பிறகு இச் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

பழைய முறையில் பல் செட் கட்டும் போது, ''லூஸாக இருக்கிறது; கழன்று விடுகிறது!'' என்றெல்லாம் புகார்கள் வரும். ஆனால் அந்தப் பிரச்னைகள் எதுவும் இம்ப்ளான்ட் டென்சரில் கிடையாது. ஒவ்வொரு பல்லும், உறுதியாக, இயற்கையாக, அதனதன் இடத்தில் நிரந்தரமாகப் பதிந்துவிடும்.

ஆனால் இந்த முறையில் முழு பல் செட்டையும் பொருத்த கிட்டத்தட்ட ஒன்றரை லட்ச ரூபாய் செலவு ஆகும்! ஸ்க்ரு இந்த மருத்துவ முறை பழைய பல் செட்டைப் போலவே, கழற்றி, கழுவிப் போட வேண்டியதுதான்! ஆனால் கழன்று வராமல் கச்சிதமாகப் பொருந்தி விடும். பற்களை செய்ய நவீன அக்ரிலிக் மெட்டீரியல் பயன்படுத்தப்படுகிறது. அளவெடுக்கும் முறையும் புதுசு. வலியே இல்லாமல் பொருத்தி விடலாம். ஃபிட்டிங்கும் மிக அழகாக, இயற்கைப் பல் போலவே இருக்கும்.

மிக மிக முக்கியமான பாயின்ட்....



தந்திரமும்!

ஆபீஸ் முடிந்து வீட்டினுள்ளே நுழைந்தாள் ரம்பா. முன்னறையில் அப்பாவுடன் தன் வருங்கால மாமனார் பேசியது கேட்டது.

''காலம் முழுக்க ஒண்ணா வாழப் போறாங்க. இரண்டு பேரும் மீட் பண்ணி ஒருத்தரைப் பத்தி ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டா பிரச்னை வராது பாருங்க. அதான் என்னிக்கு ரம்பா ஃப்ரீ ஆக இருப்பான்னு கேட்டுப் போக வந்தேன்.'' ரமேஷை சந்திக்கப் போகும் நாளைப் பற்றிய கற்பனையில் மிதக்கத் தொடங்கும் போது அவள் காதில் விழுந்தது அந்தக் கடைசி வார்த்தைகள்.

''ஆமா சார்! மாமியாரும் மருமகளும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிட்டு சண்டை சச்சரவுனு இல்லாம இருந்தா நானும், ரமேஷும் நிம்மதியா இருக்கலாம் பாருங்க!''

– எஸ். ராஜி ரவிசங்கர், தஞ்சாவூர்.

போட்ட பிறகு, பற்களைப் பொருத்திக் கொள்ள சில வாரங்கள் காத்திருக்க வேண்டும். இது எல்லோருக்கும் சாத்திய மாகாது என்பதால், நவீனமான இன்னொரு முறை அண்மைக் காலமாகப் பிரபலமாகி விட்டது.

பி.பி.எஸ். (Bio Functional Prosthetic System) என்றொரு நவீன முறை, அருமையானத் தீர்வைத் தந்திருக்கிறது. ஸ்விட்சர்லாந்தில் அறிமுகமான சிகிச்சை செலவு, இம்ப்ளான்டை விட குறைவு!

எனவே.. எந்தப் பல் விழுந்தாலும் 'போனால் போகட்டும் போடா!' என்று இராமல், மாற்றுப் பல்லைப் பொருத்திக் கொண்டு, நன்றாக மென்று, தின்று, புன்னகைத்து வாழுங்க!

- **ஜி.எஸ்.எஸ்.**

(அடுத்த இதழில் : உடல் பருமன் ஏன்?)

ஸ்ரீ வெங்கடாஜலபதி துணை

ஜெய் ஹோட்டல்ஸ் & டிராவல்ஸ் பிரைவேட் லிமிடெட்

முதல் மாடி, சாரதா, 36, சிருங்கேரி மடசாலை, (சாரதாம்பாள் கோவில் அருகில்)
100 அடி ரோடு, எல்லப்பிள்ளை சாவடி, பாண்டிச்சேரி - 605 005.
போன்: 0413-2201552, செல்: 94432-52652 E-mails: jhat@sify.com & jhat@sancharnet.in

ஸ்ரீ வைஷ்ணவ திவ்ய தேச யாத்திரை

19-07-07 : தமிழக, கேரள திவ்ய தேசங்கள் 95 மற்றும் பல ஸ்தலங்கள். டீலக்ஸ் வேனில் 11 நாட்கள் ரூ. 6,350/-. சென்னை to சென்னை ரூ.300/- கூடுதல். (சைவ உணவு, இருவர் தனியறை)

15-09-07 : 105 திவ்ய தேசங்கள் (துவாரகை நீங்கலாக) ஆக்ரா, டெல்லி, கேதார், கோரக்பூர், காட்மாண்டு, பசுபதிநாத், போக்ரா மற்றும் பல ஸ்தலங்கள். ரயில் (SL), புஷ்பேக் பஸ், மஸ்தா வேனில் 31 நாட்கள் ரூ.16,500/-. முக்திநாத் ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 8,500/- தனி. சென்னை to சென்னை ரூ 300/- கூடுதல் (சைவ உணவு, இருவர் தனியறை)

02-10-07 : தமிழக, கேரள, ஆந்திர (திருப்பதி, அஹோபிலம் - நவ நரசிம்மர்) திவ்ய தேசங்கள் 97 மற்றும் பல முக்கிய ஸ்தலங்கள் டீலக்ஸ் வேனில் 13 நாட்கள். ரூ. 7,560/- சென்னை to சென்னை ரூ 300/- கூடுதல்

21-07-07 / 06-10-07 சோழநாட்டு ஸ்தலங்கள் 40 டீலக்ஸ் வேனில் 4 நாட்கள். ரூ.2200/- இத்துடன் பாண்டிய நாடு 18, மலைநாடு 13, குருவாயூர், சுசீந்திரம் பார்த்துவர மொத்தம் 9 நாட்கள் ரூ.5,200/- சென்னை to சென்னை ரூ 300/- கூடுதல்

24-07-07 / 09-10-07 பாண்டிய நாடு 18, மலைநாடு 13 டீலக்ஸ் வேனில், 6 நாட்கள். ரூ.3,300/- சென்னை to சென்னை ரூ 300/- கூடுதல்

கர்நாடக சுற்றுலா

12-08-07 : மங்களூர், கட்டில் துர்கா, உடுப்பி, கொல்லூர் மூகாம்பிகை, முருடேஷ்வர், கோகர்ணா, ஹம்பி, நவ பிருந்தாவன், ஜோக்பால்ஸ், சிருங்கேரி, ஹொரநாடு, பேலூர், ஹலபேடு, தர்மஸ்தலா, சுப்ரமண்யா, பாகமண்டலா தலைக்காவேரி, ரயில் (SL) /புஷ்பேக் பஸ்ஸில் 8 நாட்கள். சென்னை, கோயம்புத்தூர், பெங்களூர், மும்பை, மதுரை (மற்றும் பல இடங்கள்) to மங்களூர் & Back ரயில் (SL). கட்டணம் தனி. மங்களூர் to மங்களூர் புஷ்பேக் பஸ்ஸில் 6 நாட்கள் சுற்றுலா ரூ.3,150/- (சைவ உணவு, இருவர் தனியறை)

வடமாநில யாத்திரைகள்

13-09-07 : ஹரித்வார், ரிஷிகேஷ், கங்கோத்ரி, யமுனோத்ரி, பத்ரி, கேதார், ஜோஷிமட், திருப்பிரிதி, தேவப்ரயாகை (கண்டமென்னும் கடிநகர்) 14 நாட்கள் ரூ.6,500/- இதில் கங்கோத்ரி, யமுனோத்ரி தவிர மற்ற ஸ்தலங்களுடன் ஆக்ரா, மதுரா, டெல்லி, பிருந்தாவன், கோகுலம், கோவர்த்தனகிரி பார்த்துவர 12 நாட்கள் ரூ. 5,500/-. இத்துடன் அயோத்யா நைமிசாரண்யம் பார்த்துவர ரூ. 750/- கூடுதல். இத்துடன் கோரக்பூர், காட்மாண்டு, பசுபதிநாத், போக்ரா, முக்திநாத் (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ. 8,500/- தனி) கண்டகிநதி பார்த்துவர கூடுதல் 6 நாட்கள் ரூ. 2,750/- கூடுதல். இத்துடன் காசி, சாரநாத், கயா, புத்தகயா, அலகாபாத் பார்த்துவர கூடுதல் 5 நாட்கள் ரூ. 2,000/- கூடுதல்.

21-09-07 : அயோத்யா, நைமிசாரண்யம், கோரக்பூர், காட்மாண்டு, பசுபதிநாத், போக்ரா, முக்திநாத் (ஹெலிகாப்டர் கட்டணம் ரூ.8,500/- தனி) கண்டகி நதி பார்த்துவர 12 நாட்கள் ரூ. 6,000/- இதில் அயோத்யா, நைமிசாரண்யம் தவிர மற்றவை பார்த்து வர 10 நாட்கள் ரூ.5,000/- புற. தேதி 23-09-07 இத்துடன் காசி, சாரநாத், கயா, புத்தகயா, அலகாபாத் பார்த்துவர கூடுதல் 5 நாட்கள் ரூ 2,000/- கூடுதல்.

29-09-07 : காசி, சாரநாத், கயா, புத்தகயா, அலகாபாத் பார்த்துவர 9 நாட்கள் ரூ 3,600/-.

வடமாநில யாத்திரைகளில் ரயில் (SL), புஷ்பேக் பஸ், மொத்த தங்குமிடம், பிராமணாள் உணவு கட்டணத்தில் அடங்கும். புறப்படும் இடங்கள் சென்னை, மதுரை, கோயம்பத்தூர், பெங்களூர், விஜயவாடா, ஹைதராபாத் மற்றும் வழியில் தவிர முதியோர்சலுகை ரூ.300/- மேலும் ஏ/சி ரயில் இருவர் தனியறை கூடுதல் கட்டணத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

வடமாநில யாத்திரைகளுக்கு 90 (அ) 60 நாட்களுக்கு முன்பும் பிற யாத்திரைகளுக்கு 60 (அ) 30 நாட்களுக்கு முன்பும் முன்பணம் செலுத்துவோருக்கு முறையே 10 (அ) 5% கட்டண சலுகை தரப்படும்.

விட்டுச் செல்வீர்...



அடுத்த விடியலைக் காண இல்லாமல்,
சொடுக்கும் நொடிக்குள் காணாமல்
போகும் நல்ல ஆத்மாக்களே!
நீங்கள் விட்டுச் சென்றது
தங்கமென்றால்,
தலைதெறிக்க ஓடிவந்து
தட்டிச் செல்வோம்.
வெள்ளியென்றால்
வெறிநாயெனப்
பாய்ந்து வந்து
வெட்டிக் கொள்வோம்.
கற்றைப் பணமென்றால்,
அஸ்தி கரையுமுன் அள்ளிச் செல்வோம்.
மாறாக -
நீங்கள் விட்டுச் சென்றது
சிரித்த முகமென்றால்
சீந்த ஆள் இருக்காது
பரந்த மனமென்றால்,
பங்குபோட படை வராது
அழியும் சொத்துக்களைச்
சாத்தான் கூடத் தருவான்.
தந்த வேகத்திலேயே,
திருப்பியும் எடுப்பான்
அவற்றை, நாம்
மாண்டால் விட்டுச் செல்லலாம்
மீண்டால், மீட்டுக் கொள்ளலாம்
ஆனால் உம் போல,
நல்ல ஆத்மா தேடி,
ஆண்டவன் ஆசியுடன் அளித்த,
நற்குணங்களை, இனி எடுக்கும்
ஜென்மங்களுக்காக எடுத்துச்
செல்வீர் உம்மோடு
அவற்றை -
விட்டுப் பறக்காதீர்,
விண்ணிலே
அவை வீணாய்ப் போகும்
மண்ணிலே.

கோமதி நடராஜன்

ஹை கரடி!

சென்ற வருடம் அமெரிக்காவில் உள்ள நியூஜெர்ஸிக்கு நான் போன சமயம் கோடைக் காலமாக இருந்தது. சீதோஷ்ண நிலை இதமாகவும் ஊர் மிக சுத்தமாகவும் இருந்தது. ஊரின் அழகை நான் ரசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் கரடிகளும் நியூஜெர்ஸிக்கு விசா இல்லாமல் விஸிட் அடிக்க ஆரம்பித்தன.

நம் இந்தியாவில் பூஜை வேளையில் கரடி என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோம். ஆனால் நியூஜெர்ஸியில் கோடைக்காலத்தில் எல்லா வேளைகளிலும் கரடி வர ஆரம்பித்து விடுமாம். அருகில் உள்ள மலைகளில் வாழும் சாமர்த்தியம் உள்ள கரடிகள் அசட்டுக் கரடிகளை, குடும்பத்துடன் விரட்டி விடுமாம். அசட்டுக் கரடிகள் நியூஜெர்ஸி நகரம் முழுக்க உணவைத் தேடி உலாவருகின்றன. இதுதான் கரடி விஜய ரகசியம்.

தினமும் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் கரடிகளின் வருகை தலைப்புச் செய்திகளாகிட எங்கேயும் கரடி பற்றிய பரபரப்புப் பேச்சுகள் தான்!

கரடியைப் பார்த்தவுடன் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று அந்த ஏரியா முனிசிபல் அலுவலகம் முதல் பத்திரிகை கள் வரை பல ஐடியாக்களை வெளி யிட்டன.

1. கரடியைப் பார்த்தவுடன் ஓடக் கூடாது.

2. அது நம்மை



உற்றுப் பார்த்தால் நம்மை ஒன்றும் செய்யாது என்று அர்த்தம்.

3. அது நம்மைப் பார்த்துப் பல்லைக் காட்டினால் 'ஓடி விடு' என்று சொல்வதாக அர்த்தம்.

4. அது தன் காலைத் தரையில் தட்டினால் நம்மைத் தாக்க தயாராகிறது என்று அர்த்தம். உடனே 'ஜூட்' விட வேண்டியதுதான்.

தெருவில் வாக்கிங் செய்யும் கரடியின் ஃபோட்டோ, மறுநாள் வீட்டின் பின்புறத்தில் உள்ள பைன், மரங்களில் தூங்கும் கரடியின் ஃபோட்டோ என பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு கரடி போட்டோக்களை விதவித போஸ்களில் வெளியிட்டன.

ஒருநாள் ஓர் அமெரிக்கப் பெண்மணி, மாடியில் தன் அறையில் இருந்தாள். கீழே ஏதோ சத்தம் கேட்டு இறங்கி வந்து பார்த்தவளுக்கு ஷாக். சமையலறையில் கரடி ஒன்று, அங்கிருக்கும் பிரட், கேக் வகைகளைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. சமையலறை ஜன்னல் திறந்திருந்ததால் ஹாய்யாக உள்ளே வந்திருக்கிறது. (அங்கேல்லாம் ஜன்னலுக்கு கிரில் கிடையாது).

கரடியைப் பார்த்து மிரண்டு போய் தன் அறைக்குச் சென்று கதவைத் தாழ் போட்டுக் கொண்டு போலீசுக்கு ஃபோன் செய்திருக்கிறாள். போலீஸ் வந்து பார்த்த போது சமையலறையில் கரடி இல்லை. பின்புறம் தோட்டத்துக்குச் சென்று பார்த்தபோது அம்மா கரடி, மரத்தின் மீதுள்ள மூன்று குட்டிக் கரடிகளுக்கு கேக், பிரட் வகைகளை சப்ளை செய்து கொண்டிருக்கிறது. என்னே தாய்ப் பாசம்!

அங்கெல்லாம் கரடியைச் சுட்டுக் கொல்லக் கூடாது. ஆதலால் நம் ஊரில் எலியைப் பிடித்து அடுத்தத் தெருவில் விடுவது போல் ஒரு ஏரியாவில் கரடியைப் பிடித்து அடுத்த ஏரியாவில் விட்டு விடுகிறார்கள்!

மேலும் ஆறு மாதம் குளிர்காலங்களில் கரடிகள் உறங்குவதாலும் எங்கும் பனிப் பொழிவு இருப்பதாலும் அவை கோடைக் காலத்தில் உணவைச் சேமிக்க அலைகின்றன என்று கரடியை பற்றி பிஎச்.டி. பண்ணுமளவுக்குச் செய்திகள் பத்திரிகைகளில் வெளியாயின.

கரடிகளுக்கு ஒரு மைல் தூரத்திலிருந்தே வாசனை நுகரும் சக்தி இருப்பதால் வளர்ப்புப் பிராணிகளுக்குத் தோட்டத்தில் உணவு வைக்காதீர்கள். குப்பைத் தொட்டியை இரவு நேரத்தில் வெளியே வைக்காதீர்கள் என்று பத்திரிகைகள் அட்வைஸ் செய்தவண்ணம் இருந்தன.

ஆனால் நான் இருந்த 6 மாதத்தில் கரடியின் நேரடி தரிசனம் எனக்குக் கிடைக்கவேயில்லை. ஒருவேளை கரடியைப் பார்க்க நேர்ந்திருந்தால் நானும் ஒரு வி.ஐ.பி. ஆகி மீடியாவில் பேட்டி கொடுத்திருப்பேன். அப்படி ஏதும் நிகழாமல் ஒரு சாதாரண மனுஷியாக இந்தியா வந்து சேர்ந்தேன்.

- ஆர். ராஜேஸ்வரி,
வளசரவாக்கம்.



மருதாணியை அரைத்துக் கற்பூரம் தேய்த்துக் குழைத்துத் தடவினால் கால் ஆணி குணமாகும்.
- இரா. கமலவதி, திருச்சி.

ஜெயஸ்ரீ ராஜ்
சிறுகதைப்

வாசகியரே...
உங்கள் படைப்புத் திறனை
நிரூபிக்க
மீண்டும் ஒரு வாய்ப்பு!

முதல் பரிசு - ரூ. 10,000
இரண்டாம் பரிசு - ரூ. 7,000
மூன்றாம் பரிசு - ரூ. 5,000

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 1000 சன்மானம் பெறும்.

மும்பை ஜெயஸ்ரீ ராஜ், கல்கி, மங்கையர் மலர் வாசகியருக்கு நன்கு அறிமுகமானவர். நல்ல எழுத்தாளர். சிறந்த பேட்டியாளர். மறைந்த ஜெயஸ்ரீயின் நினைவாக அவரது கணவர் திரு. ராஜ், மங்கையர் மலர் வாசகியருக்கு சென்ற வருடம் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தி பரிசுகளை அளித்தார்.

நீங்கள் தந்த பேராதரவைக் கண்டு உற்சாகமடைந்த திரு. ராஜ், இந்த வருடமும், ஒரு சிறுகதைப் போட்டியை நமது மங்கையர் மலர் வாசகியருக்காக நடத்த முன்வந்திருக்கிறார். நல்லதொரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்க!

பரிசு பெறுபவர் அறிமுக எழுத்தாளராகவோ, கல்லூரி மாணவியாகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

கதைகள் வந்து சேர வேண்டி

நினைவுச்
போட்டி - 2007



விதிமுறைகள் :

★ பெண்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். முழு முகவரி, புகைப்படம் தேவை.

★ மங்கையர் மலரில் **4** பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.

★ சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.

★ அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை யென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.

★ கல்லூரி மாணவி எனில் மாணவர் அடையாள அட்டையின் நகல் இணைக்கவும்.

★ முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

★ ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

★ போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக் கூடாது.

★ பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

★ முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.

★ தேர்வாகாத கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

★ முதல் பரிசுக் கதை செப்டெம்பர் இதழில் வெளியாகும்.

'ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007'

என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், மங்கையர் மலர், கல்கி பில்டிங்ஸ்,
47 NP ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

கடைசித் தேதி : ஜூலை 15

✿ வளையல்கள் 2.1 சைஸிலிருந்து 2.8 வரை கிடைக்கும்.

✿ வளையல் அளவிற்குத் தகுந்தாற்போல் அதில் பதிக்கும் முத்தின் அளவும் வேறுபடும். நான் இங்கே காட்டியிருப்பது 2.6 அளவு. தேவையான பொருள்கள் அனைத்தும் பிரபல ஃபேன்ஸி ஸ்டோர்களில் கிடைக்கின்றன).







தேவையான பொருள்கள் :

✿ வளையல் பேஸ்

✿ நல் முத்து 34

✿ ஜேட் 34

✿ மெல்லிய ஊசி

✿ வளை சுட்டுவதற்கு பிரத்தியேகமான நூல்

செய்முறை :

இந்த வளையலின் மேற்புறம், இரண்டு பக்கவாட்டிலும் ஓட்டை இருப்பதை படத்தில் காணலாம். முதலில் வளையல் பேஸிலிருந்து கீழ்ப்புறமாக ஊசி நூல் முனையைக் கொண்டுவர வேண்டும். இப்பொழுது

ஊசியில் ஒரு முத்து கோத்து அதே ஓட்டை வழியாகக் கீழே கொண்டு வந்து மறுபடியும் பக்கவாட்டு ஓட்டையில் கொண்டு சென்று ஒரு ஜேட் கோக்க வேண்டும்.

நூலை நன்றாக இறுக்கிக் கொள்ளவும். பிடியைத் தளர்த்தாமலேயே இப்பொழுது இடதுபக்கவாட்டு ஓட்டையில் நுழைக்க வேண்டும். அங்கும் ஒரு 'ஜேட்' கோத்து மேல் ஓட்டையில் கொண்டு செல்ல வேண்டும். இப்பொழுது நடுவே ஒரு முத்தும் இரண்டு பக்கவாட்டிலும் முத்துக்கள் நன்றாக அந்த ஓட்டையில் அமர்ந்திருக்கின்றனவா என்று சரிபார்த்துக் கொள்ளவும். இப்படி எல்லா ஓட்டைகளிலும் முத்து, ஜேட் என்று கோத்து, கடைசியில், கீழ்ப்பக்கமாய் முடிச்சு போட்டு நூலை 'கட்' செய்ய வேண்டும்.

ஒரே ஒரு வளையலைச் செய்யக் கற்றுக் கொண்டு விட்டால், உங்கள் கற்பனைவளத்துக் கேற்ப பவழம், நீலம், பச்சை மணிகள் கொண்டு விதவிதமான வளையல்களைச் செய்து

ங்களூர் வளையல் செய்வோமா?





இரண்டு ஜேட்களும் இருப்பதைக் காணலாம். ஒவ்வொரு முறையும் மணியைக் கோத்து ஊசியைக் கீழே வாங்கும் போது பிடி இறுகி இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.



• ஆனந்தி ராஜன்

அசத்தலாம் விதவிதமான காம்பினேஷனில்.

– ஆனந்தி ராஜன்,
பெங்களூர்.

மாடல் : சௌஜன்யா
படங்கள் : ஸ்ரீஹரி



குழந்தைகளுக்கு இல்லம்தான் அவர்களுடைய உலகமே! தவழ ஆரம்பித்ததிலிருந்து ஸ்கூல் போகும் வரை, வீட்டில் ஓர் இண்டு இடுக்கை விடாமல் தோண்டித் துளைத்து ஆராய்வார்கள். இதனால், வீட்டில் குழந்தைகளுக்கு சிறு விபத்துகள் நேரிடும் அபாயம் நிறையவே உண்டு. தனியாளாய் இருந்து குழந்தையை வளர்க்கும் இளந்தாய்மார்கள் ரொம்பவே திணறிப் போவார்கள்.

உங்கள் வீட்டை பாதுகாப்பாக மாற்ற இதோ சில யோசனைகள்

உங்க இல்லம்

★ மருந்து, மாத்திரைகளை குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில், மூடிய அலமாரிகளில் வைக்கவும்.

★ எல்லா ப்ளக் பாய்ண்டுகளிலும், சேஃப்டி கவர்களைப் போட்டு மூடி வைக்கவும்.

★ குண்டூசி, ஊசி, கத்தி, தீப்பெட்டி, லைட்டர், கத்திரி, சேஃப்டி பின் போன்ற பொருட்களை, குழந்தையின் கண்ணில் படாமல் பூட்டி வையுங்கள்.

★ உங்கள் குழந்தை சற்றே உயரமான இடத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் போது, தலை போகிற அவசரமாய் இருந்தாலும், தனியே விட்டுச் செல்லாதீர்கள்.

★ எல்லா எலெக்ட்ரிக் வயர்களும் பழுதில்லாமல் நல்ல நிலையில் உள்ளனவா என்று அடிக்கடி பரிசோதித்துக் கொள்ளவும்.

★ ஸ்பிரே பாட்டில்கள், ஏரோசோல் கேன்கள் போன்றவற்றை குழந்தையின் விளையாட்டுப் பொருளாக்கி விடாதீர்கள். ஸ்பிரேயை அழுத்தி விளையாடும் போது, கண் பாதிப்பு, மூச்சுக் குழாய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு.




கொடுக்கும் பொம்மைகள், தரமான பிளாஸ்டிக்கில் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

★ வீட்டில் தரையில் கிடக்கும் சின்னச் சின்ன பொருட்கள்தான் நம் குழந்தையின் முதல் எதிரிகள். அவை அவர்களின் கண்ணுக்குத்தான் நன்றாகத் தெரிந்து, நிமிடத்தில் வாய்க்குள் போய் விடும். எனவே, தரையை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

- உ. சுல்தானா, கீழக்கரை.

★ சமையலறை (அ) குளியலறையில் உங்கள் வாண்டை விளையாட அனுமதிக்காதீர்கள்.

பாதுகாப்பானதா?



★ வீட்டில் செல்லப் பிராணி இருந்தால், உங்கள் புஜ்ஜியுடன் அதிக நேரம் விளையாட இடம் கொடுக்காதீர்கள். அதன் முடி ஒத்துக் கொள்ளாமல் அலர்ஜி ஏற்படலாம்.

★ படிக்கட்டுகளில் தனியே ஏற விடாமல், கதவு போட்டு பூட்டி வைக்கவும்.

★ சூடான அயர்ன்பாக்ஸ், கொசுவர்த்தி, சாம்பிராணி போன்றவற்றை மறந்தும் குழந்தை அருகில் வைக்காதீர்கள்.

★ உங்கள் குட்டி விளையாடும் இடத்தில் பிளாஸ்டிக் பைகளைப் போடாதீர்கள். குழந்தை தன் தலையில் மாட்டிக் கொண்டால், மூச்சுத் திணறல் உண்டாகும் அபாயமுண்டு.

★ குழந்தைகளிடம் விளையாடக்



"லத்தே... விநாய்கர் இருக்கா?"

சில வருடங்களுக்கு முன்னால் ரூர்கேலாவில் குடியிருந்தேன். புறநகரில் க்வாட்டர்ஸ். அருகே பெரிய கடை, சூப்பர் மார்க்கெட்டெல்லாம் கிடையாது. அதனால் அக்கம் பக்கத்தில் நட்புடன் உதவிக் கொள்வோம். காப்பிப் பொடி, டீத்தூள், சர்க்கரை, ரவை... என திடீரென தீர்ந்து விட்டால் நேரே தோழியின் வீட்டுக் கிச்சனுக்குப் போய் தாங்களாகவே எடுத்துக் கொள்ளும் அளவுக்குச் சுதந்திரம். சமயங்களில் தயாராக இருக்கும் தோசை, இட்லி, பூரியையே கூட 'அலேக்' என தூக்கிக் கொண்டு ஓடும் கலாட்டாக்களும் உண்டு.

என் வீட்டுக்குக் கீழே மிஸஸ் நாயர் இருந்தார். அவருக்கு மொழிப் பிரச்னை. மலையாளத்தில்தான் 'சம்சாரிப்பார்'.

ஒரு நாள் என்னிடம், 'லத்தே.. விநாய்கர் இருக்கா?' என்றார். எனக்கோ அதிர்ச்சி... காபி, டீ, சர்க்கரை போய் இப்போது விநாயகரையே ஓசி கேட்கும் அளவுக்குப் போயிடுச்சே... என நான் விழித்துக் கொண்டிருக்க, 'பூவாம்... பிக்கிள் செய்யாம்' என பரபரத்தார்.

கொழுக்கட்டை, பாயசம், ஸ்வீட் என விநாயகருக்குப் படையல் கேள்விப்பட்டிருக்கிறோம். பிக்கிள் கூட நைவேத்தியமா? ஒருவேளை கேரளாவில் இருக்குமோ? என நான் குழம்பினேன்.

என்னிடம் பிள்ளையார் கலெக்ஷன்ஸ் உண்டு. எந்தப் பிள்ளையாரை தருவது என நான் பார்த்துக் கொண்டிருக்க, அவரோ கிச்சனிலிருந்து 'வினிகர்' பாட்டிலை எடுத்துக் கொண்டு தலைதெறிக்க ஓடினார்.

'அடக் கடவுளே, வினிகரைத்தான் விநாய்கர் என்றாரா?' 'கடகட' என நான் சிரித்தேன்.

மிஸஸ் நாயருக்கு மாத்திரம் 'விநாய்கருக்கு' போய் எதுக்கு இப்படிச் சிரிக்கறா என புரியவேயில்லை!

- எல்லெஸ்,
பெங்களூர்.




பல நிறங்கள் இருக்கும் புடைவைக்கு, இரண்டு நிறத்தில் ப்ளவுஸ் எடுத்தால் ரவிக்கைகள் நீண்டு உழைக்கும். மாறி மாறியும் அணியலாம்.
- பி. ஜானகி, பாளையங்கோட்டை.

கர்நாடகத்தின் கோலார் தங்கவயல் அருகில் கோடிலிங்கேஸ்வரர் ஆலயம் என்ற புனிதத்தலம் உள்ளது. பக்தர்கள் பலரும் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதாகப் பிரார்த்தனையுடனேயே வருகிறார்கள். பெரிய திறந்த வெளியில் ஒரு கோடி லிங்கங்கள் வரை அமைக்கும் திட்டத்துடன் அன்பர்கள் செயல்படுகிறார்கள். ஏற்கெனவே ஏராளமானவை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இங்கு 63 அடி உயர நந்தி 108 அடி உயர சிவலிங்கத்தை நோக்கி அமர்ந்திருக்கும் கோலத்தைப் படத்தில் காணலாம்.



- எஸ். சரோஜினி,
பெங்களூர் - 72.
நன்றி : 'ஹிந்து'



புதுக்கோட்டை மாவட்டம், திருப்பெருந்துறை ஆத்மநாத சுவாமி திருக்கோவிலில் உச்சி கால பூஜையின் போது கீரை கண்டல், வடை, தேன் குழல், புட்டு, அதிரசம், பாசிப் பருப்பு, பாயசம், புழுங்கலரிசி சாதம் போன்றவை நைவேத்தியங்களாகப் படைக்கப்படுகின்றன.

அர்த்தசாம பூஜையின் போது சுவாமி முன் புள்ள படைகல்லில்

"ஆவி உனக்கு; அன்னம் எனக்கு!"

சுடச்சுட அன்னத்தைக் கொட்டி, பாகற்காய் வற்றல் குழம்பையும் ஊற்றி, "ஆவி உனக்கு; அன்னம் எனக்கு!" என்று சொல்லி படைப்பார்கள்.

- எஸ். பி. பாலு, திருச்சி - 14.

மங்களூருக்கு அருகில் 'ஸ்ரீ சுப்ரமண்யர்' என்ற திருத்தலம் இருக்கிறது. இங்கு நடக்கும் ரதோச்ஸவ தேர்களை இழுப்பதற்கு வளையும் ஒரு வகை பிரம்பை உபயோகிக்கிறார்கள். தேர் நிலைக்கு வந்ததும் பிரம்பைத் துண்டங்களாக வெட்டி, பக்தர்கள் பிரசாதமாக எடுத்துக் கொள்கிறார்கள். எப்படிப்பட்ட விஷக் கடியாக இருந்தாலும், இந்தப் பிரம்பைத் தேய்த்து உடலில் தடவினால் நோய் தீரும் என்பது நம்பிக்கை.

- ஜி. ஞானாம்பாள், ஜெய்ஹிந்த்புரம்.

மே 2007ல் வெளியான ஆன்மிகப் போட்டி - 5க்கான விடைகள் :

விடை :
1. கிளி, 2. ஆதிசங்கரர், 3. முயலகன், 4. கரடி, 5. பிரம்மன்,
6. பௌர்ணமி, 7. மகாபலி, 8. ஹயக்ரீவர்.

ஸ்மார்ட் க்ரியேஷன்ஸ் வழங்கும் ரூ. 500/- மதிப்புள்ள
பொருள்களைப் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. டி. வசுமதி, வேலூர், 2. ஆர். ஜெயலக்ஷ்மி, மதுரை, 3. எம். திவ்யாலக்ஷ்மி, பெங்களூர், 4. உஷா ஸ்வாமிநாதன், திருச்சி, 5.எஸ். சில்வனை, கன்னியாகுமரி மாவட்டம், 6.வேதா வரதன், ஹைதராபாத், 7.ஏ.பி. கிருஷ்ணசாமி, புதுச்சேரி, 8.ஜெ. ஸ்ரீவித்யா, சென்னை - 26, 9. உத்திரா நாகராஜன், சேலையூர், 10. பார்வதி வெங்கட்ராமன், மதுரை, 11. கி. மீனாட்சி, சென்னை - 78, 12. ஆர். பிரதிபா, பெங்களூர், 13. வி. கலா, பெங்களூர், 14. கே. வித்யா, சேலம்-1, 15.ஹரிணி செல்வன், நெட்டப்பாக்கம் வழி, 16.எம். ஆர். அருணா நாகராஜ், கிருஷ்ணகிரி, 17. க. கனகரத்தினம், திருவண்ணாமலை, 18. செ. பவானி, காஞ்சிபுரம் மாவட்டம், 19. கே.பி. ஜெயந்தி, மதுரை - 1, 20.கே. முத்துலட்சுமி, மேற்கு மாம்பலம்.

வெற்றி பெற்ற வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்! கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.



வந்து குவிந்த கூப்பன்களிலிருந்து இருபது நபர்களைக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தனர் 'கல்கி' நிறுவன விளம்பரத் துறையைச் சேர்ந்த சந்திரசேகர், சக்திவேல்.

ரூ.10,000 பரிசு

ஆன்மிகப் போட்டி - 5

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!

Travel around the world.

Fly in the finest airlines. Stay over in the finest hotels.

Oh! And get very well paid for doing all this.



God certainly has been partial to other profession.

It's not just a job, but a lifestyle, a profession fastoned with grandeur, class, and of course, a hefty paycheck. At New Tech, we train you to become the finest. An hostess, so that you can easily lead up a job in one of the finest domestic and International Airlines. Our training is the best and stands out with a district advantage of hands-on in-flight experience on real airliners.

New Tech also is a leading institute in providing training courses for Flight Stewards/Fine Star Hotel & MNC / BPO / Travel & Tourises.

- **Computer software courses**
- **Make-over courses**
- **Beauty Courses**

✓ Government Certificate ✓ Placement Assistance

- Cabin Crew Training
- Ground Service Training
- Building English
- Foreign Language
- Personality Development
- Hospitality Module
- Travel & Tourism
- On job Training
- Practical Orientation in Aviation
- Computer Reservation System
- Swimming
- In Flight Training
- Beauty Courses Training



CLASSY CAREER.
ENVIABLE EARNINGS.

NEW TECH

International Academy

Only Institute Recognised by Govt. of India
Pioneer Academy in Service Industry

56, 'A' Block, Thirumalai Pillai Road, T.Nagar, Chennai - 600 017.

Cell: 98400 34672, Tel: +91-44-42630077/88, Fax: +91-44-42630088, E-mail: infor@nutecacademy.com

Hostel Facility Available



கேன்ஸர்
நோயா ?
கவலைப்பட வேண்டியதில்லை.
Dr. K. Sri Sridar
INTRA PROSTATE CYST
(NON-MALIGNANT)
BEFORE TREATMENT
Transrectal Scan Report
Date: 08.08.06
3.96 sq.cm
After 68 days
AFTER TREATMENT
Transrectal Scan Report
Date: 22.11.06
0.24 sq.cm
CA.PANCREAS
CT Scan
23mm×23mm
CT Scan
Scan Liver Normal
LIVER NORMAL STUDY
CT Scan
Date: 01.12.06
CA. BREAST TO LUNGS
Before Treatment
NODULAR OPACITIES SEEN IN BOTH LUNG FIELDS METASTATIC DEPOSITS
Chest X-ray
Herbal Oncology
NORMAL
Chest X-ray
X-ray
GLIOMA
Glioma
MRI SCAN
CA. BREAST TO LUNG, BONES
X-ray Chest
CA.RECTUM WITH LIVER METS
CEA 6390
After 43 Days
CEA 129
CEA TUMOUR MARKER TEST
கை விடப்பட்ட கேன்ஸரா ? கவலை வேண்டாம்
GBM, CA. Oesophagus, Lung, Liver, Cervix, Bone, Prostate, Rectum, Ependymoma, Astro cytoma, Glioma, AML, CML
Herbal Oncology™
Herbal Oncology™
Royale Apartment, 6, Mannar Reddy Street,
(Opp. Street to T.Nagar Bus Terminus)
T.Nagar, (Next to Krishnaveni Theatre),
Chennai - 600 017.
Weekdays : 10.00 am to 5.30 pm, Sunday Holiday
Clinic: Ph: 044-24339596, 24363935
Cell: 99400 58909
NO
METALS
MERCURY
STEROID
POISON
PURE HERBS BRINGS MIRACLE
Gurubalaa™
Clinic
Speciality Clinic For Herbal Oncology and Asthma. Treatment given by Qualified & Experienced Doctors.


Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN/CC(S)DN/170/06-08 - Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/06-08 - Registered as a Newspaper in Sri lanka

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்


புத்தகம் - 2 ஜீன் 2007

திருமண மலர்



பாரதியின் அட்வைஸ்!





'புதுமைப் பெண்' படைத்த மகா கவிஞர் பாரதி, தமது உறவுப் பெண்ணான யதுகிரி புக்ககம் புறப்பட்டபோது எடுத்துரைத்த அருமையான மொழிகள்.

"புக்ககத்தில் தைரியமாக இரு. ஒட்டுக் கேட்காதே. பிறர் கடிதங்களை உடைத்துப் பார்க்காதே. பெரியோர் சொல்படி, உன்னால் முடிந்த அளவு செயல்படு. முடியாததை எடுத்துச் சொல்லி விடு. மறைக்காதே. உன்னை விலைகொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றாக விளங்க வைத்து விருத்தி செய்யப் போகிறாய். அந்த வீட்டில் உனக்குப் பூரண உரிமை உண்டு. அதற்காக பணம், காசு விஷயங்களில் தலையிடாதே. அதை பெரியவர்களுக்கு விட்டு விடு. வேலை செய்ய பின்வாங்காதே. சக்தி மீறி வேலை செய்யாதே!"

- பி. ஸ்ரீராம்,
மும்பை - 71.

படம் : ஸ்ரீஹரி

முன்காலத்தில் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு தான் திருமணம் செய்து கொள்ளும் நாளை முடிவு செய்தனர். குறிப்பிட்ட வளர்பிறை நாளில் தேனும் தினை மாவும் சாப்பிட்டுத் திருமணம் செய்து கொண்டதால், 'தேனிலவு' ஆகிவிட்டது!

- எ. அகிலா, கழுகுமலை.



வேண்டியதை தரும் வேர் விநாயகர்!



பாரதத்தின் பண்பாட்டை கட்டிக் காக்கும் ஸநாதந தர்மத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் தங்கள் காரியங்களை, கடமைகளை, செய்யத் துவங்கும் முன், விநாயகரை வணங்காமல், அவருக்குப் பூஜை செய்யாமல், துவங்குவது இல்லை. முழு முதற்கடவுளான கணநாதனின் கருணை இருந்தால்தான் காரியங்களைத் தடையின்றி செய்ய முடியும் என்பது அனுபவபூர்வமான உண்மை.

எளிய கிராமத்து மக்களும் பிள்ளையாரை ஆற்றங்கரையோரங்களிலும், அரச மரத்தடியிலும் பிரதிஷ்டை செய்து வழிபடுகிறார்கள். அதனால்தான் 'அரசமரத்தடி பிள்ளையார்' என்ற சொல் வழக்கு மிகவும் பிரபலமானது.

அரசமரத்துக்கும் பிள்ளையாருக்கும் அப்படி என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்று கேட்பவர்களுக்கு சென்னையின் சாலிக்கிராமத்தில் உள்ள பால விநாயகர் கோவிலில் பதில் கிடைக்கிறது.

சாலிக்கிராமத்தின் பரணி காலனியிலுள்ளது ஸ்ரீ பாலவிநாயகர் கோவில். சிறிய கோவில், சின்ன ராஜகோபுரம், சின்னச் சின்ன சந்நிதிகள். அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கோவிலுக்குள்ளே உள்ள அரசமரம், பெரிதாக வளர்ந்து, பல கிளைகளுடன், படர்ந்து விரிந்து கோவிலுக்கு நிழற்குடை பிடிக்கிறது.

பரணி காலனியிலுள்ள பக்தர்களின் வழிபாட்டிற்காக, 1983ல் அமைக்கப்பட்ட பாலவிநாயகர் கோவிலில், அந்த சாயங்காலப் பொழுதில், வேத பண்டிதர் ஒருவர் அமர்ந்து, ''கணாநாம.... த்வா கணபதிம் ஹவாமஹே'' என்கிற கணபதி மந்திரத்துடன் வேதபாராயணம் செய்ய ஆரம்பிக்க, அந்த வேதநாதம் மனதில் தெம்பையும், அமைதியையும் அளிக்

கின்றது.

கோயிலில் நுழைந்தவுடன், நம் கண்ணில் படுவது வள்ளி தெய்வானை ஸமேத ஸ்ரீ சுப்ரமண்யர் சன்னிதி. இங்கு பீடத்தின் கீழ்ப்பகுதியில், நவக்ரஹ யந்திரங்கள் பிரதிஷ்டை செய்திருப்ப தால் இங்கு நவக்ரஹ சன்னிதி கிடை யாது. இதை அடுத்து, ஸ்ரீ பால விநாயகர் சன்னிதி. அதற்குள் அருகம்புல் மாலையை அணிந்து கொண்டு, அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கிறார் பால விநாயகர். அதற்குப் பக்கத்தில் பக்த ஆஞ்சநேயர் சன்னிதி.

இந்த சன்னிதிகளுக்கு நேர் எதிரே, சன்னிதிகளில் உள்ள மூர்த்திகளை தரிசித் துக் கொண்டும், வரும் பக்தர்களை பார்த் துக் கொண்டும், தமக்கே உரித்தான முட்டி போட்டுக் கொண்டு அமர்ந்த திருக்கோலத்தில் ஆசிர்வதிக்கிறார் காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ பரமாச்சாரியர். மிகவும் தத்ரூபமாக அந்த உருவச் சிலையை ஃபைபர் கிளாஸில் வடித்திருக்கிறார், ஸ்ரீ கணேச ஐயர் என்கிற கலைஞர். மகா ஸ்வாமிகள் அணிந்து கொண்டிருக்கும் மூக்குக் கண்ணாடிக்குள் இருந்து, பார்க் கும் திட்சண்யமான பார்வை நம் உள் ளத்தை ஊடுருவிச் செல்கிறது.

